BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 04 Issue - 77 17 Friday August 2007 விற்பனைக்கல்ல

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான **Tax Advice,** வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை **Accountancy Services**களுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

JISION
TRAVEL & TOURS
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிரமாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

EuroDebt
08001218193
07949455366
24 மணி நேர இலவச அழைப்பு
கடனில் இருந்து விடுபட ஒரு வழி தேவையா?
வீடு உரிமையாளரோ அல்லது வாடகைக்கு வசிப்பவரோ எவராயினும்
எம்முடன் தொடர்பு கொள்ளவும். உங்கள் கடனில் இருந்து நீங்கள் பின் இலவச ஆலோசனைகளும், அறிவுரைகளும் எம்மால் வழங்கப்படுகின்றன.

சுவையான உணவுக்கு ஒரே இடம்..
Ceylon Nights
Sri Lankan, South Indian Food
Tandoori Cuisine
Free Home Delivery (With in 3 miles radius for orders over £15 (6pm - 11pm)
Tel: 020 8848 8893
128 Uxbridge Road, Hayes, Middlesex UB4 0JH

ABBEY TRAINING. NET
- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் அவசியமான Personal Licence எடுத்து தருவோம் அத்துடன்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளருடன் நடத்துகிறோம்.

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 /07956 913 164 / 07960 665 575

RAJA& CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

SPICE
INDIAN SOUTH INDIAN RESTAURANT
எட்மன்ட் பகுதியில் உங்கள் நாவிற்குச் சுவையான உணவைத் தரச் சித்திருக்கும் உணவகம்.
வண்டியில் எந்தப் பகுதியிலும் உங்கள் விருப்பம் எதுவாயினும் தாமதமும் நிறைந்த சுவையுடனும் உணவு வகைகள் செய்து கொடுக்கப்படும்.
Chennai Spice
Free delivery & service available with food warmer.
For Booking & Party Order Please Call 020 8805 9944

Mortgagelink
The National Mortgage Network
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident – Not your fault
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட...
- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel:020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

Key to Success
Wishing to buy a business? Or Selling your business?
We can also arrange business finance for freehold & leasehold purchases or Re-Mortgages upto 85% loan to values.
We specialise in Commercial Sales
Business urgently required selling in confidence, strictly no sale no fee & no upfront charges.
Tel: 020 8942 3215 / Mob: 07957 594 881
Fax: 020 8542 1234

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Specialist in
Residential Mortgages

100%

Commercial Mortgages
Leasehold + Freehold

Looking to Invest in Sri Lanka

"Good Time to Buy"
New + Old Properties | Finance arranged

ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

Properties and Financial Services Ltd.

74 Lee High Road, Lewisham SE13 5PT
Tel: **020 8852 1683** / Fax: **020 8852 1621**
Email:info@angelsproperties.co.uk / Web: www.angelsproperties.co.uk

NOTHING IS IMPOSSIBLE
BELIEVING IS EVERYTHING

SAI DIVINE ARTS LTD.

World renowned Indian Keralite Astrologer

Indian Vedic Astrology (Horoscope)

Palmistry

Foot Reading

Face Reading

Numerology

Gemology

Signology

Indian Feng Shui (Vasthu)

Kerala Divine Astrology

Kerala Kavadi Prashanam
Upasana Pooja, Homams

Vasthu Pooja, Navagraha Pooja

Special Kerala Manthric

Prayers & Meditation, Yanthrams
Rudraksha Therapy, Divine Herbal Bath

For further information or to book a consultation, please contact:

SAI DIVINE ARTS LTD.

2A, Burges Road, (Near East Ham Tube Station) East Ham, London E6 2BH, United Kingdom
Phone: (0208) 586 2225 / 07767 240243 / 07841 860967
Email: guru@keralapriest.com • saidivinearts@btconnect.com
www.saidivinearts.co.uk • www.saijothisha.com • www.indianguruin.com



Sales | Lettings | Mortgages | Insurance | Commercial Loans

- ❑ House Mortgages upto 95%
- ❑ Commercial Loan upto 90%
- ❑ Insurance 100% cash back guarantee

விடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்து வித வீட்டுக்கடன் வசதிகளக்கும் உடனே நாடுங்கள்....

www.matrixproperties.co.uk

மிச்சம் பகுதியில் தமிழரால் நடாத்தப்படும் நிறுவனம்

MATRIX
PROPERTIES SERVICES LTD

159, London Road, Mitcham, Surrey, CR4 2JB.
Tel: 020 8687 1700 / 020 8687 1001| Mob: 07958527830
Fax: 020 8687 1441 | Email: Contact@matrixproperties.co.uk

புலம்பல்

குறை நினைக்காதேங்கோ

சொல்லுறன் எண்டு குறை நினைக் காதேங்கோ. பக்கங்கள் கூடி இருக் குதே தவிர பேப்பரின்ரை தரம் கூடின மாதிரித் தெரியேல்லை.

சினிமாவுக்குத் தனியாப் பக்கங் களை ஒதுக்கிப் போட்டு மற்றப் பக்கங்களிலையும் சினிமாக் கட்டு ரையாப் போடுறியள்.

ஆக்கங்களிலை அரைவாசி இந்தியத் தமிழிலை வருகுது. ஆரம்பத்திலை இருந்த மாதிரி தாயக மணம் வீசுற மாதிரி ஒரு பேப்பர் வர வேணும் எண்டது தான் எங்கடை அவா.

— கனகு

லைலா ஓ லைலா

இந்த ஸ்காப்பல் லைலா சும்மா அறுக்கிறா என்று பார்த்தால். சில புல்லுருவியளை அறுக்கத் தொடங் கியிருக்கிறா.

கொழும்பிலை ஒட்டுப்படையளாலை கடத்தப்படுகிற ஆக்களை விடுவிக் கிறதுக்காக இங்கை காசு வேண் டிற முகவர்களை இனங் காட்டத் தொடங்கியிருக்கிறா.

சோமோஸ் (அரச உதவிப்பணம்) இல் அவ இருந்தாலும் தன்ர வேலையை நல்லாச் செய்யிறா. நன்றி லைலா.

— திவாகரன்

சாட்டையடி

புலத்தில் வாழ்பவர்களின் உழைப் பைச் சுரண்டி சுகபோக வாழ்வு வாழும் சில தலைநகரத் தமிழர்க ளுக்கு சாட்டையடியாக அமைந்தி ருந்தது சினேகிதி எழுதிய அன்புள்ள அம்மா அப்பா என்ற கட்டுரை.

இது போன்ற சமூகப் பிரச்சினைகள் சார்ந்த கட்டுரைகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுக்கவும்

— ஜனனி

காதில பூ

வர வர ஒரு பேப்பர் ரிலை வாற விளம்பரங்கள் எல்லாம் காதிலை பூச்சுத்திற மாதிரி இருக்கு.

உங்களுக்கென்ன விளம்பரத்துக்கு விளம்பரதாரரே பொறுப்பு எண்டு தப்பி விடுவீர்கள். நாங்கள்தான் முட்டாளுகள் மாதிரி இதுகளை வாசிக்கோணும்.

— நவம்

பாவம் சும்மா விடாது

உயிர்களிடத்து அன்பு வேணும் என்று பாரதியார் பாடினார். நீங்கள் என்னடாவென்றால் கோயில் காளை யைக் கொல்ல வேண்டும் என்று எழுதுகிறீர்கள். உயிரையே கொல் லக் கூடாது. அதுவும் கோயில் உயிர் என்றால் எவ்வளவு பெறுமதி வாய்ந்தது. அந்த உயிரைக் கொல்லு றதை சரியென்று எழுதுறீங்கள்.

ஒரு பேப்பர் ரைத் தொடர்ந்து பாக்கி றன். இந்து மதத்தை தாக்குவதே உங்கள் கொள்கையாக இருக்கிறது. இயலுமென்றால் இஸ்லாம் மதத்தை தாக்கி எழுதுங்கள் பார்க்கலாம். சவால் விடுகிறேன்.

— ஞானி

மறந்துவிட்டீர்களே

செஞ்சோலைப் படுகொலையின் ஓராண்டுப் பூர்த்தியை மற்றவர் களைப் போல் நீங்களும் மறந்து விட்டீர்களே.

தாய் மண் மீதான பற்றுடன் செயற் படும் நீங்கள் ஒரு ஆக்கமாவது போட்டிருப்பீர்கள் என்று பத்திரிகை முழுவதையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தது தான் மிச்சம்.

ஒரு பேப்பர் நீயுமா? என்று கேட்க வேண்டும் போலிருந்தது.

— சித்ரா

சபாஸ்

மத நம்பிக்கை என்ற பெயரில் மூட நம்பிக்கைகளுக்கு முட்டுக் குடுப்ப வர்களை தோலுரித்த சேயோனுக்கு சபாஸ்

ஒரு நாட்டில் வாழுகின்ற போது அந்த நாட்டுச் சட்ட திட்டங்களை அநுச ரித்துப் போவது தானே முறை.

அதை விட்டு விட்டு எங்களுடைய மாடு கடவுள். அதற்குவருத்தம்வராது என்று அடம் பிடிப்பது எந்த வகையில் நியாயம் என்று புரியவில்லை

— ரவி

ஒரு பேப்பர் காரரின் மறுபெயர் காய்ந்து போனவர்களா?

காதலர்கள் நெருக்கத்துக்காய் ஒரே இளநீரை குடிச்சா அது கஞ்சத்த னமா? ஏனய்யா இப்பிடி காய்ந்து போயிருக்கிறியள்.

அவன் அவன் இப்படி எப்ப சான்ஸ் கிடைக்கும் எண்டு அலையிறான். கொஞ்சம் ரொமான்ஸ் பற்றி தெரிஞ்சு கொள்ளுங்கோ.

— சுரேந்திரன்

ஒப்புதல் வாக்குமூலம்

இரவி அருணாசலம் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் எண்டு பில்டப் குடுக்கிறார். யாரையோ தாக்கும் எண்ணத்தில் அவர் எழுதக்கூடும்.

அவரை பற்றி மற்றாக்கள் வாக்கு மூலம் கொடுக்க வெளிக்கிட்டால் என்ன ஆகும்.

எல்லாம் நாறிப் போயிடும். தயவு செய்து தனி நபர் மீதான தாக்கு தல்களுக்கு இடங் கொடுக்காதீர்கள். இவை நல்லதுக்கில்லை. சொல்லிப் போட்டன்.

— மீனா

மன்றாட்டம்

ஒரு பேப்பர் ருக்கு உரிய படமா இது? ஒரு இளநீரைக் காதலர் குடிக்கின்ற னர். உந்தப்படம் தேவைதானா? அதுக்கு ஒரு வாக்கியம். காதலுக்கு மறுபெயர் கஞ்சத்தனம்.

எழுதிப் போட்டுச் சிரிச்சிருப் பிங்களாக்கும். எங்களுக்கு எரிச்சல் தான் வந்தது. மன்றாட்டமாகக் கேக்கிறன். தயவுசெய்து நல்ல படத்தைப் போட்டு நல்ல வசனமா எழுதுங்கோ.

— ராதா

உற்சாகம்

ஒரு பேப்பர் ரின் மழலைகள் பகுதி எம் இளஞ் சிறுவர்களின் எழுத்தார் வத்தை ஊக்கப்படுத்தி வருகிறது.

புலத்தில் வெளிவரும் பத்திரிகை களில் சிறுவர்களின் இவ்வளவு ஆக்கங்களைத் தாங்கி வருவது ஒரு பேப்பர் ஆகத் தானிருக்கும்.

இது போல சிறுவர்களுக்கான சித்திரக் கதைத் தொடர் ஒன்றையும் ஆரம்பித்தால் சிறுவர்கள் மேலும் ஆர்வமாக ஒரு பேப்பர் ஐ வாசிப்பார்களல் லவா. என்னுடைய ஆலோசனை யையும் கருத்தில் எடுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

— சரிகா

களைப்பு

ஒரு பேப்பர் வாசித்து வாசித்து மிகவும் களைத்துப் போனேன். ஒரு பேப்பர் ரின் தமிழைப் புரிந்து கொள்வதற்கு புதிதாகத் தமிழ் படிக்க வேண்டும் போல இருக்கிறது.

ஒரு பேப்பர் ருடன் உங்களுக்குரிய தமிழ் அகராதியையும் சேர்த்துத் தந்தால் தான் வாசிச்சு விளங்கலாம் போல இருக்குது.

— சுதன்

வணிகக் குரல்

மாதத்தின் முதலாம் வெள்ளி வெளிவரும் ஒரு பேப்பர் ருடன் வணி கக் குரல் என்ற 8 பக்கங்களைக் கொண்ட இணைப்பொன்று அடுத்த இதழிலிருந்து சேர்க்கப் பட இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பகுதியில் பிரசுரிப்பதற் கேற்ற வணிக சம்பந்தமான ஆக்கங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

-ஆசிரியர்

லா சப்பலில் லைலா

எல்லாருக்கும் வணக்கம்,

நட்டகல்லை தெய்வமென்று நாலு புஸ்பஞ்சாத்தியே
சுற்றி வந்து மொணெமொணென்று சொல்லு மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
கூட்ட சட்டி தட்டுவம் கறிச் சுவையறியுமோ

இது எனக்கு பிடிச்ச சிவ வாக்கியார் எண்டிற சித்தரின்ரை பாடல்.

உள்ளத்திலை இருக்கிற கடவுளைத் தேடி ஊர் ஊரா கோயில் கோயிலா போய் கல்லிலை கடவுளை தேடிக் கொண்டிருக்கினம் எங்கடை சனம்.

இப்பிடி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பல விசயத்தை ஏன் எதுக்கு செய்யிறம் எண்டு கூட தெரியாமல் ஏதோ எல்லாரும் செய்யினம் எண்டு தாங்களும் செய்யினம். கேட்டா முன்னோர் செய்ததாம் சம்பிரதாயமாம்.

சரி சம்பிரதாயம் எண்டு செய்யுங்கோ அதுக்கான அர்த்தத்தை இல்லாட்டி காரணத்தையாவது தெரிஞ்சு கொண்டு செய்யிறியளா எண்டால் அதுவும் இல்லை. என்ன லைலாக்கு மறை கழண்டு போச்சுதெண்டு யோசிக்கிறீங்களா?

உண்மைதான். ஏனெண்டால் உந்த ஆடி அமாவாசையண்டு லாசப்பலிலை நிண்ட என்னட்டை தெரிஞ்ச ஊர்க்காரர் ஒருதர் ஓடியந்து தமிழ் கடையிலை காத்தோட்டிக்காய் வந்திருக்காம் எந்த கடையிலை வாங்கலாம் எண்டார்.

அது ஊரிலை யாருக்கும் தகப்பன் இறந்தால் மகன்மார் இறந்த தகப்பனின் ஆத்மா சாந்தியடைய பிதிர்க்கடன் நிறைவேற்றி படையலிலை அந்த காத்தோட்டி காயையும் சேத்து சமைச்சு படைச்சு எங்கையாவது கடலிலையோ ஆத்திலையோ குளத்திலையோ போடுறது சம்பிதாயம். நீயேன் இஞ்சை அதை தேடுறாயெண்டு நான் கேட்டன்.

அவர் சொன்னார் தன்ரை தகப்பன் கொஞ்ச காலத்துக்கு முதல் ஊரிலை இறந்திட்டாராம் அவருக்கு படைக்கவாம் எண்டார்.

அடபாவமே எப்ப அப்பா இறந்தவர் எண்டதுக்கு அவர் சொன்னார். அது ஒரு வருசமாச்சாம் ஆனால் ஒருதருக்கும் சொல்லேல்லையாம் காரணம் ஏதோ பிரச்சனையிலை கன காலமா தகப்பனோடை கதைக்கிறதில்லையாம் என்று விட்டு காத்தோட்டி காயை தேடி போய் கொண்டிருந்தார்.

இவரை மாதிரித்தான் கனபேர் தாய் தகப்பன் உயிரோடை இருக் கேக்கை ஒழுங்கா சாப்பாட்டுக்கு காசு அனுப்ப மாட்டினம் ஆனால் அவை இறந்தா பிறகு படத்தை பிறேம்போட்டு வைச்சிட்டு படைக்க காத்தோட்டி காய் தேடி திரிவினம்.

அடுத்த விசயம் உந்த காய் ஊரிலை இருந்து இறக்கின கடைக்காரருக்கு நல்ல வியாபாரமாம். ஒரு காய் இரண்டு யுரோ வித்தவையாம். அப்ப தான் ஒரு கடை காரரிட்டை கேட்டன் அண்ணை சாப்பிட முதல் எங்கடையாக்கள் காகத்துக்கு சோறு வைக்கிறதும் ஒரு சம்பிரதாயம் அப்ப அடுத்த ஆடி அமாவாசைக்கு காகத்தையும் சேத்து இறக்கலாமே நல்ல வியாபாரமாகவும் இருக்குமெண்டன்.

சரி உந்த அய்யருக்கும் ஆடி அமாவாசைக்கும் சம்பந்தமிருக்கு ஆனால் காத்தோட்டிகாய்க்கும் ஆடி அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் அதை ஏன் படைக்கிறவை எண்டுஅதை வாங்கினவை எல்லாரிட்டையும் கேட்டு பாத்தன் ஒருதருக்கும் தெரியாதாம்.

சாத்திரம் சம்பிரதாயம் பாக்கிறவையிட்டையும் கேட்டன் அவையும் தலையை சொறிஞ்சினம்.

கடைசியா ஒண்டு ஆவணி இரண்டாந் திகதி பரிஸ் மாணிக்க பிள்ளையார் தேர் அன்று அன்னதானம் எண்டு கேள்விப்பட்டு உவை ஒரு பேப்பர் மற்றது ஒரு றேடியோ காரங்கள் காரிகள் வருகினமாம்.

- அன்புடன் லைலா

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, AUGUST 17, 2007, ISSUE 77

மறைக்க முடியாத மனித அவலம்

வள்ளிபுனத்தில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தின் மீது சிறிலங்காப் படையினர் விமானத் தாக்குதல்களை நடாத்தி ஐம்பத்து மூன்று தமிழ் மாணவிகளை படுகொலை செய்த சம்பவம் நடைபெற்று ஓராண்டு ஆகிறது. இந்த ஒரு வருட காலத்தில் இரண்டாயிரத்துக்கு அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இன்றும் நாள் தவறாது இந்த மனித அவலம் தொடர்ந்த வண்ணமிருக்கின்றது. சிறிலங்காவின் சட்ட திட்டங்களுக்கு புறம்பாக நடைபெறும் கொலைகள், ஆட்கடத்தல்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளின் பாத்திரவாளிகளாக சிறிலங்கா படைகளும் அவை சார்ந்த ஒட்டுக் குழுக்களும் இருக்கின்றன.

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை பயங்கரவாத வன்முறை அல்லது சட்ட விரோதமான ஆயுதக்குழுக்களுக்கு இடையிலான மோதல்களின் வெளிப்பாடாகவே ஆதிக்க வல்லரசுகளும் அவை சார்ந்த ஊடங்களும் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்விடயத்தில் புள்ளி விபரங்களை வெளியிடும் அமைப்புக்கள் கூட அங்கு வெளிப்படும் அரச பயங்கரவாதத்தை அடையாளங்காட்டுவதில்லை. இந்நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்கள் விடயத்திலும் சிறிலங்கா அரசு புரியும் மனிதவுரிமை மீறல்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. 'உள்நாட்டு பயங்கரவாதத்தை' எதிர்கொள்ளும் நாடு என்ற அனுதாபமும் சேர்ந்து விடுகிறது. ஒருவகையில் இலங்கைத் தீவில் தொடரும் மனித அவலத்துக்கு இந்நாடுகளும் பொறுப்பாளிகளாக இருக்கின்றன என்றே கூறவேண்டும்.

இருப்பினும் சிறிலங்கா அரசின் மனிதவுரிமை மீறல்கள் பற்றிய உண்மை நிலை தற்போது வெளிப்படத் தொடங்கியுள்ளது. அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஜோன் ஹோல்ம்ஸ் அவர்களும், மூதூரில் கொல்லப்பட்ட Action Farm எனும் பிரஞ்சு உதவி நிறுவன ஊழியர்களான பதினேழு தமிழர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் International Commission of Jurists (ICJ) என்ற அமைப்பும் வெளியிட்ட அறிக்கைகள் இவற்றை உறுதி செய்வனவாக உள்ளன.

தஞ்சங் கோரும் தமிழர் ஒருவர் விடயத்தில் அண்மையில் பிரித்தானிய நீதிமன்றத்தின் தீர்ப்பிலும் இந்நிலமை கவனத்தில் எடுத்து கொண்டுள்ளமை புலப்படுகிறது. இத்தீர்ப்பு தனியொருவர் சம்பந்தபட்டதாக இருந்த போதும் தஞ்சங்கோரும் மற்றையவர்கள் விடயத்திலும் உதவக் கூடிய சாதகமான பல அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

சிறிலங்கா அரசு விடயத்தில் மேற்கு நாடுகள் தமது அணுகுமுறையினை மாற்றும் நிலைப்பாடு தெரியாவிடினும், தீவின் உண்மை நிலவரத்தை வெளிப்படுத்துவதில் அயராது பணியாற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். உங்கள் பணி தொடர வேண்டும்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

ஐரோப்பாவில் பருவம் தவறி பெய்யும் கோடை மழையினையிட்டு அலுத்துக் கொண்டிருந்தாலும் அடிக்கடி கோயில் திருவிழாக்களில் உங்களை சந்திக்க முடிவதில் எங்களுக்கு மகிழ்ச்சி. ஒரு பேப்பர் பற்றிய உங்கட புறணியள், பாராட்டுகளை நெற்றிக்கு நேரே நீங்கள் சொல்லிறதும் நல்லதாய்ததான் இருக்குது. இப்படித்தான் அண்டைக்கும் ஒரு தேர்திருவிழாவிலை ஒரு பேப்பர் ரைப்பற்றி காரசாரமாய் விமர்சிக்கத் தொடங்கீட்டு ஆதாரத்துக்கு பழைய ஒரு பேப்பர் ரை கொண்டு வாறன் எண்டு போனவர் திரும்பி வரேல்லை இன்னும் ஒண்டு இரண்டு திருவிழா இருக்குது முடிஞ்சால் அவர் அங்கை வந்து எங்களை சந்திக்கலாம்.

பேப்பரிலை எழுத்துப் பிழையள் அதிகரிச்சுக் கொண்டே போகிறது .. அதுவும் அச்சுக்கு பொறுப்பாயிருந்த ஒரு பேப்பர் காரி கண்டம் கடந்து போனதிலை கட்டுக் கடங்காமல் போயிடுச்சது. ஜேர்மனியிலையிருந்து அண்ணை ஒருத்தர் இந்த விசயத்திலை உதவிறது எண்டிருக்கிறார் பார்ப்பம். ஆரும் தமிழ் வாத்திமாரை பிடிச்சு புறூவ் ரீடிங் செய்யுங்கோ எண்டு சிலர் ஒசி அட்வைஸ் தந்திருக்கினம். வாத்திமாரை பிடிக்கிறது எண்டது அவ்வளவு இலேசான விசயமாய் தெரியேல்லை. ஊரிலை இருந்து எங்களுக்கு தமிழ் படிப்பிச்ச சுப்பிரமணிய வாத்தியாரைத்தான் வேக் பெர்மிற்றிலை எடுக்கோணும். அவருக்கு இஞ்சத்தை சீவியம் சரிப்பட்டு வருமோ தெரியாது. எதுக்கும் உங்களுக்கு தெரிஞ்சு ஆரும் தமிழ்மணிகள் இருந்தால் சொல்லுங்கோ.

மின்னஞ்சலிலை உங்கடை ஆக்கங்களை அனுப்பிறதெண்டால் எந்த எழுத்துருவை பாவிக்கிறது எண்டு அடிக்கடி எங்களை வினவிறதாலை சொல்லிறம் .. நீங்கள் எந்த எழுத்துருவையும் பாவிக்கலாம் ஆனால் Word அல்லது அதற்கு இணையான format இல் வெறுமனே பதிஞ்சு அனுப்புங்கோ. நீங்களே வடிவமைப்பு செய்யாதேங்கோ அந்த வேலையை நாங்கள் செய்யிறம். அதுபோல் உங்களது தொடர்பு விபரங்களை அவசியம் அறியத்தாருங்கள். தொடர்பு விபரங்கள் இல்லாமல் வருகிற ஆக்கங்கள் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதை பணிவாய் தெரிவித்துக் கொள்கிறம்.

நீங்கள் கஸ்ரப்பட்டு உழைக்கிற காசை எப்பிடி சேமிக்கிறது எங்கை வைப்பிலிடுகிறது போன்ற விசயங்களை இதுகளை தெரிஞ்சு வச்சிருக்கிற ஆக்களை கொண்டு எழுதி ஒரு இணைப்பாக அடுத்த பேப்பரில சேர்க்கிறம், உங்களுக்கு உபயோகமாயிருந்தால் தொடர்ந்து இந்த இணைப்பு வரும். எதுக்கும் உங்கட அபிப்பிராயங்களை தெரியப்படுத்துங்கோ.

விட்டால் எல்லாரும் வெள்ளக்காரன் பிள்ளை மாதிரி இங்கிலிசிலை வெளுத்து வாங்கிறியள். ஆனால் இங்கிலிசிலை கட்டுரை எழுதுங்கோ மற்றாக்களும் வாசிப்பினம் எண்டால் ஒருதரையும் காணக் கிடைக்குதில்லை. ஆங்கிலத்திலும் மற்றய ஐரோப்பிய மொழிகளிலையும் உங்கள் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

அடுத்த பேப்பருக்கிடையில் மூண்டு கிழமை இடைவெளி வருகிறது. அதுக்கிடையிலை எங்கேனும் வழி தெருவிலை, கோயில் திருவிழாவிலை, சப்வேயிலை / மெற்றோவிலை / ரியுப்பிலை / ஊபரனிலை சந்திப்பம். அல்லது அடுத்த பேப்பரிலை சந்திக்கும்வரை விடைபெற்றுக் கொள்கிறோம்.

மீண்டும் சந்திப்போம்.

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

Charity of 'Terrorists'

Almost two years after His Highness M.Rajapakse – President of the Government of Sri Lanka (GOSL), Czar of Vakarai, Emperor of Thoppigala, democratiser of the Tamils, etc., etc. – launched his "War for Peace". The International Community (IC) has a new pastime. A 'positive and frank' discussion with the GOSL they say. And this discussion is all about 'access to humanitarian work'.

In the mean time the GOSL is carrying on with its murderous war augmented by policies of divide and rule. It has been using international aid money to train and arm its murderous armed forces, the Sri Lankan Monitoring Mission blamed for the murders of aid workers. While the opposition parties in Colombo claim that the war has not been executed at full throttle, they could engineer Tamil divisions much better than the GOSL etc.

Unbelievable you may say.

Tamils have been informing the IC about their demand for equal rights and the violent replies they have been getting from the GOSL ever since. After all these efforts, in 2007, their right to self determination has been reduced to their right to aid and charity by the IC.

What is appalling about these 'positive and frank' discussions is that just as the Tamils are as far as ever from having a peaceful resolution to their demand of self determination the IC and the GOSL are indulging in a fantasy. In this necrophilic fantasy, Tamils have a safe and secure peace and the next step is the development of their economic and civic well being by giving them aid.

Is the IC totally blind you may ask.

Indeed, when the GOSL wants to destroy the Tamil nation, it tries its best to make the IC blind first.

Obviously, there is no peace in Tamil Northeast, and there may never be one within the next few years.

The Tamil North is like prison cell: a hermetically sealed cage, populated by refugees; with no control over their own affairs; political, economic or cultural. Not to mention the chronic shortage of water, food, electricity, gasoline, and medicines. All strictly controlled by the armed forces of GOSL.

And as for the Tamil East, it is enough to look at its recent map prepared by the UN to understand why no peace can emerge there: notice how this region has been chopped into numerous tiny cages for humans, separated by Sinhalese settlements and GOSL Army fences, roadblocks, and checkpoints.

Cages for non-Sinhalese humans only, mind you; Sinhalese move around freely in their (whose?) land.

The Colombo media once again celebrates peace in the Tamil East. Mr Rajapakse is extremely serious, Colombo analysts say. Some suggest he is now strong enough to make peace, others claim he is so weak that peace is his only survival strategy.

Who cares why, as long as Mr Rajapakse is portrayed as a man of peace, his spin doctors think. Thus they invited just another IC high flyer, Sir John Holmes to Sri Lanka.

Sir John Holmes is a veteran British diplomat. He studied at the same Oxford College as the late Mr Kadirgama, the ex-foreign minister of the Government of Sri Lanka (GOSL) and the greatest anti-Tamil spin doctor. In January 2007, he was appointed Undersecretary-General for Humanitarian Affairs and Emergency Relief Coordinator by United Nations Secretary-General Ban Ki-moon.

Thus Sir Holmes is the best agent of the IC to see the ground breaking peace efforts of Mr Rajapakse his spin doctors must have thought.

Mr Holmes visited Sri Lanka last week and it was intended as a familiarization visit. Just before he left, he said that Sri Lanka had one of the worst records in the world for humanitarian aid worker safety. He further said that he had his 'positive and frank' discussions with GOSL officials, and had been reassured that this would be looked into. He called on the GOSL and the Tamil Tigers to ensure aid workers have access to the needy.

And that was it.

Never mind the fact that the Tamil Northeast has been isolated and strangulated by GOSL for more than three decades because the occupants arrogantly demanded equal rights.

Never mind that thousands of innocent Tamils have been killed since 1956 in the name of democracy and sovereignty.

Never mind hundreds of Tamils have disappeared in the name of national security. Never mind the generations of Tamils who do not know anything other than war, malnutrition, poverty, disease and a slow and painful death because they decided to cling on to their own land.

This pre-eminent UN diplomat did not utter a word about any of these.

But still, at a press conference this week the Chief Whip of GOSL Jayaraj Fernandopulle, who is also the Sri Lanka's highways minister, said he believed Sir Holmes had taken a bribe from the Tamil Tigers and had deliberately tried to harm Sri Lanka's reputation. "I would say Holmes is completely a terrorist, a terrorist who supports terrorism. We consider people who support terrorists also terrorists," Fernandopulle (who calls himself Tamil as Mr Kadirgama did), was quoted by Reuters.

A recurrent theme in pro GOSL propaganda is "you are a terrorist if you blame us." This is based on the fact that GOSL is democratically elected and it is governing a sovereign nation state. Thus GOSL should be allowed to kill its own citizens or violate any human rights norms if it fancied. Since it is fighting a 'war against terrorism' just like the star players of the international community, thus GOSL should not be criticised. Not now, at least: perhaps after the 'Tamil problem' has been eradicated.

While Sir Holmes and Mr Fernandopulle have been bickering over diplomatic semantics (or the lack of it) Tamil Northeast has been under Sri Lankan Military siege for months. The numbers of dead have reached historic levels; more than half a million people have been locked in the tiny Jaffna peninsula, deprived of proper medical care and food, standing on the verge of starvation.

Sir Holmes did not even mention this evil or any of the other countless atrocities inflicted on the Tamils at the hands of GOSL.

And yet this poor pre-eminent humanitarian has been branded as a corrupt white English terrorist by the GOSL.

தெற்கில் தோற்றும் மாற்றுத் தரப்பு தமிழர்களுக்கு பயன் ஏதும் தருமா?

தென்னிலங்கையில் மீண்டும் ஒரு தடவை சந்திரிகா புராணம் பாடும் சூழல் எழுந்திருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, சுமார் 21 மாதங்களாக அரசியல் அஞ்ஞாதவாசம் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடு திரும்பியிருக்கின்றார்.

ஜனாதிபதி மஹ்ந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் கிளர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுப் பிரிந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவை உருவாக்கியிருக்கும் மங்கள சமரவீர ஸ்ரீபதி சூரியாராய்ச்சி அணிக்கு முன்னாள் ஜன ாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதமும் ஆதரவும் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. மஹ்ந்த அரசை வீழ்த்துவதற்கு மங்கள ஸ்ரீபதி அணி, ஐ. தே. கட்சித் தலைவர் ரணிலுடன் சேர்ந்து அமைத்திருக்கும் தேசிய காங்கிரஸுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவும் பின்புல அரவணைப்பும் இருப்பதாகக் கருதும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள், சந்திரிகா ரணில் மங்கள என்ற முக்கூட்டு அணி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹ்ந்த ராஜபக்ஷவுக்கு பெரும் அரசியல் தலையிடியாக அமையும் என்று ஆரூடம் கூறுகின்றன. இதுவே இன்று தென்னிலங்கையில் பரபரப்பாகப் பேசப்படும் அரசியல் விவகாரமாகவும் மாறியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தின் மீது தீவிரப் போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தற்போதைய அரசுத் தலைமையின் போர் முனைப்புப் போக்கால் தடுமாறிப் போயிருக்கும் தமிழர்களும், தென்னிலங்கையில் இந்த முக்கூட்டு அணியின் திடீர் எழுச்சி, தங்களுக்கு ஏதும் மீட்சியைத் தராதா என்று ஆதங்கத்துடன் நோக்குவதும் புரிகின்றது. ஒரு தட்டில் ஜனாதிபதி மஹ்ந்தரையும், மறு தட்டில் ரணில் சந்திரிகா மங்கள அணியையும் நிறுத்தி, அரசியல் அளவீடு ஒன்றை நடத்த வேண்டிய தேவை தமிழர்களுக்கு எழுந்துள்ளது. சரியோ, பிழையோ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை தனது நிறைவேற்று அதிகாரத் தலைவராக மஹ்ந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது தமிழர் தாயகம்தான். இந்தப் பின்புலத்திலேயே இந்த அளவீடும் அமைய வேண்டியிருக்கின்றது.

தென்னிலங்கையின் பௌத்த சிங்கள மேலாண்மைச் சக்திகளை அரவணைத்துக் கொண்டுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலை மஹ்ந்த ரர்ஜபக்ஷ எதிர்கொண்டார். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் இந்த பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகள் எழுத்தில் கொடுத்த நிபந்தனைகளை கையெழுத்திட்டு ஏற்று, அந்த உடன்பாட்டுடன்தான் அவர் தேர்தல் களத்தில் குதித்தார். அதுபோல, இன்றும் அதே மேலாண்மை சக்திகளோடு கைகோத்து, அரவணைத்து அவற்றின் விருப்புக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ப தமது அரசை அவர் நடத்திச் செல்கின்றார். பேரின வாத சக்திகளை இணைத்துக் கொண்டுள்ள அவர், அந்த சக்திகளைத் திருப்திப்படுத்தும் வகையில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது போர் முனைப்பையும், அரச அடக்கு முறையையும் கட்டவிழ்த்து விடுவதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர் ஜனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டால் இதைத்தான் செய்வார் என்று தமிழர்கள் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இதற்கு மாறாக அவர் நடந்துகொள்வார் என்று கருதுவதற்கு அப்போது ஏதுமிருக்கவில்லை.

ஆக, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தம்மிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டதை அட்சரம் பிசகாமல் அவர் இப்போது செயலுருக் கொடுத்து நிறைவேற்றி வருகின்றார். அவ்வளவே. ஆனால் உத்தேச ரணில் சந்திரிகா மங்கள கூட்டு அப்படிப்பட்டதல்ல. அத்தலைவர்களின் கடந்த காலத்தை நோக்குங்கள்.

தமிழர்களோடு பேசி அவர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பேன் என்று கூறி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிப் பீடத்துக்கு ஏறி, பதினொரு ஆண்டுகள் நாட்டைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் விநோதமான கொள்கை ஒன்றை வகுத்து, தமிழர்கள் மீது மிக மோசமான மிகக் கொடூரமான மிகப் பெரிய அழிவுகளையும் மனிதாபிமான நெருக்கடிகளையும் ஏற்படுத்திய குரூரமான யுத்தம் ஒன்றைத் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விட்டு, இனப்படுகொலை அழிவுக்கு வழி செய்தார். தேர்தல் சமயத்தில் சமாதானத் தேவதையாகத் தோற்றி பின்னர், ஆட்சிக்காலத்தில் போர் வெறியராகத் தம்மை மாற்றிக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவைத் தமிழர்கள் கண்டார்கள்.

அதேபோலத்தான் ரணில் விக்கிரமசிங்கவும். ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில், நிதி, சட்டம் ஒழுங்கு, நில உரிமை, கல்வி போன்ற விடயங்களில் கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் பிரதேச சுயாட்சித்திட்டம் முன்வைக்கப்பட்டபோது நாடாளுமன்றுக்குள்ளேயே அதனைக் கிழித் தெறிந்து தீயிட வைத்தவர் ரணில். பின்னர் சமாதானத் தூதன் வேடத்தோடு களமிறங்கி 2001 டிசெம்பரில் பிரதமரான பின்னர், தாம் ஆட்சியிலிருந்த இரண்டு வருட காலத்தில் அவர் என்ன செய்தார்? ஈழத் தமிழர்களின் அன்றாட மனிதாபிமானப் பிரச்சினைகளையோ, அடிப் படை அரசியல் உரிமை விவகாரங்களையோ, நேர்மையோடும், நியாயம் செய்யும் உறுதியோடும் அவர் அணுகவில்லை. அந்த விவகாரங்களைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்தி, தமிழரின் போரியல் வலுவைச் சிதைக்க, சர்வதேச வலைப் பின்னல் என்ற சதித் திட்டத்தை அவர் நெறிப்படுத் தினார். உருப்படியான நீதி, நியாயமான செயல் முறை சாத்தியமான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்குவதை விடுத்து, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் அவர் விரித்து வைத்த சர்வதேச சதி வலைப்பின்னல் என்ற பொறி குறித்துத் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

அதே வகையறாவைச் சேர்ந்தவர்தான் மங்களவும். இன்றைய ஜனாதிபதி ராஜபக்ஷவை பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் கன்னையில் அணி சேர்க்க மூல காரணர்களாக ஒற்றை க்காலில் நின்றவர்களுள் இவரும் ஒருவர். இப்போது வெளியே வந்து நின்று கொண்டு தான் அமைத்த கூடாரத்தையே வைகிறார் அவர்.

இந்த முக்கூட்டு அணி அதிகாரத்துக்கு வந்தால், இப்போது இருப்பதிலும் விட மேன்மையான நிலைமை தமிழர்களுக்குக் கிட்டும் என்று நம்புவதில் அர்த்தமில்லை. அது அபத்தமான நம்பிக்கையாகவே இருக்கும்.

தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறும் எந்தத் தரப்பும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம் என்பதே தமிழர்களின் ஆறு தசாப்தகால அரசியல் பட்டறிவாகும்.

நன்றி - உதயன்

நம்பி நம்பி வாழ்ந்த வாழ்வு நமக்கு இன்னும் வேண்டுமோ வெம்பி இன்னும் சாக நாமும் ஏதும் அற்ற மனிதரோ?

Editorial, Eelam Nation

Human Rights in Sri Lanka is like the F-word

The four letter F-word is the most commonly used in the world and in the process over the years it has lost its meaning. It is used as a verb, noun, gerund and adjective and so on. It is used in so many contexts and situations and to describe so many things. It is used by all kinds of people of most nationalities including heads of states, religious leaders and personnel of the armed forces. It is used at international conferences, in movies, in television shows and so on. Even little children use it and parents dare not reprimand them for fear that they will use it more and more if they know the meaning of it. It is used extensively by the members of the British royal family and it has not made the British people republicans to demand the abolition of the monarchy. Although the word has no meaning in its current usage yet it denotes a fundamentally important function of life on this planet.

In Sri Lanka, like the F-word, the term human rights has lost its meaning. It is used by all and sundry but only a few know the meaning and the purport of it .The President and commander in chief of the armed forces down to the lowest rung in the armed forces use it all the time. It is used by the government cadres, ministers other parliamentarians, the subservient media and others concerned. A circular issued to the members of the armed forces, the very perpetrators of human rights abuses and infringements goes; "....and for the purpose of ensuring that fundamental rights of persons arrested or detained are respected and such persons are treated humanely", as if to say that a person who is arrested, detained and inevitably tortured or decapitated as in the Sri Lankan situation should be treated humanely and with respect! It makes a mockery of human rights. It is for this reason apparently that in the recent attempted forced evacuations of Tamil people from Colombo the chief of police, it is claimed, gave a discourse on human rights to the very victims of such abuse. The irony is that these persons who should have been the last persons to have been told of violations of human rights were told of them by one of the principal violators of human rights. It was like reading the Riot Act to a set of peaceful demonstrators before they are shot down. This is just one instance.

President Rajapakse claims to have been a human rights lawyer. It makes one wonder as to which side of the human rights law he was standing. What is certain is that having been close to the human rights "industry" as it were, and their working he is callous and oblivious to the operations and the culture in these organizations but he is only sensitive and jittery to the impact that their reports could have on the inclinations of the international community towards giving aid to Sri Lanka. That apart, he would rather encourage human rights abuses against the Tamil people. The more oppressed the Tamil people are the more popular he becomes. That unfortunately is the essence of Sinhala racism, chauvinism and nationalism. Rajapakse is essentially a child of this form of nationalism and is largely regarded so. Try as he may he cannot rise above this.

For Rajapakse and his cohorts anything adverse (it cannot be anything else) in reports of even prestigious human rights organisations like the Human Rights Watch and the Amnesty International are lies, distortions, repetitions, unconfirmed, outdated, unsubstantiated, one sided, an attempt to support the LTTE or an instance of complicity with the Norwegians.

Insult on the Tamil people

President Rajapakse and his brothers are effectively the government of Sri Lanka. The spontaneity of Basil Rajapakse's most recent public outburst of the vile and debased insult on the Tamil people unprecedented in any public forum and far unbecoming of any public official of his rank not only reveals the contempt in which the Tamil people are held but also summarizes the government's attitude towards the Tamil people.

It only confirms Gothabaya Rajapakse's statement that "anything is fair". It is reminiscent of the chanting of the witches in scene one of William Shakespeare's Macbeth: "Fair is foul and foul is fair". This aptly portrays the Sri Lankan government's record of and its attitude towards human rights. It is indeed a tragedy.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சுவேதிகா
மணி - ஜோசப்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
சுகி - நிதி
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சற்று மாறுதலுக்காக. . .

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை

சேயோன்
(ஒரு பேப்பர்)

சனங்களை நான் சரியாகப் புரிந்து கொள்ள வில்லையோ என்ற ஐமிச்சம் எனக்குள் எழுகிறது. ஒரு சமயம் புகழ்கிறேன். ஒரு சமயம் திட்டுகிறேன். ஆத்திரப்படுகிறேன். ஆவேசப்படுகிறேன். ஆசைப்படுகிறேன்.

ஏன் இப்படியெல்லாம் செய்கிறேன்? அல்லது ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? ஒரு சமயம் நல்லது செய்கிறார்கள். ஒரு சமயம் சரியல் லாததைச் செய்கிறார்கள். அப்படித்தானா? அல்லது நம் சமூகத்தை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா? மற்றவர்களுக்குச் சரி யென்று படுவது எனக்குப் பிழை என்று படுகிறதா? எது சரி? எது பிழை? அதைத் தீர்மானிப்பவர் யார்?

நான் தான் தீர்மானிப்பவன் என்றால் அதற்கான தகுதி எனக்கு இருக்கிறதா? அறிவுரை சொல்லும் தகுதி எனக்கு இருக்கிறதா? அறிவுரை சொல்வது சரிதானா?

இப்படி என்னை நிறையக் கேள்விகள் குடைந் தெடுக்கின்றன. இப்பொழுது எனக்கு இப்படித் தான் யோசனைகள் ஓடுகின்றன. நம் சமூகத்தில் நாம் கோபப்படத் தேவையில்லை. கோபிக்க ஒன்றுமில்லை. இதுவரை காலம் விதித்த வாழ்வை அவர்கள் வாழ்கிறார்கள். இதுவரை காலமும் அவர்கள் எப்படி வாழ்ந்தார்களோ அதிலிருந்து ஒரு அடிகூடப் பெயராமல் அப்படியே வாழ்கி றார்கள். நம் ஈழத்துக் கவிஞர் முருகையன் ஒரு கவிதை எழுதியிருந்தார்

"இரண்டாயிரம் ஆண்டுப்
பழைய சுமை எங்களுக்கு
மூட்டை கட்டி அந்த
முழுப் பாரம் பின்முதுகில்
போட்டுக் குனிந்து புறப்பட்டோம்"

இப்படிப் போகிறது அந்தக் கவிதை. அதாவது மரபு என்ற சுமை எங்கள் முதுகை அழுத்துகிறது. அதனுடன் நீண்ட வழி நடக்கிறோம். அந்த மரபு என்ற சுமையை இறக்கி விட நாம் தயாரில்லை. இது தான் அக்கவிதையின் சித்திரம்.

அங்காலை இங்காலை என்று ஓர் அடிகூட நகராமல் நடக்கிறோம். முன்னோர்கள் போட்ட வழியில் முக்கி முக்கி நடக்கிறோம். நமக்கென்று புதிய பாதை போட நாம் தயாரில்லை. மந்தைக் கூட்டமாக நாம் அப்படியே இருக்கிறோம்.

பகுத்தறிவற்ற மந்தைக் கூட்டமே அப்படிச் செய்யும். மந்தையில் முதல் ஆடு எந்த வழியில் போகிறதோ அதே வழியில் ஏனைய மந்தை ஆடுகளும் செல்லும். ஏன் என்ற கேள்வி இல்லை. புதிய பாதையை இலகுவான பாதையை கண்டுபிடிக்கிற யோசனை இல்லை. மந்தைக் கூட்டம் தானா இந்த மனிதர்கள்?

கோடை வந்தவுடன் இப்பொழுது கோயில்களில் திருவிழாக்கள் கொடிகட்டிப் பற க்கின்றன. இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் இன்னும் ஒரு 15,20 வருடங்களுக்குத் தான்.

இப்போதுள்ள இளைய தலைமுறை இனிவரும் காலங்களில் கோயிலையோ குளத்தையோ கடவுளையோ திரும்பிப் பார்க்கப் போவதில்லை.. இதுவே யதார்த்தமான உண்மை.

இந்த உண்மையை நாம் புரிய வேண்டும். ஏற்றுக் கொள்ள வேண்டும். கோயிலோ கடவுளோ ஆன்மீகமோ ஓர் ஒழுக்கத்திற்குட்பட்டது என்பது உண்மை. ஆனால் சிந்தனை வளர்ச்சியையும் தடைப்படுத்துகிறது.

மெத்தப் படித்த 'இஞ்சினியர்' ஒருவர் உரையாற்றுகிறார்.

"கோயில் தேரின் தத்துவம் ஆன்ம ஈடேற்றமே. தேருக்கு நான்கு சக்கரங்கள் இருக்கின்றன. நான்கு சக்கரங்களும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களையும் குறிப்பதாகும். இந்த நாற்பாதங்களூடாக இறை வனை அடையலாம் என்பதையே தேரின் தத்துவம் நமக்கு உணர்த்துகிறது."

இதைக் கேட்டு என்மைந்தன் இப்படிக் கேட்கி றான்.

"காருக்கும் நாலு சில்லுத் தானே? அதுவும் அதையோ உணர்த்துது?"

இப்போது நாம் விழித்துக் கொள்ள வேண்டும். இந்த உளுத்துப் போன தத்துவங்களை காற்றில் வீசி எறிந்து விட வேண்டும். அல்லது கடலில் கரைத்து விட வேண்டும். காலத்துக்கு ஏற்ற பகுத்தறிவுக்கு ஒத்த சிந்தனை வளர்ச்சியைச் சிறகடிக்க வைக்கிற தத்துவங்களை வாழ்வை உண்மையை நம்பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஆன்மீக நெறி தான் அதற்கு உகந்தது என்றால் அது கூடப் பாதகமில்லை. என்ன வழியிலேனும் நல்லன செய்வோம். நல்லன செய்ய வைப்போம்.

ஆடி அமாவாசை என்ற ஒன்று வந்தது. தந்தையை இழந்தோர் தந்தைக்கான கடன் செய்வது அந்த நாள் என்றால் அதை நம் பிள்ளைகளுக்குப் புரிய வைப்போம்.

தந்தை நமக்காக எவ்வளவு செய்தார். அதற்காக வருடத்தில் ஒரு முறை இதைச் செய்கிறோம் என்பதை மிக விளக்கமாக உள்ளத்தைத் தொடும் வகையில் உணர்த்துவோம். அதில் இருக்கக் கூடிய அர்த்தமற்ற சடங்குகளை விலக்குவோம்.

அவ்வாறே 'சித்திரா பறுவம்' தாயாரின் நாளாக நினைவில் இருத்தி நம் பிள்ளைகளுக்குப் புரிய வைப்போம். சித்திரா பறுவம் தாயார் தினம். ஆடி அமாவாசை தந்தையர் தினம். இது தமிழ்ப் பண்பாடு என்றே வைத்துக் கொள்ளலாம். அந்த நாளில் உயிரோடிருக்கும் நம் தாய் தந்தையருக்கும் நன்மை செய்வோம்.

இடையில் ஆங்கிலப் பண்பாடு நமக்கெதற்கு? நல்லன செய்வதற்கு நாம் இந்த நாட்களைத் தேர்ந்தெடுப்போம். அவ்வளவு தான்.

சமயம் மனிதனுக்கு அவசியமா?

இராம. கே. நாதன்
(ஒரு பேப்பர்)

சமயம் இன்று நேற்று தொடங்கியதன்று. எப்போது மனிதன் தன்னிலும் பார்க்க ஒரு உயர்ந்த சக்தி உள்ளது என்று உணரத் தலைப்பட்டானோ அன்றே சமயம் தோன்றிவிட்டது.

ஆனால் அந்த சக்தி என்ன என்று அறியமுடியாத நிலையிலே தன்னால் விளங்கிக் கொள்ள முடியாத பொருட்களையும், இயற்கைச் சம்பவங்களையும் அந்த சக்தியாக நினைத்து, அதற்கு முதலில் பயந்தான். பின் அவற்றைத் தனக்கு சாதகமானதாக நினைத்து, அவற்றை வழிபட்டான்.

அதனாலேயே ஆதி மனிதன் சூரியனை, நிலவை விண் மீன்களை அந்தச் சக்தியின் பிம்பமாக நினைத்து வழிபட்டான்.

இயற்கை நிகழ்வுகளை இந்தச் சக்தியின் வெளிப்பாடாக எண்ணி அவற்றைக் கண்டு பயந்தான். காலப்போக்கில் இந்த சக்திகளுக்கு உலகம் எங்கும் பரந்திருந்த மனிதன் ஒவ்வொரு பெயரைக் கொடுத்து வழிபட்டான்.

ஆனால் எங்கிருந்தாலும் தன்னிலும் உயர்ந்த, தன்னை மிஞ்சிய, தன்னால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சக்தியை கடவுள் என்றான்.

அதே சக்தியைத் தான் மற்றையோர் இயற்கை என்றனர். ஒவ்வொருவரும் கூறுகின்ற பெயர்கள் வேறு. ஆனால் அவை எல்லாம் குறிக்கின்ற பொருள் ஒன்றுதான்.

இந்த ஒரு சக்தியைத்தான்., சிலர் தேவன் என்கி றார்கள். சிலர் இயற்கை என்கிறார்கள். எனவே கடவுள் என்பது உண்டா? இல்லையா? என்ற கேள்வி அர்த்தமற்றது.

ஏனெனில், இந்த பிரபஞ்சத்தை இயக்குகின்ற அந்த சக்தியைத்தான், ஒரு இந்து பிரம்மன் என்கிறான். ஒரு முஸ்லிம் அல்லா என்கிறான். ஒரு கிறிஸ்தவன் தேவன் என்கிறான்.

இந்த நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு எழுந்ததுதான் சமயமாகும். பரந்துபட்ட உலகிலே வாழும் எல்லோரும் ஒரேமாதிரி சிந்திக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது.

ஆகவேதான் பிரிவுபட்ட மக்கள் வாழ்ந்த சூழ்நிலையைப் பொறுத்து, சுற்றாடலைப் பொறுத்து, பூகோள நிலையைப் பொறுத்து ஒவ்வொரு சமயத்திலும் வித்தியாசமான கோட் பாடுகளும், நியமங்களும், சடங்குகளும் ஏற் பட்டன. ஆனால் உலகிலுள்ள முக்கிய சமயங்கள் எல்லாம் மனித வாழ்விற்குத் தேவையான நீதிகள், கட்டுப்பாடுகளையே எடுத்துக் கூறுகின்றன.

ஒரு சமயம் கூறுகின்ற நீதியைத்தான் ஒழுக்கத் தைத்தான் மறு சமயங்களும் கூறுகின்றன. சமயங்கள் மட்டுமின்றி எமது நீதி நூல்களும் மனிதன் ஒரு சீரான பாதையில் செல்லுவதற்கு ஏற்ற அறிவுரைகளைக் கூறுகின்றது.

எனவே ஒரு சமயத்தின் தத்துவத்தை அடிப்படைப்பொருளை அறிந்து கொள்ளாமல், இடையிலே புகுத்தப்பட்ட இதிகாசங்களையும், புராணக்கதைகளையுமே சமயம் என்று விளங்கி, சமய தத்துவத்தை இழிப்பதும் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் மூடத்தனத்தின் உச்சம் ஆகும்.

சடங்குகளும், பூசை, ஆராதனை முதலிய வையும் மனிதர்களுக்காக ஏற்படுத்தப்பட்டவை. எல்லா மனிதர்களும் ஒரேவகையான அறிவையோ அல்லது புத்தியையோ கொண்டவர்களல்ல.

எனவே ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில், சமய தத்துவத்தை விளங்கிக் கொள்வதற்காக, எது நீதி எது அநீதி என வித்தியாசமும் தெரிவதற்காக புராணக் கதைகளும், இதிகாசக் கதைகளும் எழுதப்பட்டுள்ளன.

இவற்றை ஒரு சமயத்தின் தத்துவமாக உணருதல், உண்மையை உணராமல் விடுவதற்கு ஒப்பாகும்.

உலகிலே சமயங்களினால் சண்டைகள் தோன்றியிருக்கின்றன. ஒரு சமயத்தவர் வேறொரு சமயத்தவரைக் கொலை செய்கின்றனர் என்றொரு சாரார் சமயத்தின் மீது பழிபோடுகிறார்கள். இது எய்தவன் இருக்க அம்பை நோவதை ஒக்கும். மனிதர்களுடைய செய்கைகளுக்கு சமயத்தை பழி கூறலாமா?

எந்தச் சமயத்திலாவது பிற சமயத்தவர்களைக் கொலை செய் என்று கூறியுள்ளதா? மனிதர்கள் செய்யும் கொலைக்கு சமயங்கள் எப்படிப் பொறுப்பேற்க முடியும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

என்று திருக்குறள் சொல்லும் போது, அது ஒரு நீதிநூல், தமிழ் நூல் என்று சொல்லி ஏற்றுக்கொள்கிறோம்,

இதையே வேறொரு விதமாக, பாமரருக்கும் விளங்கும்படி

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இமயன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றி தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே!

என்று திருமூலர் கூறினால், இய்மன் எங்கே இருக்கிறான் சொல்லு என்று கேள்வி கேட்டு விடுகிறார்கள்.

எனவே சமயம் என்பது மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்காக, சீரான பாதையில் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நியமங்களின் கட்டுக்கோப்பே.

சமயம் இல்லாமலும் சீரான வாழ்க்கை வாழ முடியும். ஆனால் எல்லோராலும் அது முடியாது. அப்படியானவர்களுக்கு சமய போதனைகளும் கட்டுப்பாடுகளும் மிக அவசியமானவையாகும்.

மாத்தையாக்களும் கருணாக்களும்

வி. சபேசன்
(ஒரு பேப்பருக்காக)

கிழக்கில் விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு சிறிலங்கா அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. மகாண சபைத் தேர்தல் நடைபெறுவது சந்தேகம் என்றாலும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறான ஒரு தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட முடியாத நிலை நிலவுகிறது. அதனால் கருணா குழுவே அதிக இடங்களை கைப்பற்றக் கூடிய நிலைமை அங்கு ஏற்பட்டுள்ளது. தமிழினத்திற்கு துரோகம் இழைக்கின்ற கருணா குழுவிற்கு கிழக்கு மக்கள் வாக்களிப்பார்களா என்ற ஆச்சரியமான கேள்வி எழலாம். வாக்களிப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு என்பது தான் அதற்கு பதில்.

அதற்கு காரணம் கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் உருவாக்கி விடப்பட்டுள்ள பகைமை உணர்வுகள். பல ஆண்டுகளாகவே முஸ்லீம்கள் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக ஏதாவது ஒரு தமிழ்கட்சிக்கு வாக்களித்து அங்குள்ள தமிழ் மக்கள் பழகி விட்டார்கள். தேர்தல் புறக்கணிப்பு என்பது கிழக்கில் பல ஆண்டுகளாக நடைபெறவே இல்லை. புறக்கணிக்கவும் மாட்டார்கள்.

சில தமிழர்கள் இராமநாதனை ரதத்தில் வைத்து சிங்களவர்கள் இழுத்த சம்பவத்தை பெருமையோடு குறிப்பிடுவார்கள். உண்மையில் தமிழர்கள் வெட்கப்பட வேண்டிய சம்பவம் அது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த போதே கருணா முஸ்லீம்களுடன் கடுமையாகச் செயற்பட்டார் என்ற செய்திகள் பல உண்டு. இதற்காக அவர் வடக்கிற்கு அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

ஒட்டுமொத்த தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தேர்தலில் நின்றால் அவர்களிற்கு வாக்களிப்பார்கள். இல்லையென்றால் வேறு ஏதாவது தமிழ் கட்சிக்கு வாக்களித்து விடுவார்கள். இதுதான் கிழக்கில் உள்ள வாக்களிப்பு நிலைமை. இவ்வாறான நிலை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒட்டுக் குழுக்கள் தமிழ் முஸ்லீம் உறவு ஏற்படக் கூடாது என்பதில் கவனமாக செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட பிணக்குகளை ஆராய்கின்ற போது இரு தரப்பிலும் மாறிமாறி தவறுகள் இருந்து வந்ததையும், அவைகளை சிறிலங்கா அரசு சரியாகப் பயன்படுத்திக் கொண்டதையும் காணக்கூடியதாக உள்ளது.

1915ஆம் ஆண்டு சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டது. அப்பொழுது இலங்கையை ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேய அரசு முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்திய சிங்களத் தலைவர்களையும், காடையர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது. ஆங்கிலேய அரசு முஸ்லீம்களுக்கு சார்பாக நடந்து கொள்வதாக சிங்களத் தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இந்த நேரத்தில் தமிழர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் முஸ்லீம்களும் தமிழர்கள் என்ற ரீதியில் முஸ்லீம்களை ஆதரித்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது நடுநிலையாவது வகித்திருக்க வேண்டும். ஆனால் தமிழர்களின் தலைமை ஒரு பெரும் தவறை இழைத்தது. அன்றைக்கு தமிழர் தலைவராக இருந்த சேர்.பொன் இராமநாதன் சிங்களவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தார்.

அப்பொழுது முதலாம் உலக யுத்தம் (1914 - 1918) நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். கப்பற் போக்குவரத்து என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாக இருந்தது. ஆனால் ஆபத்தையும் பொருட்படுத்தாது சேர்.பொன் இராமநாதன் இங்கிலாந்து பயணமானார். அங்கே சிங்களவர்களுக்காக வாதாடினார். வாதாடி கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களையும், காடையர்களையும் விடுவிக்கச் செய்தார். இலங்கை திரும்பிய இராமநாதனை சிங்களவர்கள் ரதத்தில் வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். ரதத்தை சிங்களவர்களே இழுத்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த போதே கருணா முஸ்லீம்களுடன் கடுமையாகச் செயற்பட்டார் என்ற செய்திகள் பல உண்டு. இதற்காக அவர் வடக்கிற்கு அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

சில தமிழர்கள் இராமநாதனை ரதத்தில் வைத்து சிங்களவர்கள் இழுத்த சம்பவத்தை பெருமையோடு குறிப்பிடுவார்கள். உண்மையில் தமிழர்கள் வெட்கப்பட வேண்டிய சம்பவம் அது. அன்றைய தமிழர் தலைமை முஸ்லீம்களுக்கு எதிரான சிங்களவர்களுக்கு ஆதரவாக நின்று பெரும் தவறைச் செய்து விட்டது. முஸ்லீம்களை பிரித்து வைத்து விட்டது.

அதன் பிற்பாடு பல ஆண்டுகள் கழித்து தந்தை செல்வா அவர்கள் இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார்.

தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் சார்பில் முஸ்லீம்கள் வெற்றி பெற்றனர். தமிழர்கள் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ள தொகுதிகளைக் கூட முஸ்லீம் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கி அவர்களை தமிழரசுக் கட்சி வெற்றி பெற வைத்தது.

ஆனால் இம் முறை முஸ்லீம் பிரதிநிதிகள் தவறு செய்தனர். தமிழர்களினதும் மற்றும் முஸ்லீம்களினதும் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் கட்சி மாறி அரசில் இணைந்தனர். இது ஒரு முறையோ அல்லது இரு முறையோ மட்டும் நடைபெறவில்லை. பட்டியல் போடுகின்ற அளவிற்கு பலமுறை நடந்தது. ஒரு நேரத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் முஸ்லீம் பிரதிநிதிகளிடம் 'கட்சி மாறக் கூடாது' என்று சத்தியம் வாங்க வேண்டிய அளவிற்கு ஒவ்வொரு முறையும் கட்சிமாறுதல் நடந்தது. சத்தியம் செய்து கொடுத்துவர்களும் அதைக் காப்பாற்றவில்லை.

அதன் பிறகு ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமான பொழுது, தமிழ் -முஸ்லீம் உறவு தழைப்பது போன்ற காட்சிகள் தென்பட்டன. சிங்கள பௌத்தர் அல்லாத அனைவரையும் சிறிலங்காவில் இருந்து இல்லாமல் செய்கின்ற திட்டத்தையே சிங்கள அரசுகள் கொண்டுள்ளன என்கின்ற உண்மையை உணர்ந்த முஸ்லீம் இளைஞர்களும் விடுதலை இயக்கங்களில் இணைந்து தமிழீழத் தாயகம் அமைப்பதற்கு போராடினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடி நூற்றுக் கணக்கான முஸ்லீம்கள் மாவீரர் ஆகி உள்ளனர். லெப்கேணல் ஜீனைதீன் என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது முஸ்லீம் மாவீரர் ஆவார்.

இவ்வாறு ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் தமிழர் முஸ்லீம் ஒற்றுமையில் வளர்ச்சி ஏற்பட்டாலும், கடைசியில் இரண்டு சமூகங்களையும் பிளவு படுத்துகின்ற சிங்கள அரசின் முயற்சியே வெற்றி பெற்றது. இதற்கு சில தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லீம் மக்கள் மீது அடாவடித் தனமான முறையில் நடந்து கொண்டதும் துணை போனது.

முஸ்லீம்கள் மத்தியில் உருவான தனிக் கட்சிகளும் அரசியல் இலாபம் கருதி தமிழர் முஸ்லீம் ஒற்றுமை ஏற்படக் கூடாது என்பதில் கவனமாக இருந்தன. இவை எல்லாவற்றையும் விட 1990ஆம் ஆண்டில் நடந்த படுகொலைகளும், முஸ்லீம்கள் வெளியேற்றமும் இரண்டு சமூகத்தினர் மத்தியிலும் மிகப் பெரிய இடைவெளியை உருவாக்கின. அந்த இடைவெளி குறைந்த விடக் கூடாது என்பதில் இன்றைக்கு வரைக்கும் பல தீய சக்திகள் வெகு கவனமாக செயற்பட்டு வருகின்றன.

1990ஆம் ஆண்டு ஒகஸ்டின் ஆரம்பத்தில் காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பகுதிகளில் நூற்றுக் கணக்கான முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். முஸ்லீம்கள் மத்தியில் பதட்டத்தையும் தமிழர் மீது வெறுப்பையும் ஏற்படுத்துவதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் சிறிலங்காப் புலனாய்வுத்துறை செய்தது. பல கிராமங்களில் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுவதாக பொய்யான செய்திகளையும் பரப்பியது. முஸ்லீம்கள் மீதான படுகொலைகளின் பின்னால் சிறிலங்காவின் புலனாய்வுத்துறை செயற்பட்டது என்று நம்புவதற்கு வலுவான காரணங்கள் உண்டு.

முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சில நாட்களில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சிறிலங்கா இராணுவத்திற்கு அஞ்சி வீரமுனைக் கிராமத்திற்கு இடம் பெயர்ந்திருந்த தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினரும் முஸ்லீம் துணைப்படையினரும் இணைந்த பெரும் படுகொலை ஒன்றை நிகழ்த்தினர். 400இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். வேறு பல தமிழ் கிராமங்களும் சிறிலங்கா இராணுவத்தின் முஸ்லீம் துணைப் படையினரால் தாக்குதலுக்கு உள்ளாகின. தமிழ் மக்கள் மீதான தாக்குதலின் பின்னால் முஸ்லீம் ஒட்டுக் குழுவான 'ஜிகாத்' செயற்படுவதாக அன்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இவ்வாறு இரு சமூகங்களுக்கும் இடையில் கடும் பகையை உருவாக்கிய சிறிலங்காப் புலனாய்வுத்துறை யாழ் குடாவில் உள்ள முஸ்லீம்களையும் தன்னுடைய புலனாய்வுத்துறை மூலம் கலவரத்திற்கு தூண்டியது. அவ்வாறான ஒரு கலவரத்தை தடுப்பதற்கு அன்றைய நிலையில் தம்மிடம் பலம் இல்லை என்பதை உணர்ந்த விடுதலைப் புலிகள் முஸ்லீம்களை யாழில் இருந்து வெளியேற்றினர். இது முஸ்லீம்கள் மனதில் மேலும் ஒரு வடுவாகிப் போனது.

தமிழர் முஸ்லீம் உறவின் அவசியத்தினை உணர்ந்த விடுதலைப் புலிகள் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதற்கு மன்னிப்புக் கோரினர். தமிழ் மக்கள் யாழில் மீண்டும் குடியேறுகின்ற நிலை வருகின்ற போது முஸ்லீம் மக்களும் யாழில் மீண்டும் குடியேற்றப்படுவர் என்று வாக்குறுதியும் வழங்கினர். முஸ்லீம் கட்சிகளோடும், மதத் தலைவர்களோடும் பல பேச்சுவார்த்தைகளை நடத்தி உறவிற்கு வழி வகுத்தனர்.

ஆனால் சிறிலங்காப் புலனாய்வுத்துறை இப்பொழுதும் வேகமாக செயற்பட்டது. ஒட்டுக் குழுக்களான கருணா குழுவையும், ஜிகாத் குழுவையும் பயன்படுத்தி மீண்டும் மாறி மாறி கொலைகளை நிகழ்த்தியது. இன்று வரைக்கும் தமிழினத்தின் மத்தியில் தமிழர் முஸ்லீம் என்ற பிளவை உருவாக்குவதிலும், இரு சமூகங்கள் மத்தியில் பகையை வளர்ப்பதிலும் சிறிலங்கா அரசு வெற்றி பெற்று வருகிறது என்பது வேதனையான உண்மை.

தமிழர்களும் முஸ்லீம்களும் பகையோடு இருப்பதால் பலன் பெறுவது கிழக்கை பிரிக்க விரும்புகின்ற சிங்கள அரசும், ஒட்டுக் குழுக்களுமே ஆகும். முஸ்லீம்களை கொலை செய்வதிலும் கிராமங்களை விட்டு விரட்டி அடிப்பதிலும் சிறிலங்காப் படைகளும் கருணா குழுவும் முன்னிலையில் நின்று செயற்படுகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த போதே கருணா முஸ்லீம்களுடன் கடுமையாகச் செயற்பட்டார் என்ற செய்திகள் பல உண்டு. இதற்காக அவர் வடக்கிற்கு அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

அன்றைக்கே முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் பகைமையை வளர்க்கின்ற முயற்சிகளில் கருணா ஈடுபட்டதானது கருணாவிற்கு நீண்ட காலத்திட்டம் இருந்ததா என்ற கேள்வியை எழுப்புகின்றது. அதே போன்று யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்களை வெளியேற்றுவதில் முன்னின்று ஆர்வமாக செயற்பட்டவர் யார் என்று பார்த்தால் அங்கும் ஒரு ஆச்சரியமான பதில் இருக்கிறது. விடுதலைப் புலிகளின் அன்றைய பிரதித் தலைவர் மாத்தையாவே அவர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முஸ்லீம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் பின்பு துரோகிகளாக இனம் காணப்பட்டார்கள். இது இவர்கள் அந்நியச் சக்திகளிடம் பல ஆண்டுகளுக்கு முன்பே விலை போய்விட்டார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது.

(தொடர்ச்சி 39 ம் பக்கத்தில்)

ஒன்று பட்டால்

உண்டு வாழ்வு

ஒற்றுமை நீங்கில்

அனைவர்க்கும்

தாழ்வு

நெஞ்சு பொறுக்குதில்லையே!

உமா மகாலிங்கம்
(ஒரு பேப்பருக்காக)

கட்டுக்கடங்காத காட்டுமிராண்டித்தனம் கதிர்காமத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்சி தமிழ் நெஞ்சங்களை நெருடியிருக்கு மென்பதில் சந்தேகமில்லை.

வருடங்கள் தவறாமல் வடக்கிலிருந்து கால் நடையாக நாட்கணக்கில் நடந்து திருகோண மலை, மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக கதிர்காமத்து உற்சவகாலத்தில் கலந்து கொள்ளும் வழக்கம் காலங் காலமாக இருந்து வருகிறது.

இத்தகைய பண்புடைய பக்தர்களை, கதிர் காமக் கந்தனின் கண்முன்னாலேயே கண் மூடித்தனமான முறையில் காவலர்கள் பொல்லுகளால் அடித்து அமர்க்களப்படுத்திய சம்பவம் தமிழ் மக்களுக்கு மதவழிபாடுகளில் ஈடுபடும் உரிமையும் மறுக்கப்படுகிறது என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

இராணுவக் கட்டுப்பாட்டு வலயத்துக்குள், அதுவும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் கால இடைவெளிக்குள் இடம்பெறும் கடத் தல்களும், கொலைகளும் எல்லை மீறித் தொடர்கின்றன.

பயங்கரவாதத்தை ஒடுக்க எடுக்கும் நடவடிக் கையாகக் காட்டிக் கொண்டு அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுவதை உலக நாடுகள் அறியாமல் இல்லை.

அரசுக்கெதிராக எடுக்கப்படும் ஆர்பாட் டங்களை, கூட்டங்களை அடியோடு தடை செய்ய எடுக்கும் நடவடிக்கையாக தலை நகரில் பல்கலைக்கழக மாணவர்கள் பட்ட அவலங்கள் நிரூபிக்கின்றன.

வவுனியாவில் நடைபெற்ற அரச வைப மொன்றில் பங்குகொண்ட தலைமை நீதி பதி அவர்களின் உரை, சிங்கள அரசின் காதுக்கு எட்டாமல் போனாலும், சிங்கள மக்களையாவது சிந்திக்க வைத்தால் மகிழ்ச்சியே.

முழு இலங்கையுமே தனது உடமை யென்றும், அங்கு வாழும் சகல இனங்களும் தமது சொத்தென்றும் உரிமை கொண்டாடும் இலங்கை அரசு, அம்மக்கள் மீதும், அவர்கள் வாழும் பிரதேசங்கள் மீதும் குண்டுகள் வீசி அழிப்பது எவ்வளவு கொடுமையானதென்ற தலைமை நீதிபதியின் கூற்றுக்கு அரசு காது கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தன மானது.

இலங்கை அரசாங்கத்துக்கெதிராக, ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதற்கும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வேவையான அளவிற்கு சாட்சியங்களும் தடயங்களும் உள்ளன.

பௌத்த மேலான்மை சிங்கள அரசை ஆட்டிப் படைக்கும் வரை பல்லின மக்கள் வாழும் இலங்கையில் நிரந்தர அமைதியும், மகிழ்ச்சியும் என்றுமே கிட்டப் போவதில்லை யென யாழ் மறை மாவட்ட ஆயர் வணக்கத் துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களின் கூற்று தமிழ் மக்களைப் பொறுத்த வரை முடிந்துபோன முடிவு.

அரசாங்கங்கள் மாறினாலும் அதிபர்கள் மாறினாலும் இந்தப் பௌத்த மேலாண்மைப் போக்கு மாறாமல் சிறிலங்கா அரசியலில் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

வனப்புமிக்க வாகரைப் பிரதேச தமிழ் மக்களை அடித்து விரட்டிவிட்டு அங்கு சிங்கள மக்களையும், பௌத்த விகாரைகளையும் அமைக்கத் திட்டமிட்டு வருவதையும் அதற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் மூலம் அரசு கைகொடுப்பதையும் செய்திகள் மூலம் அறிகின்றோம்.

இலங்கை அரசு திட்டமிட்டு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் விரோத செயல்ப்பாடுகளாக மாறுவதை சர்வதேசம் கண்டும் காணாமல் இருப்பதை தமிழ்பேசும் மக்களுக்குச் செய்யப்படும் அநீதியாக ஏன் கருத முடியாது.

மகிந்த அரசுக்கு முண்டு கொடுத்த மலையகத் தமிழ் மக்களின் பிரதான கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்த திடீர் முடிவு எந்த நோக்கத்துடன் எடுக்கப் பட்டிருந்தாலும், இதில் மறைந்த ஒரு உண்மையை எவராலும் மறுக்க முடியாது.

சிங்கள அரசுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளால் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை என்றுமே தீர்க்க முடியவில்லை.

தனிப்பட்ட முறையில் சில இலாபங்கள் தமக்கும், தம்மைச் சார்ந்தவர்களுக்கும் இவர்களால் சில சலுகைகளைப் பெற்றுத்தர முடிந்ததேயல்லாமல், தேசிய ரீதியில் எதுவித மாற்றத்தையும், தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்க இவர்களால் முடியாமல் போனது சரித்திர உண்மை.

தென் ஆபிரிக்காவில் கறுப்பின மக்களுக் கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இன வொதுக்கல் (Aparthied) கொள்கையை விட, படுமோசமாகக் கடைப்பிடிக்கப்படும் இன அழிப்பும், இனவொதுக்கல்களும் இலங்கையில் தமிழ்பேசும் மக்களை அடியோடு அழித்துவிடும் தூரநோக்கச் சிந்தனையுடன் செயல்ப்படுத்தப்படுவதை சர்வதேச நாடுகள் கண்டிக்க வேண்டியது உடனடித் தேவையாகும்.

எவ்வாறு தென் ஆபிரிக்க அரசாங்கத் துக்கெதிராக புறக்கணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவ்வரசாங்கத்தைப் பணிய வைத்ததோ அதே வழிகள் இலங்கை அரசாங் கத்துக்கெதிராகவும் பிரயோகிக்க வேண்டிய தருணம் நெருங்கி விட்டது.

இலங்கை அரசாங்கத்துக்கெதிராக, ஐக்கிய நாடுகள் சபை தலையிட போதிய தடயங்கள் உள்ளன.

இலங்கை அரசைப் பணிய வைக்க தென்னாபிரிக்க பாணியிலான நடவடிக்கையை சர்வதேச நாடுகள் எடுக்க வேண்டிய காலம் வந்த விட்டது

மாணவர்களின் கொலைகள், வர்த்தகர் களின் கடத்தல்கள் அனாயசமாக மீறப்படும் மனித உரிமைகள், வெளிநாடுகளின் கண்டனங்களுக்குச் செவிசாய்க்க மறுக்கும் செவிட்டுத்தனம், பௌத்த சிங்கள மேலாண் மையால் அடிமைப்படுத்தப்படும் சிங்களவர் அல்லாதோரின் சிறுமைத்தனம் போன்றவை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை நிச்சயமாக ஈர்க்க வேண்டிய காரணிகள்.

ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகார, அவசர நிவாரண உதவிகள் வழங்கும் அலகின் பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோல்ம்ஸ் (John Holmes) அவர்களின் இலங்கைக்கான விஜயம், விபரங்களைச் சேகரிக்க உண்மை யில் உதவியதா என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அவரது வருகையால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கு உடனடித் தீர்வு கிடைக்காது போனாலும், அவர்களின் குறைகள் ஐ.நா.வின் தலைமைக்கு எட்டக் கூடிய வாய்ப்பையாவது ஏற்படுத்தும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். நல்லதே நடக்கட்டும்.

WOULD YOU LIKE TO SAVE UP TO 90% ON YOUR
INTERNATIONAL CALLS?
For great international call rates switch to Vx Home Account and discover the benefits!

Australia	2p	New Zealand	2p
Bahrain	6p	Oman	12p
Canada	1p	Pakistan	4p
Europe	2p	Saudi Arabia	10p
India	**5p**	Singapore	2p
Japan	2p	South Africa	4p
Kuwait	6p	**Sri Lanka**	**6p**
Malaysia	2p	UAE	13p
Mauritius	10p	USA	2p

- Call from any landline or mobile phone
- 6 Digits pre-fix number for hassle free dialing
- Per second Billing*
- Free, 24 hour, Customer Care 365 days a year
- No connection or maintanence charges
- No credit expiry dates
- Free fully itemised online billing
- International roaming over 20 countries worldwide
- Instant Connection
- No contract to sign - no minimum period commitment
- No need to change your phone, line or number.

Competetive rates for all countries. The above rates are based on calls made from 0207/0845 access numbers and include VAT.
Open an account with £25 and recieve £5 worth of talk time absolutley free plus recieve £5 worth of talk time everytime you reccomend a friend.

Call Sri Lanka for 6p and India for 5p!

Vx TELECOM

Getting your own Vx Account is easy. Just call our free 24 hour customer service on
0800 059 1010 or 020 7047 1010 **www.vxcom.co.uk**

இராமாயணம் சொல்வதெல்லாம்...

இராமாயணத்தில் என்ன இல்லை, இன்று நமக்கு அறிவுரை கூற நல்வழி நடக்க! நாம் அதைப்பற்றி சிந்திக்கிறோமா என்றால், இல்லை என்று தான் பதில் வரும். ஏன்? கற்பனையாக இருந்தாலும் நல்லவை உள்ளன தானே ஏன் ஏற்றுக்கொள்ள தயக்கம்.

இனி விடயத்திற்கு வருவோம். இராமாயண கதா நாயகன் இராமன் என்று அழைக்கப்படும் தசரத புத்திரனின் பல சிறப்புகள் பல வடிவங்களில் எடுத்து உரைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தசரதராமன் கோசல ராமன் சீதாராமன் ரகுராமன், கோதண்டராமன் இப்படி கூறிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் என்ன? ஆம் இவைதான் சிறப்பியல்கள். ஓர் மனிதனிடம் பல நற்குணங்கள் இல்லாவிடினும் ஓர் சிலவாவது இருக்கவேண்டாமா?

அப்படி படைக்கப்பட்டவன் இப்பிரபஞ்சத்தில் எவ்வளவுபேர் உள்ளனர். நம்முடைய குற்றத்தையும் தீய செயல்களையும் நியாயப்படுத்த நாம் சகலரும் பல வழிகளிலும் முனைகின்றோம். அவற்றை ஏற்கும் பக்குவம் நம்மில் எவ்வளவு பேரிடம் உள்ளது? இதுதான் இப்புவியின் புரியாத புதிர். தசரதராமன் என்ற ராமனை எடுத்துப்பார்ப்போமாகில் அதில் ஓர் தனயன் தந்தையிடம் எப்படி நடக்க வேண்டும் என்பதை அழகாக காட்டவில்லையா.

தந்தை சொற் மிக்க மந்திரமில்லை என்பது சான்றோர் உரை. இறைவனை பூஜிக்க உரைக்கப்படும் மந்திரத்தை விட தந்தையின் சொல் மிக சாலச் சிறந்தது.மைந்தனுக்கு. ஒவ்வொரு செயலுக்கும் காரண காரியங்கள் உண்டு. இவை இல்லாமல் ஒன்றும் நடப்பதாக தெரியவில்லை. இராமன் பெற்றோர் சொல்கேட்டு நடக்கும் ஓர் உத்தம மைந்தன். பட்டாபிசேகத்திற்கு நாள் குறிக்கப்பட்டு நாடே உற்சாகமாக அதற்கான ஒழுங்கில் மிக மும்முரமாக ஈடுபாட்டுக்கொண்டிருந்த வேளை அது. சகல மனிதனிலும் ஆயிரம் கற்பனைகள். இந்த நிலையில் இராமன் அவன் வளர்ப்பு அன்னையும் சிறியதாயாகிய கைகேயியால் அழைக்கப்படுகின்றான்.

அவள் அந்தரபுரம் அடைந்தவனை நோக்கி, இராமா நீ பதின்னான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும் உன் மகுடம் உன் தம்பியும் என் மகனுமாகிய பரதனுக்கே' இது உன் தந்தையின் கட்டளை என்றாள்.

இதை யோசிப்போமாகில் எவ்வளவு வேதனையான விடயம். ஆனால் அதற்கு இராமன் தாயே அப்படியே என்று புன்னகை மாறாத முகத்துடன் பதில் தந்து அவ்வண்ணம் நடக்க ஆயத்தமாகின்றான். இப்படி பல நற்குணங்கள் அவனுக்கு. ஒன்று தந்தை நேரடியாக கூறவில்லை கூறியது யார்? அவன் சிறிய தாயார். சிறிய தாயார் தந்தை சொன்னதாக கூறியதை தலைமேற் கொண்டு கோபப்படாமல் தம்பிக்கு விட்டுக் கொடுத்து கானகம் செல்ல தயாரானான் இராமன். முடியுமா நம்மால்? முடியும் ஏன் முடியாது. கோபம், ஆத்திரம், பதட்டம் இவைக்கும் இடம் கொடாமல் நாமும் சிந்தித்தால் முடியும்?..

முடியாதது என்பது என்ன? முடியும் முயன்றால், சில சமயம் சிரமமாக தோன்றும் பல முறை முயன்றால் முடியும். நாம், அதாவது நம்மில் பலர் இன்று தந்தை நேரில் கூறினால் கூட செவி கொடுப்பதில்லை. இந்நிலையில் பெற்ற தாயும் இல்லை, கூறியவர் சிறியதாய். அப்படி கூறினால் கேட்கவா போகிறார்கள். அரிது கேட்பவர்கள் இருக்கிறார்கள் இல்லாமல் இல்லை.. ஆனால் விரல் கொண்ட எண்ணிக்கைதான். யார் என்ன கூறினாலும் நிதானம் இழக்காமல் சிந்தனைக்கு இடம் கொடுத்து கோபத்தை தூண்டும் உணர்சிகளுக்கு மூட்டை கட்விட்டு, செயல்பட்டால் எல்லோரும் இராமனே. தம்பி இலக்குவன் நம்மில் பலரை போல். கோபம், சிந்தனை இல்லாத முடிவு, பதட்டம் தானும் நிதானம் இழந்து நம்மையும் நிதானம் இழக்க வைக்கும் குணப்படைப்பு. அன்பானவர்களே! சிறிது நேரம் சிந்திப்போமானால் எக் காலத்திற்கும் உரிய உண்மை பொக்சிசம் தானே!!

குறிப்பாக இன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழராகிய நாம் நம் பண்பாட்டின் பெருமையை மறந்து, நாகரீகம் எனற போர்வையின் கீழ் நம்நிலை, தமிழைவிட்டு பல காத தூரம் சென்றுவிட்டோம். தாயகத்தைவிட்டு பலகாத தூரம் வந்ததுபோல் பண்பாட்டையும் காற்றில் விட்டுவிட்டதாகத்தான் தெரிகின்றது. பெரியவர்களை மதிப்பது, தரமான வார்த்தையாடல், சிந்தாமல் சிதறாமல் வார்த்தையாடல் எல்லாம் காற்றில் கலந்து கரைந்த கற்பூரம் போல் ஆயிற்று.

யார் என்ன கூறினாலும் நிதானம் இழக்காமல் சிந்தனைக்கு இடம் கொடுத்து கோபத்தை தூண்டும் உணர்சிகளுக்கு மூட்டை கட்டிவிட்டு, செயல்பட்டால்...

மூத்தோர் சொல் வார்த்தையும், முழு நெல்லிக்கனியும் முற்பகுதி கசக்கும் பிற்பகுதி இனிக்கும் என்பது போல் பெரியவர்கள் சொல்வது இளையதலைமுறைக்கு முதலில் கசக்கும் தந்தையே எதிரியாக தோன்றுவார்.

பின் ஒருகால் அத்தனயன் தந்தையாகும்போது அவன் தனயன் அவன் சொற் கேளாது போகின். அக்கணம் அவன் தன் தந்தையின் பெருமையையும் அன்று தன்னால் தன் தந்தை பட்ட துன்பத்தையும் இன்று தன் தவப் புதல்வரால் தான்படும் துன்பத்தையும் நன்றாக புரிவான்.

தந்தை என்பவர் எமக்கு உயிர் தந்த சிருச்டி கர்த்தா. அவருடன் கோபம் கொண்டு சினந்து உரைப்பது, நான் கேட்டேனா என்னை பெறச் சொல்லி இன்னும் அவரின்... இப்படி பல சொற்தொடர்கள் மைந்தனின் திருவாயிலிருந்து. அவனுக்கு ஒரு மகன் பிறந்து இதே கேள்வியை அவன் முன் வைத்தால்? யோசியுங்கள்.

பல தந்தையார் இன்று விழுங்கவும் முடியாமல், வெளியே விடவும் முடியாமல் மனதில் மோட்டு மனவர்ச்சி, தாழ்வு மனப் பான்மையால் பாதிக்கப்பட்டு உயிர் கொல்லி நோயர் ஆகிவிடுகிறனர். அன்பானவர்களே இராமாயணம் உங்களில் பலருக்கு கட்டுகதை. சரி நாங்களும் அப்படியே எடுத்து கொள்வோம்.. ஆனால் அதில்..... சிந்திப்போமாகில்.. யாராலும், யாருக்கும் துன்பம் இல்லை.

இன்று இந்த பரந்த நாகரீக உலகில் பூமி பெயர்ந்த நமக்கு என்ன இல்லை, எல்லாம் உண்டு நிம்மதியை தவிர. காரணம் சிறிது கண்ணை மூடி யோசியுங்கள். விடையை உங்களிடமே விட்டுவிடுகிறேன்

- பாலா ஈஸ்ட்காம்

லீவு லெட்டர் பலவிதம்...

லீவு லெட்டருன்னு பார்த்ததுமே மக்கா ஆஹா டீச்சரு ஏதோ அவிங்க ஸ்கூல் மேட்டர எடுத்து உடப் போறாங்கன்னு நெனச்சிடாதீங்க. இன்போஸிஸ் போன்ற ஐ.டி நிறுவனங்கள், இந்துஸ்தான் ஏரோ நாட்டிகல் நிறுவனம் இப்படி பெரிய்ய்ய்ய நிறுவனங்களில் வேலை செய்வோர் எழுதிய 'காமெடி லீவ் லெட்டர்' பல இண்டெர் நெட்டில் உலா வருகிறதாம். லீவ் லெட்டரில் என்னங்க கொமெடிங்கிறீங்களா? அதுங்க அவ்வளவு ஆங்கிலப் புலமையோட எழுதப் பட்டிருக்காம். படிச்சிட்டுத்தான் சிரிங்களேன்:

"சின்ஸ் ஐ ஹேவ் டு கோ டு மை வில்லேஜ் டு செல் மை லான்ட் அலோங் வித் மை வைய்ப், பிளீஸ் சேங்ஷன் மீ ஒன் வீக் லீவ்"

என் நிலத்தை என் மனைவியுடன் விற்பதற்கு, கிராமத்திற்கு செல்ல வேண்டியிருப்பதால் ஒரு வாரம் விடுமுறை தேவை. அடப்பாவி ஃபிரிட்ஜ் வாங்குனா ஸ்டான்ட் ஃபிரீ மாதிரில்ல இருக்கு.

"ஆஸ் ஐ யாம் மரியிங் மை டோட்டர் பிளீஸ் கிராண்ட் எ வீக்ஸ் லீவ்"

மகளுக்குத் திருமணம் செய்வதால் என்பதைத் தான் இப்படி நான் என் மகளைத் திருமணம் செய்வதால் எனக்கு ஒரு வாரம் விடுமுறை..... என்ற பொருளில்... கடவுளே... கடவுளே.... இதென்ன கலி முத்திப் போயிடுச்சின்னு...

ஆஸ் மை மதர் இன் லோ ஹாஸ் எக்ஸ்பையர்ட் அண்ட் ஐயாம் ஒன்லி வன் ரெஸ்பான்ஸிபிள் போர் இட், பிளீஸ் கிராண்ட் மீ டென் டேஸ் லீவ்"

மாமியார் இறந்ததற்கு நான் மட்டுமே பொறுப்பு என்பதால் ஒரு வாரம் லீவ் கேட்கிறார். நிச்சயம் இது தானா வெளிப்பட்ட உண்மையாத்தான் இருக்கும். வரதட்சணைக் கேட்டு படுத்தினாரோ என்னமோ.

சின்ஸ் ஐ ஹவ் டு கோ டு தி கிரிமேஷன் கிரவுண்ட் அட் 10 ஓ குளோக் அண்ட் ஐ மே நொட் ரிட்டர்ன், பிளீஸ் கிராண்ட் மீ ஹாப் டே கசுவல் லீவ்"

அதாவது 10 மணிக்கு சுடுகாட்டுக்குப் போக வேண்டியுள்ளது.நான் திரும்பி வர முடியாது.எனவே விடுமுறை வேண்டும்... சுடுகாட்டுக்குப் போனா திரும்ப முடியாதுன்னு தெரியுதில்ல அப்ப ஏன் லீவ் ஒரு வழியா ராஜினாமா செய்யலாமே.

ஐ யாம் ஃசுப்பரிங் பிரம் பீவர், பிளீஸ் டிக்ளேர் ஒன் டே ஹாலிடே

இவருக்கு உடம்பு சரியில்லன்னு ஒரு நாள் லீவுன்னு அழிவிக்கணுமாம்... அது சரி பந்த் அது இதுன்னு எது எதுக்கோ லீவு விடறாங்க. அட மாட்டுப் பொங்கலுக்குக் கூட லீவுதானே இவருக்காக விட்டா என்ன

ஆஸ் ஐயாம் ஸ்டடியிங் இன் திஸ் ஸ்கூல்,ஐயாம் ஸ்ப்பரிங் பிரம் ஹெடேக், ஐ ரிகுவெஸ்ட் யூ டு லீவ் மீ டுடே

அது சரி இந்தப் பள்ளிக் கூடத்துல படிச்சதினால தலைவலியாம் அதனால லீவ் வேணுமாம். ஒருவேளை கண்மணி டீச்சர் அங்கதான் வேலை செய்யறாங்களோ?

மை வைய்ப் ஈஸ் சபரிங் புரொம் பீவர், அண்ட் ஆஸ் ஐயாம் ஒன்லி ஹஸ்பெண்ட் அட் ஹோம், ஐ மே பி கிராண்டட் லீவ்

மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. ஓகே. வீட்டில் இவர் ஒரே கணவராம்.. அதனால் லீவ் வேணுமாம்... கடவுளே... அம்மாடி உன் பேரச் கெடுக்க மத்தவங்க வேணாம் உங்க வீட்டுக்காரரே போதும் ஆத்தா

- வாரமலர்

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

Study in UK
From Sri Lanka and India
9 Years Experience
Authorised Education Advisor
P.K. SUHANTHAN (MSc -UK)
Knowledge Management Systems Pvt Ltd
Offices at Colombo: +94112553106 Chennai: +919841199594 London: +447905038050

வாரியாரும் தாய்த் தமிழும்

கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராக விளங்கினார். கம்பராமாயணம், கந்தபுராணம், மகாபாரதம், திருப்புகழ், திருவருட்பா, திருமுறைகள் இவருக்கு தண்ணீர் பட்டபாடு. இவர் தமிழ் சொற்பொழிவு ஆற்ற தொடங்கி விட்டால் போதும். சுட்டத்தில் உள்ளவர்கள் மகுடிக்கு அடங்கிய பாம்பு போல அப்படியே சொக்கி விடுவார்கள்.

சொற்பொழிவுக்கு இடை இடையே நகைச் சுவையை கலந்து பேசி மக்களை சிரிக்க வைத்து, சிந்திக்க செய்வது வாரியாரின் தனி பாணி. எதைச் சொன்னாலும் சுவையாக சொல்லும் திறமை படைத்தவர்.

கிருபானந்த வாரியார் தம் சொற்பொழிவில் ஒரு பாடலைப்பாடி இந்தப் பாடல் முழுவதும் ஒரு மாத்திரையிலேயே எழுதியிருக்கிறார் அருணகிரிநாதர் என்று சொன்னார்.

அந்தப் பாடலில் 'அம்மை' என்று ஒரு சொல் வந்தது. சொற்பொழிவு முடிந்து திரும்புகையில் 'சுவாமி! 'அம்மை' யில் வரும் 'ஐ' இரண்டு மாத்திரையாயிற்றே!' என்று ஒருவர் கேட்டார். அதற்கு உடனே வாரியார், 'ஆம், 'ஐ' க்கு 2 மாத்திரை தான், ஆனால் இந்த 'ஐ'க்கு பெயர் ஐகாரக் குறுக்கம், எனவே ஒரு எழுத்து தான்' என்று விளக்கினார்.

இப்படி தமிழை கரைத்துக் குடித்த வாரியாரை வடமொழி ஆதரவாளர் என்று சிலர் சொல்வது நகைச்சுவையின் உச்சகட்டம்!

இலக்கணமே நன்கு படித்த பலருக்குத் தலைக்கனம். சிலரோ பயந்து ஓடுவார்கள். அதிலும் இந்த ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், குற்றியலுகரம், குற்றியலிகரம், அளபெடை என்றால் போதும். அவ்வளவுதான். ஆளை விட்டாலே போதுமென்று பின்னங்கால் பிடறியில் அடிக்க ஓடி ஒளிந்து கொள்வர்! ஆனால் வாரியார் அப்படி அல்ல. தமிழின் அமுதத்தை முழுமையாகப் பருகியவர்.

வாரியார் சுவாமிகள் ஒரு தமிழ்ப்பெருங்கடல். நினைத்த பொழுதில் விரும்பிய கருத்தில் வெண்பாக்களை இலக்கணப் பிழையின்றி சுத்தமாக வடிக்கும் தெய்வத் தமிழர்.

யாராவது போய், மகளுக்கோ மகனுக்கோ கல்யாணம் என்றாலோ வீட்டு விசேசம் என்றாலோ அவர் உடனே அவர்களின் பெயர்களை வைத்தே வாழ்த்து வெண்பா எழுதும் திறமை கொண்டவர். இதனை அவரின் பக்தர்களிடமே கேட்டுத் தெளிவு பெறலாம்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் பல்லாண்டு காலம் ஆசிரியராக இருந்து படைத்த திருப்புகழமிர்தம் என்னும் மாத இதழ்களைப் பற்றித் தெரியுமா இந்த வடமொழி ஆதரவாளர்களுக்கு? வாரியாரைப் போலத் தமிழை வாரி யார் தந்தார்? காரியார் மேகம் பொழியும் மழையைப் போல தமிழ் மழை பொழிந்தவர் வாரியார்.

"ஆன்மீக தமிழ்ப்பழம் அனைத்து நாட்டு தமிழர்களையும் கவலைக்குள்ளாக்கி இதோ தருவில் இருந்து உதிர்ந்து விட்டது. அந்த சிவந்த மேனியில் சினம் அரும்பி பார்த்ததில்லை.

ஏதனையும் சிரித்த முகத்துடன் எதிர்கொள்ளும் இனிய இயல்புக்குச் சொந்தக்காரரான வாரியார், ஆன்மீகத் தமிழ்ப் பழமாக விளங்கி, என்றும் அழியாத புகழை நிலைநாட்டி விட்டு, இயற்கை தாயின் மடியில் விழுந்துவிட்டார்' என்றார் கருணாநிதி வாரியார் இறந்தபோது, தமிழ்ப் பெருங்கடல் என்று நாத்திகரான கருணாநிதியே போற்றிய அந்த ஆத்திகப் பெருங்கடல் வாரியார்.

வியாபாரிகளே, நிங்கள் உங்கள் கடையில் எந்தப் படத்தை வேண்டுமானாலும் மாட்டுங்கள்? ஆனால் கலப்படம் மட்டும் வேண்டாம்!

'நேற்று' என்பது உடைந்த மண் பானை 'நாளை' என்பது மதில் மேல் பூனை 'இன்று' என்பது அழகிய ஓர் வீணை! -

வாரியாருடைய இந்த இரண்டு வாசகங்களும் உணர்த்தும் கருத்துக்கள் ஆழமானவை, ஆனால் சொல்லிய விதமோ மிக மிக எளிதான வை. இதை சிந்திக்கும் பொழுது, நம்மை அறியாமல், நாமே உணர்கிறோம்.

'ஆகா.. நம் தமிழ் மொழிதான் எத்தனை அழகானது!' ஆனால் வடமொழியை ஆதரிக்கும் கழுதைகளுக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

ஒருமுறை வாரியார் சுவாமிகள் கூட்டத்தில் இருந்த ஒரு சிறுவனைப் பார்த்து,

'முருகப் பெருமானின் தந்தை பெயர் என்ன?'

என்று கேட்டார்.

சினிமா பார்த்த ஞாபகத்தில் அந்த சிறுவனும் உடனே

'சிவாஜி'

எனப் பதிலுரைத்தான். சுற்றியிருந்த மற்ற வர்கள் அச்சிறுவனை கடிந்தனர். உடனே வாரியார்,

'அவன் சரியாகத்தானே கூறியுள்ளான், அவனை ஏன் கடிந்து கொள்கிறீர்கள்? பெரியவர்களை மரியாதையாக விளிக்கும் போது ஈற்றியில் ஜீ என்று இறுதியில் சேர்த்து சொல்வது வழக்கம். அவ்வாறே இவனும் முருகனின் அப்பனை மரியாதையுடன் விளித்துள்ளான். அவன் சொன்னது சரியே'

என்று சிவாஜிக்கு தமிழில் புது அர்த்தம் சொல்லி நிலைமையைச் சமாளித்தவர் வாரியார்.

வாரியார் அடிக்கடி சொல்வார். முந்துதமிழ் என்று ஏன் சொல்கிறார்கள் தெரியுமா? தமிழ் முந்துமாம். எங்கே முந்தும்?

ஒரு போட்டியில். தடித்த, கனமான எழுத்துகள் உள்ள வடமொழி இன்று பேச்சுப் பயன்பாட்டிலிருந்தே ஒழிந்து செத்துப்போன நிலை. ஆனால் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்பிறந்த மூத்த பழைய மொழியான நம் தமிழ்.. இன்னமும் முடிந்த வரையில் தன்னுடைய தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டு பேச்சு வழக்கிலும் உள்ளது. எழுத்து வழக்கிலும் உள்ளது.

நாளுக்குநாள் அதன் மெருகு கூடிக் கொண்டேதான் வருகிறது. ஒல்லியானவனும் கனமானவனும் ஒரு பந்தயத்தில் ஓடினால், கனமில்லாத ஒல்லியானவன் எளிதில் முந்துவான் அல்லவா? அதுபோல நம் தமிழ் எளிதில் முந்தும்! என்றார் தமிழ் பற்றாளர் வாரியார் அவர்கள்.

- விடாது கருப்பிலிருந்து

FORWARD
REAL ESTATES
Sales, Lettings, Management

"அழியாத செல்வம் மனையொன்றே"...
அதைப்பெற்றுத் தரும் உங்கள் நண்பன்...

PROPERTY & FINANCE CONSULTANTS

With 25 years of combined experience of providing services to the business and community.

GROCERY/OFF LICENCE - WILTSHIRE
£80,000
Forward Real Estates are pleased to present this Grocery and Off-Licence shop in Wiltshire.
The property comprises of a ground floor trading area of about 1,500 sq ft, storage area and 3/4 bed flat on the first floor.
The takings from the shop are £7,000 per week.
The rental income from the flat is £7,200 per annum.

HARROW - £164,950

NEWSAGENT/OFF LICENCE, RICHMOND £77,500

BUSHEY - £249,950


HARROW £479,950

WILLESDEN £245,000



LAUNDERETTE AND DRY CLEANERS - EDGWARE £240,000

HOMEOWNERS/ LANDLORDS!
WE REQUIRE YOUR PROPERTIES FOR SALES/RENT TO OUR WAITING, READY AND ABLE BUYERS AND QUALITY TENANTS.
INAUGURAL OFFER
0.6% ON SALES
5% ON LETTINGS
*Limited Time Only

Try us, be surprised!!! 020 8900 9052
FindaProperty.com
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052
www.forwardrealestates.co.uk and e-mail address: mail@forwardrealestates.co.uk.

ஈலிங் கனகதுர்க்கை அம்மன்

தேர்த் திருவிழா











கலையரசு சொர்ணலிங்கம்

விருது வழங்கும் விழா



ஈழவர் திரைக் கலை மன்றம் ஒழுங்கு செய்திருந்த கலையரசு கே சொர்ணலிங்கம் விருது வழங்கும் விழாவும் புகலிடக் கலைஞர்களின் குறும்பட இறுவெட்டுகளின் வெளியீடும் யூலை 29 ஞாயிற்றுக்கிழமை பிறென்ற் நகரமண்டபத்தில் நடைபெற்றது. நாடக ஆசான் திரு ஏ சீ தாசீசியஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் விழா திருமதி அன்னா ஜோசேப், திருமதி மதி பாலச்சந்திரன் ஆகியோர் மங்கல விளக்கேற்ற அக வணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது

சிறப்பு விருந்தினர்களாகக் கிராமிய கலைகளின் ஆய்வாளரும் பாண்டிச்சேரி பல்கலைக் கழக நுண்கலைப் பேராசிரியருமான திரு கே ஏ குணசேகரனும், ஈழத்துத் தமிழறிஞர் இளவாலை அமுது அவர்களும் கலந்து கொண்டார்கள். பேச்சாளர்களாக வில்லிசைக் கலைஞர் நாச்சிமார்கோயிலடி இராஜன், மூத்த கலைஞர் திரு ஏ ரகுநாதன், விமர்சகரும் கவிஞருமாகிய திரு கி பி அரவிந்தன், டெனிக்ஷ மேடை நடிகர் திரு ரி யோகராசா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

2006ம் ஆண்டிற்கான கலையரசு விருது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைப் பீடாதிபதி திரு பால சுகுமார் அவர்களுக்கும், 2007ம் ஆண்டின் விருது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் நாடகங்களை வழங்கிவரும் திருமதி ஆனந்தராணி திரு க பாலேந்திரா தம்பதியினருக்கு வழங்கப்பட்டது. பாரிஸ் பராவின் 'பேரன் பேர்த்தி', கே எஸ் பாலச்சந்திரனின் வாழ்வெனும் வட்டம், பிரான்ஸ் நல்லூர்ஸ்தான் ஜனாவின் "எது மட்டும்" ஆகிய குறும் படங்கள் இவ்விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

Sri Guru Bramma Astrological Centre

ஸ்ரீகுருப்பிரம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் (Bramhacharya) **ஜெயராம் மகாயோகி சாஸ்திரி**

Astrologer (Bramacharya) Pandit Jayaram Mahayogi Specialist in all kinds of astrology & Palmistry

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாமநட்சத்திரம், ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒருமுறை சந்தித்துப்பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் விசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, ஜனவசிகம், செய்வினையால் பாதிப்புடைந்தவர்களுக்குப் பரிகாரம் வழங்கப்படும். அனைத்துவிதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். பேசப்படும் மொழிகள் தமிழ், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம். உங்கள் பிரச்சினைகளுக்கு ஏற்ப பூசைகள் செய்து தீர்த்து வைக்கப்படும்.

You will know about your past, present and future by Palm Prediction | Horoscope | Face Reading | interesting persons may contact about your job | Family Matters| Education | Business |Marriage | Sickness | Family Problems | Children Problems | Immigration | Visas | Abroad | Money | Relationships etc.

We solve your problems by worshipping Gods Prayers, Poojas, Devi Upasanas, Lakshmi Pooja, Homas, Prayers etc.

Spoken Languages: Tamil, Hindi, Englsih & Sanskrit

Call: **07908 328 788**

17A, LEE HIGH ROAD, LEWISHAM, LONDON, SE13 5LD Near to **ARRU SUVAI** Sri Lankan & South Indian Restaurant, (Opposite Sivan Temple)

Opening Hours: **8.00 a.m – 9.00 p.m** Seven days a week

India and Pakistan 60 years after independence and Sri Lanka



Charles Somasundrum
FOR ORUPAPER

Sixty years ago, India and Pakistan attained their independence. The departing British broke up 'British India' into two segments, India and Pakistan. In breaking up British India, the British showed the same disregard for national identity as they were to show in Sri Lanka shortly after.

The British, having decided to carve out two countries out of their Indian Empire, 'imported' a British judge Cyril Radcliffe to determine the boundaries of each of these two countries. This man Radcliffe had never been to British India before its partition and never visited India or Pakistan after. He was neither a historian nor even a geographer and was probably appointed by the British government because he had been a judge and maybe, had a 'sound' upper middleclass background. On arriving in India, he perhaps sat at one of the ornate tables in one of the many opulent offices of the British Raj, with a map of British India before him and determined the fate of millions of persons by drawing an arbitrary line on the map, to determine which parts should go to India and which to Pakistan. It is clear that the British government of the time had little understanding of the enormity of human suffering he was to create. He even dreamed up, an 'East Pakistan' that had no geographical link with the rest of Pakistan, being separated by the vast land mass of India from main Pakistan. Needless to say, this East Pakistan decided in time, that it would be independent of main Pakistan and, broke free, with the help of India under Indra Gandhi, and set up Bangaladesh.

This break up of British India it is believed, resulted in up to half a million people being killed and tens of thousands of women, both Hindu and Muslim, being raped or abducted. Over 10 million persons of varying religious or racial hues were displaced. The story of British departure from India is a terrible story of British inefficiency, ineptitude and callous indifference. The British Empire was run by upper middle class or aristocratic British administrators often barely out of their teens, who had little special training for the work they were to perform but had the right 'connections'. These persons were mostly, products of the British public schools with their narrow outlook and a belief in a God given duty to 'rule' the natives. God and Empire, was their cry.

Today, many persons believe that the violence in the sub continent started overnight after partition and independence. This was not so. Violence had commenced long before independence. The Gandhian non-violent struggle for independence had gradually become a violent struggle, in isolated pockets of the country. This violent struggle was however directed against the British and was part of the struggle for independence. However, with the arrival of Mountbatten as Viceroy under the new Atlee Labour government, most Indians clearly expected that independence would not be far away. This is when racial violence commenced, particularly in places like Kolkata (Calcutta) and the Punjab.

During all this bloodshed and violence in the sub continent of India, Ceylon (Sri Lanka) experienced comparative peace and calm. The Island had a parliament very recently elected, under a constitution introduced by the Soulbury constitutional commission. The country, at that time, was multi cultural in nature. English was the official language as also was the medium of instruction in schools. Having a single language for the running of the government and conducting business, along with the same language as a medium of instruction in schools, led to an intermingling of the different religious and racial groups. In schools, students of different racial and religious groups got together in the classroom or in the playground and this led to tolerance and understanding.

> George Washington and the Continental Army would be terrorist organisations, and the Boston Tea Party a terrorist act

Ceylonese (Sri Lankans) of the day, felt themselves superior to the Indians or the Pakistanis. Ceylon, in the early years of independence, had a population that was highly literate and cultured. Most Sri Lankans could read and write if not in English at least in Sinhala or Tamil. These were the halcyon days of the island when even policemen understood, spoke and responded in English, while all government departments conducted their work in English. A Ceylonese who went abroad for study, in whatever discipline, in an English speaking country, had no difficulty in easily melding with the local people.

However, the British had sown the seeds for future unrest. In British India Cyril Radcliffe had laid the scene for the traumatic displacement of over 10 million persons. In Ceylon, Lord Soulbury laid the scene for a proportionately smaller but equally traumatic unrest particularly affecting the Tamil nation. Thanks to Professor Suntheralingam, Lord Soulbury has admitted that he had erred in not providing safeguards for the smaller Tamil nation on the island.

There is no doubt that the British colonial rulers blundered when they granted independence to the island. Unlike in India, where they were confronted by numerous large and small princely states apart from the Mughal Empire, in the island of Ceylon, they were confronted by two nation states – the Sinhala and the Tamil. Yet, where in India they split their Indian Empire into two (that later became three) states, in Ceylon, they forced the Tamil nation into submission as a subordinate slave nation under the Sinhalas.

The Tamil nation, after years of blatant discrimination and treatment as a virtual slave nation, has been fighting for the last 30 years for their independence from Sinhala tyranny and the right of self determination. But, what have the British government done in response? They have branded the Tamil freedom fighters as 'terrorists'!

Karen Parker the American lawyer in Human Rights and Humanitarian Law has this to say about the Tamil freedom fighters. 'The war in Sri Lanka is between the government's armed forces and those of the Liberation Tigers of Tamil Eelam (LTTE). The LTTE are a military force, with an identifiable chain of command and territory under their command. The LTTE combatants are in military uniform, carry out military operations on land, sea and in the air that under international rules are legal military operations. The LTTE is fully entitled to combatant status under humanitarian law.'

Apparently the British government feel that by labelling the freedom fighters as 'terrorists' the problem they caused, will go away. As Karen Parker says in her briefing paper to the All Party Parliamentary Group (APPG) that under the U.S. use of the term 'terrorists', 'George Washington and the Continental Army would be terrorist organisations, and the Boston Tea Party a terrorist act.'

It is sad that today, while both India and Pakistan are celebrating 60 years of independence with all indications that they will take their due place before long, among the leading world powers, Sri Lanka, that gained independence around the same time with all the promise and great expectations, has fallen by the wayside. Today, Sri Lanka is just a 'Banana Republic' with semi educated legislators who are interested only in lining their own pocket, with rampant corruption both among the legislators and the administrators. To quote Karen Parker once again, now that Russia is seeking to sell offensive jet aircraft to the Sri Lankan government ostensibly to offset U.S. aid 'So now we have a US/Russian war by proxy in Sri Lanka with the annihilation of the Tamil people a real possibility.'

Rajapakse government achieve world record

President Rajapakse of Sri Lanka recently went on an official visit to China.. Guess the number of people who went with him as part of his entourage? One hundred and ninety two! Among the delegation were 16 Ministers, 60 Officials including media and security personnel, and six chefs. There were twelve members in the Buddhist delegation and 54 in the business team. The government spent Rs.54 million out of public funds. Other monies included Rs.27 from the Presidential allocation. The total air fare of the tour cost Rs.24 million.

These staggering figures were given in parliament by Chief Government whip Jeyraj Fernandopulle on August 8 in response to an oral question raised by UNP M.P. Ravi Karunanayake.

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

Opportunistic Politics Never Serve a Community

M Shahabdeen
MUSLIM GUARDIAN

At a time when discussions and dialogues on how to tackle the challenges facing the Muslims are taking place in various parts of the country, the unmindful Muslim leadership and parties are moving their dices with the only thought of acquiring power to them and their political parties.

Political parties representing the minorities cannot follow in the footsteps of their counterparts in the major community who engage in opportunistic politics and, in order to win power, talk and work to suit the circumstances. None of their actions ever affects the well-being of the Sinhala community. Whenever a government changes hands, the interests of the Sinhala people are even better served than before while conspiracies and treacheries against the minorities are always increased. When the parties of the minority take to opportunistic politics with only power and prestige as their ultimate goal, then the community aligned to these parties suffers severe setbacks.

In the current political set-up in Sri Lanka, many Muslim politicians are observed to undertake opportunistic politics resulting in their community facing serious problems. The Muslim intelligentsia and other civil societies are highly worried over this situation.

At a time when discussions and dialogues on how to tackle the challenges facing the Muslims are taking place in various parts of the country, the unmindful Muslim leadership and parties are moving their dices with the only thought of acquiring power to them and their political parties.

All the Muslim parties are now within the government ranks; yet, none of them have formulated and acted on any plans to uplift the condition of the community. They are all aligned together, but the leaderships are engaged in severely criticizing one another and are conducting politics of criticism the result of which is the increase in the number of divisions and disputes. The only intent of the Muslim parties is that under no circumstances should an opposing party and its leadership secure any gains at one another's expense.

When the Muslim Congress sat on the opposition benches, the Muslim leadership within the ruling clique invited them to join the government, and when they showed their reluctance, they were accused of being part of the United National Party incapable of escaping its clutches. Meanwhile, for their part, the Muslim Congress went on criticizing the government and its Muslim Ministers and parliamentarians.

While the opposing parties continue to heap criticism on the Muslim Congress who joined the Government despite criticizing it severely, all the parties keep on pouring their praise on the President and the Government.

Praising the Government and all other related gimmicks are carried out in order to enhance the authority of the Ministerial post. With the Ministerial posts they have obtained, they have been improving the development work of the lands of their birth greatly while only affording step-motherly treatment to their neighbouring villages, but, in the guise of development, the fundamental rights and the lands of the Muslims can never be lost.

Exploiting the opportunistic politics undertaken by all the Muslim political leaderships to suit their needs, the chauvinistic majority has been working hard to weaken the Muslims.

The major problem facing the Muslims today is the protection of their land and properties and recovering whatever they have already lost. The history is yet to witness of any party, claiming and clamouring to identify themselves as the voice of the Muslims wherever they go, to express their genuine concern for this sorry situation or to speak strongly against it. The land and properties of the Muslim community have become a question mark. So has its security. The Muslims are being murdered daily by unknown persons and this trend keeps on increasing by the day.

The people's representatives of the Muslim community experiencing various such calamities shed only crocodile tears and are never known to express their sympathies openly with an iota of sincerity. The Muslim ministers enter into discussions with no detriment visiting their power or position. The problems of the Muslim community are just a talking-point confined only to the election time.

Only when the time of election approaches, the Muslim political leadership shows sudden interest in the affairs of the community. When that is over, their lust for power makes them seek justification for the blunders committed by the chauvinistic majority and for the systematic and well-planned actions it perpetrates on the community.

In the course of Sri Lanka's political history, the promulgation of Sinhala as the Official Language in 1956, the Constitutions introduced in 1972 and 1978, the riots of July 1983, and the Indo-Sri Lanka Pact of 1987 severely affected the minority community.

The ethnic problems of the North-East in the 1990s outdid all of the above and brought about in their wake untold misery to the Tamil and Muslim communities and caused loss of properties worth millions of rupees.

The difficulties suffered by the Muslim community in today's environment are even worse than those suffered during the above period. The Muslim political parties who have no time to undertake any meaningful action to arrest this trend are just busy singing their own praises.

At a time when communal politics reigns supreme, it is imperative for the present day Muslim parties to unite together. They must do so at least to safeguard the fundamental rights of the Muslims.

However, the Muslim leaderships or the politicians are only hell-bent on parading as ministers, and when they fail to secure any ministerial post, they do not hesitate to run protest campaigns, take their supporters to the streets and to cross over to another party.

No Muslim politician is known to have changed allegiance to a party or to have forsaken his position for the sake of the community.

Instead of pinning their hopes on the politicians for their redemption, the Muslim community should set up pressure groups to control the political parties. These groups should be able to command the respect of all the Muslims and be capable of devising beneficial plans and placing them before the community. Otherwise, the so-called political leadership will leave the community in the lurch.

Ranil, what is your game?

Dr. Vickramabahu Karunaratne

Ranil has made remarkable radical comments. We classified him as the rightful heir to Yankee dicki - late Mr. JR Jayewardene. Old left never expected JR's political descendants to come out with radical comments. But then they never expected JR to give upcountry Tamils full citizenship nor grant the parity of languages nor the self rule to Tamils in their Tamil home land. True, JR couldn't grant real autonomy to Tamils; but after Perumal -the Sapumal Kumar- at the time of Perakumba the sixth, JR is the only head who could install a ruler, another Perumal, for the Tamil homeland. We have to accept grudgingly that according to the theory of permanent revolution this is a rare occurrence. In addition JR was bold enough to name a person not connected to the traditional elites, Mr. Premadase, as the next presidential candidate and did every thing to make him win. As a samasamajist I was angry, but shamefully happy that some body was implementing part of our programme. So the lesson is in a time of turmoil even the most loyal guardians of the establishment of the capital could carry out radical reforms in order to save the system.

Radical reforms

So Ranil's attack against the JHU monks is for a historic purpose. These reactionary monks preach some thing and do the very opposite. What ever Champika says, rev Rathene came out with the truth. He clearly said that they made money out of the privilege given and put it to the good use of developing the party. I could say the same; but only thing is we both are going against the present laws and ethics. If rev monk can break laws and ethics of the society then Piribhaharan also can do it for political purpose. But JHU singularly argues that the LTTE should be arrested for breaking the laws of the country irrespective of the sociopolitical issues involved. Their simple argument is that LTTE is breaking the law; hence crush them and bring them under the rule of law. On the same argument we could say bring rev Ellawela Medananda under the rule of law. Beyond this Ranil's argument is not clear. Is he suggesting that rev. Medananda should have got down a jeep model hardy vehicle for visiting the electorate? Ranil raised the question that Benz is a luxury vehicle not suitable for the general use of a parliamentarian. Then why was he using it. What is not good for the political monk is suitable for lay politicians?

Where is Ranil going?

Still it was very bold of Ranil to challenge the hegemony of JHU monks. Against the howling of Buddhist sectarians he went on attacking, taking examples from the history. He came out with some details of the campaign of the Weliwita Sri Saranankara thero. This time he has done his paper work; so that even Wimal Weerawansa could not ridicule him. Also, the JVP leaders were not interested in protecting the JHU. Now the question is where is Ranil going? He has also taken a strong stand against the school entrance method in the offing. For a man who stands for a market economy this is a strange stand to take. In an open economy market is the controlling factor. Welfare state should be done away with. That means free food; free health, free education etc must go. Now it is happening as Mahinda is following Ranil in his foot steps.Good schools for the rich and powerful; lesser schools for the poor. So why did Ranil come out so strongly against the very principles of open economy and condemn the blasting attack on fee education. This is not only a democratic issue but it is also a social issue: a class issue, in our language.

OK Ranil, things are very, very bad. Mahinda is a very bad man but what is your game?

H.E.M. GROCERIES
No 8, Selkirk Road Tooting,
London SW17 0BS
Opposite Lane to Primark

ஸ்ரீ மாரியம்மன் ஜோதிடம் நிலையம்

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **பண்டித் மஞ்சுநாத சாஸ்திரி** அவர்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், வக்கீல் விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஏவல்கள் அகற்றிக் கொடுக்கப்படும்.

An expert pandit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, Job, Love, Marriage, Family problem, Sickness, Promotion, Visa, Court, lottery, abroad, money, Removal of enemy. All types of black magic and evil things removed. **All Matters will be kept in secret. Spoken languages: Tamil, Hincli, Telugu, Kannada & English.**

TEL: **07960 604 990** OPENING HOURS : **8.AM - 8.00PM - 7 DAYS**

21 பிறிக்சொற்க் றோட்,
தோண்டன் கீத், குறையட்டன்

தொலைபேசி:
020 8689 3466

ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்

ஆறாம் ஆண்டு

அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம்

05.09.2007 புதன் முதல் 19.09.2007 புதன் வரை

பக்தப் பெருமக்களே!

எல்லாம் வல்ல ஸ்ரீ சக்தி கணபதி பெருமானின் ஆறாம் ஆண்டு அலங்காரத் திருவிழாவானது நிகழும் மங்களகரமான சர்வஜித் வருடம் ஆவணித்திங்கள் 20ம் நாள் (05.09.2007) புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் 19.09.2007) புதன்கிழமை வரை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

திகதி	கிழமை	தினசரி	காலை	மாலை	நிகழ்ச்சி
05.09.07	புதன்	10:00	கணபதிஹோமம்	7:00	கலை நிகழ்ச்சி
தொடக்கம்			21 கலச அபிசேகம்	8:00	மஹா தீபாராதனை
19.09.07	புதன்	12:00	மஹா தீபாராதனை	8:30	விசேட அலங்காரத்தில்
வரை			தொடர்ந்து அன்னதானம்		விநாயகர் வீதியுலா, மகாபிரசாதம்
05.09.07	புதன்	9:00	தேவதா அனுக்ஞை		**(இலட்சார்ச்சனை ஆரம்பம்)**
06.09.07	வியாழன்	10:00	துவஜாரோகணம் (கொடியேற்றம்)		
10.09.07	திங்கள்				**மாம்பழத் திருவிழா**
10.09.07	புதன்				**வேட்டைத் திருவிழா**
10.09.07	வெள்ளி				**சப்பறத் திருவிழா** (இலட்சார்ச்சனை
பூர்த்தி)					
15.09.07	சனி		**தேர்த் திருவிழா**		
		10:00	108 சங்காபிசேகம்	5:00	தேர் வெளிவீதிப்பவனி
				8:00	பச்சைசாத்துதல்
16.09.07	ஞாயிறு	12:00	**தீர்த்தத் திருவிழா**		கொடியிறக்கம்
			(வெளிவீதியில் நீர்த்தடாகத்தில்)	துவஜாவரோகணம்	
16.09.07	திங்கள்				**பூங்காவனம்**
16.09.07	செவ்வாய்				**திருவூஞ்சல்**
16.09.07	புதன்				**வைரவர் மடை**
					(வெளிவீதியில் பொங்கல்)

அடியார்கள் அனைவரும் காலையும் மாலையும் இடைவிடாது ஆலயத்திற்கு வருகை தந்து ஸ்ரீசக்தி கணபதிப் பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்..

ஆலயக்குருக்கள் நிர்வாகத்தினர், உபயகாரர்கள் மற்றும் விநாயக அடியார்கள், மேலதிக தொடர்புகட்கு: 020 8689 3466

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது என்னவெனில்...**

ஒப்புதல் வாக்குமூலம்-3:

2 கதை சொல்லும் காலம்

அப்படி எதுவும் ஆகவில்லை. தாசீசியஸ் குறுக்கிட்டார் இவர் விக்கி. விக்கினராசா. திருநாவுக்கரசு இவர்தான் ஜபிசியின்ற உதவிப் பணிப்பாளர். இப்பவும் பிபிசியிலை வேலை செய்யிறார். அங்கை போட்டுத்தான் வாறார். ஜபிசிக்கு எல்லாம் இவர் தான், நான் சும்மா இருக்கிறன். விக்கியிடம் என்னை ஒப்படைத்து விட்டு வேலை இருக்கிறதாக தாசீசியஸ் போனார். குசினிக்குள் போய் விக்கி சாப்பாட்டுப் பெட்டியை எடுத்தார். மைக்ரோ அவனில் வைத்து சூடு காட்டினார்.

கொஞ்சம் சாப்பிடுங்கோ என்றார் அய்யோ வேண்டாம்' என்றேன். அவர் கையை பிடித்திரா விட்டால் ஊட்டியே விட்டிருப்பார் போல இருந்தது. அவருக்கு இது அளவுக்கதிகமோ என்று யோசித்தேன் அல்ல நெடுத்ததற்கும் பருத்ததற்கும் இது தேவைதான் என்றது மனது.

விக்கி கதைவாக்கில் தானும் 'தமிழ் சிறப்பு' தான் என்றார். ஆனால் அது சென்னை லயோலா கல்லூரியில் மேலும் கதைக்க 'நாடகம்' என்றொரு விசயம் பிரதானமாக இருந்தது. 'நாராய் நாராய்' என்று சென்னைக்குப் போன பயணத்தையும், அங்கு சிதம்பர நாதன், பிரான்சில் ஜெனம் இவர்களுடன் கிடைத்த அனுபவத்தையும் வா யூறச் சொன்னார்.

என்னைத் தனிய விட்டு செற்றியில் கண்ணயர்ந்தார் விக்கி. போக்கிடம் இல்லாமல் மீண்டும் தாசீசியசின் அறையில் புகுந்தேன் 'வாரும்' என்று கலையகத்துடன் கூட்டிச் சென்றார்.

நான் பார்த்தது வினோதமான நிகழ்வு ஜபிசிமாமா. தாசீசியஸ் நிகழ்த்துகிறார். ஜரோப்பா எங்கும் இருந்து குழந்தைகள் தொலைபேசியில் வருகிறார்கள். தாசீசியசுக்குத் தெரிந்த நாடக அரங்கு கைகொடுக்கிறது. குழந்தைகளுடன் தொலைபேசி ஒன்றில் போசுகிறார்.

நான் அப்போது என் குழந்தைகளை எண்ணுகிறேன் நான் என் குழந்தைகளை ஆறு வயது நிறைவுறுகையில் விட்டு வருகிறேன். வந்து இரண்டு வருடமாகிவிட்டது. கலங்கிப் போனேன் நான் கண் தளும்புகிறது.

பொழுதுபட்டாயிற்று நான் புறப்பட வேண்டும். வெளிக் கிட்டேன். சேர் நான் புறப்பட வேண்டும், வெளிக்கிட்டேன் 'சேர் நான் வாறன்.... நாடகம் ஏதும்...!

நாடகம் பற்றிக் கதைக்கிற தெண்டால் இங்கை வர வேண்டாம். என்று

இரவு தொலைபேசி. தாசீசியசின் குரல் ஜபிசியிலை வேலை செய்ய விருப்பமா? நாளைக்கு ஒருக்கா வாருமன்

3 புதியதோர் உலகம் செய்வோம்

1997 செப்டம்பர் 24 ஆம் நாள் புதன்கிழமை

ஜபிசி தமிழில் என் வேலை தொடங்கிய நாள் வெள்ளையாக வெளிச்சம் இருந்த பகல் நாளில் நான் போனேன் கழுத்துப் பட்டி கட்டியிருந்த சிறிதான் மனேச்சர் என்றார் தாசீசியஸ் கண்ணாடி பொருத்த மில்லாத அந்தச் சின்ன முகத்தின் கண்களில் நித்திரை கொள்ளும் தேவை நிறைய இருந்தது. இரவிரவாக பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் வேலை பகலில் ஜபிசி உள்ளே நுழைந்த நேரத்தில் நான் இன்னொரு வரைக் கண்டேன். எனக்கு மிகத் தெரிந்தவர் ஆனால் அவருக்கு என்னைத் தெரியுமோ தெரியாது.

சிதம்பரநாதன் நெறியாள்கை செய்த உயிர்த்த மனிதர் கூத்து' நாடகத்தில் பாடகர் குழாத்தில் இருந்தவர் யசோதா. எனக்கு உங்களை தெரியும். நீங்கள் யசோதா தானே நான் சிதம்பரநாதனின் பிரேன்ட்' என்றேன். ஒரு புன்னகை தந்து உங்களைத் தெரியும்' என்ற மாதிரிச் சொன்னார். நான் இங்கை வேலைக்கு வந்திருக்கின்றேன் என்று சொன்னேன். அப்படியா? என்று ஆச்சரியத்தையும் மகிழ்வையும் தந்தார் என நம்புகிறேன்

வழமைபோல் மதியத்திற்குச் சற்று பின்பாக விக்கி வந்தார். நான் வேலையில் சேர்ந்த விசயம் அவருக்கு தெரிந்திருந்தது. வாங்கோ நிறையச் செய்யலாம் என்ற வார்த்தையே விக்கியின் வாயிலிருந்து வந்தது.

இம்முறையும் ஒரு வாய் உண்ண தன் சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்து கேட்டார். மறுத்து அங்கிருந்த பாண்துண்டை பட்டர் பூசிக் கடித்தேன்.

சுழட்டி அடிக்குது என்றார் விக்கி. செற்றியில் தன் நெடுத்த உடலைச் சரித்தார். அமலசுதன் கூட்டிச் சென்று பாடல் சீடீக்களைக் காட்டினார். எனக்கு மிக ஆர்வமான பகுதி அது. அதில் தான் எனக்கு செய்ய வேலைகள் இருந்தன. ஆனால் என்ன வேலை செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை ஆனால் இன்னொரு நிகழ்ச்சியைத் தயாரிப்போம் என்று உன்னினேன். என க்குப் பிடித்த பழையபாடல் ஒன்றினை எடுத்தேன்.

'செந்தூர் முருகன் கோயிலிலே ஒரு

சேதியை நான் கேட்டேன்

சேவல் கூவும் காலை நேரம்

பாடலை நான் கேட்டேன்'

எனக்கு மிகப்பிடித்தமான சீனிவாஸ். சுசீலாவின் குரலில் பாடல் அது இந்தப்பாடல் குறித்து ஒரு நிகழ்ச்சி செய்வோம் என எண்ணினேன் பிரதி ஒன்றை அழுதத் தொடங்கினேன். அந்தப்பாடலில் இருந்த கவித்துவத்தை பிரதி தொட்டுச்சென்றது

'நாளை வருவான் நாயகன் என்றே

நல்லோர்கள் சொன்னாரடி

ஆடை திருத்தி மாலைகள் தொடுத்து

வாசலில் நின்றேனடி...

என்று போகிற பாடலில் பிரதி நிறைவு பெற்றது இனி அது பதிவு செய்யப்பட்ட வேண்டும். பாடலை இணைக்க வேண்டும் இடைவெளி இல்லாமல் பிசிறு இல்லாமல் தொகுக்க வேண்டும். சிறி இதற்கு உதவி செய்தார் மிக விரைவில் நான் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றேன்.

பிரதி எழுதுதல் மாத்திரமே கலையுடன் சம்மந்தப் பட்டது அல்ல தொகுத்தல் (Editing) என்பதுகற்பனையின் பாற்பட்டது என உணர்ந்தேன். திரைப்படப் பாடல் களின் கவித்துவம் பற்றிக் கதையாடுவதற்கான இந்த நிகழ்ச்சிக்கு என்ன பெயர் வைக்ககலாம்? சட்டென வே வந்த பெயர் கவிதை சிந்தும் நேரம்! ஜபிசியில் எனது முதலாவது நிகழ்ச்சி கவிதை சிந்தும்நேரம். முதல்நாளே, முதல் நிகழ்ச்சி வானலையில் பரவுகிறது. அப்பொழுது நேரம் இரவு 9 மணி.

- வரும்

கம்பரும் ஷங்கரும்!

சமீபத்தில் பார்த்த படம் சிவாஜி சமீபத்தில் வாசித்துக் கொண்டிருந்த இலக்கியங்களுள் ஒன்று கம்பனின் கும்பகர்ண வதைப் படலம். ரெண்டு பேருமே காஸ்ட்லி பூவைக் காதுல சுத்தறதுல பெரிய ஆளுங்க. ஏன் ரெண்டு பேரையும் ஒப்பிட்டு எழுதக் கூடாதுன்னு தோணுச்சு.

அதுதான் இந்தப் பதிவு. தூங்கிகிட்டு இருக்கிற கும்பகர்ணனை எழுப்பின பிறகு அவன் எழுந்து நிற்கிற காட்சியை வருணிக்கும்போது கம்பன்

விண்ணினை இடறும் மோலி விசும்பினை நிறைக்கும் மேனி
கண்ணென அவை இரண்டும் கடல்களிற் பெரிய வாகும்

அப்படின்னு சொல்லுறாரு (மோலி - கிரீடம்; விசும்பு - வானம்). எவ்வளவு பெரிய உருவம்!! ஆனால் இந்தியன் படத்துல கமல் சும்மா கம்முன்னு ரேஸ் காருக்கு கீழ படுத்து உயிர் தப்புகிறாரு.

தூங்கி எழுந்த கும்பகர்ணனோ அறுநூறு வண்டி அரிசியும், நூறு நூறு குடம் கள்ளும் நுங்கி ஏறுகின்ற பசியை எழுப்பிகிறான். காதலன் படத்து ஹீரோவோ 60 விநாடிக்குள்ள ஜி. எச். ல் இருந்து நேபியர் பாலம் வரை நெரிசல்களுக்கு நடுவே ஓடிப் போய் குண்டு வெடிக்காம தூக்கி எறிவாராம்.

செத்து போன தம்பியை மடியில் போட்டு அழும் இராவணன் (இப்பகுதி கும்பகர்ண வதைப் படலத்தில் இல்லை) வங்கக் கடலில் குளித்தால் இமய மலையில் கால் வைத்து தேய்ப்பாயே என்று புலம்புவான். சிவாஜியில் செத்துப் போன சிவாஜி சில மணிநேரங்கழித்து உயிர்பிழைத்து எழும்புவாராம்.

போர்களத்தில் ஒரு காலை வெட்டிய பிறகு கும்பகர்ணன் நொண்டி நொண்டி சண்டை போடும்போது குழியாகிப் போன இடங்களில் எல்லாம் வங்கக் கடல் நீர் வந்து நிரப்புமாம். அந்நியன் படத்திலோ ஒரு அரை லூஸு யாருக்கும் தெரியாம போஸ்டர் அடிச்சு ஒட்டி நேரு ஸ்டேடியத்துல மீட்டிங் நடத்துவாராம். இதைப் போலீஸ் கண்டுபிடிக்க முடியாம திண்டாடுமாம் (இருந்தாலும் தமிழ்நாட்டு போலீஸை இவ்வளவு மட்டமா நினைத்திருக்க வேண்டாம்).

இப்படி ரெண்டு பேரும் சுத்துகிற பூக்களைக் கண்ணி கண்ணியா கட்டிகிட்டே போகலாம். அதுக்கு முடிவே இல்லை. ஆனா கம்பன் சொல்லுகிற ஒவ்வொரு உயர்வுநவிற்சிக்கும் ஒரு காரணம் இருந்தது.

உதாரணமாக கும்பகர்ணனின் தோற்றமும் சாப்பாடும் அவன் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கப் பிறந்தவன் என்பதை நினைவுபடுத்த வலியுறுத்த இருந்தது. அவருடைய கற்பனை இலக்கியத்தை வளப்படுத்தியது. ஆனா ஷங்கர் சுத்துகிற பூவையெல்லாம் என்னன்னு சொல்லுவீங்க? கேக்குற வன் கேனையா இருந்தா எருமை மாடு கூட ஏரோப்லேன் ஓட்டும்னு எங்க ஊர்ல ஒரு பழமொழி சொல்லுவாங்க. அதைத்தான சீனுக்கு சீன் நிரூபிக் கிறான். இன்னுமா நம்ம கேனையா இருக்கிறது. இது சம்பந்தமா நீங்களும் சிந்திச்சிருந்தா கொஞ்சம் சிந்திட்டுப் போறது?..

- அபன்

Tamsons

Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR

Tel: 020 8313 0800

யார் இந்த ரஜினிகாந்த்

பரதேசி
(ஒரு பேப்பருக்காக)



ஒரு சிகரெட்- அது கையிலிருந்து சடக்கெனப் உதட்டில் பொருந்திக் கொள்ளும் விந்தை பட்டுப்போல் மிருதுவான, ஆனால் கறுத்து அடர்த்தி மிகுந்த தலைமுடியை கோதிக் கொள்ளும் இலாவகம் உடம்பிற்குப் பொருந்தாத ஒல்லிக்கால்களின், சக்தி மிகுந்த வேகமான நடை, கைவிரலின் சொடுக்கு, மின்னல் கீற்றாக கழுத்தை வெட்டி ஒரு பார்வை, பார்வையின் வீச்சு மற்றும் வசீகரம்! இவைதாமா ஒரு பேரூந்து நடத்துனரை 'சூப்பர்ஸ்ரார்' என்னும் அந்தஸ்த்திற்கு உயர்த்தியது? அதனை நான் நம்பவில்லை இன்னும் சொன்னால், இவ்வாறான நடிப்புப் பாணி ரஜினிகாந்திற்கே தனித்துவமான தூரிய தொன்றல்ல உத்தம புத்திரன் திரைப்படத்தில் "யாரடி நீ மோகினி' பாடல் காட்சியில் சிவாஜி கணேசனைப் பார்க்கின்ற போது, ரஜனி காந்தின் நடிப்புப் பாணியினது மூலக் கூறினை காணலாம் ரஜினிகாந் தான் சிவாஜிகணேசன், இந்தி நடிகர் சத்ருகன் சின்னா ஆகியோரது நடிப்புப் பபணியைப் பின்பற்றுவதாகக் கூறி உள்ளார்.

இவ்வாறு சொல்வதனால் எல்லாம் ரஜினி காந்த் தனித்துவமே அந்த நடிகர் என்று யாரும் கருதி விடக்கூடாது. தமிழ்த்திரையின் சிறந்த நடிகர்கள் என்று ஒரு பட்டியல் இட்டால் அதில் ரஜனிகாந்தும் ஒருவராக இருப்பார்.

சிவாஜிகணேசன், எம்.ஆர்.ராதா, பாலையா, ரங்காராவ், எஸ்.வி.சுப்பையா, முத்துராமன், நாகேஸ், சாவித்திரி, பத்மினி, லட்சுமி, கமல்காசன், சிவகுமார், ஷோபா, சுஜாதா, சரிதா, அர்ச்சனா, ரஜினிகாந்த், சத்யராஜ், கார்த்திக், கரன், பிரகாஷ்ரர், விக்ரம், நாசர், போன்றோர் என் அறிவுக் கெட்டிய வரையில் தமிழ்த்திரையின் சிறந்த நடிகர்களுக்கான பட்டியல், ஆனால் இவர்கள் பலரது நடிப்புத்திறன் வர்த்தக நோக் கத்துக்காகப் பலியிடப்படுவதுண்டு நுட்பமான நடிப்புத்திறத்தால் ரஜினிகாந்த் ஆரம்பத்தில் நல்ல பெயர் வாங்கினார் ரஜனிகாந்தின் நடிப்புத்திறம் பார்க்க எழுபதுகளின் பிற்கூற்றில் பல திரைப்படங்கள் இருந்தன.

விதந்து போற்றுவதென்றால், மகேந்திரன் எழுதி முதலில் இயக்கிய முள்ளும் மலரும் திரைப்படத்தைக் குறிப்பிடலாம். அதில் ரஜனிகாந்த் ஏற்ற காளிபாத்திரத்தின் நுட்பமான நடிப்புத் திறனை வேறு எவரினாலும் அவ்வளவு திறம் படச்செய்திருக்க முடியாது.

முள்ளும் மலரும் திரைப்படத்தில் நடிப்பதற்கு ஆரம்பத்தில் கமல்காசனே அழைக்கப்பட்டிருந்தார் அந்த காளி என்னும் பாத்திரத்தின் பொருத்தம் கருதி கமல்காசனே ரஜினிகாந்தை சிபார்சு செய்தார்.

ரஜனிகாந்தின் நடிப்புத்திறன் குறிக்க, வேறும் சில உதாரணங்களை தரலாம். ருத்ரைய் யாவின் அவள் 'அப்படித்தான்' திரைப்படம் பார்த்திருக்கின்றீர்களா? தமிழில் வந்த மிக நல்ல திரைப்படங்களில். அது ஒன்று.

அதில் ரஜினிகாந்தின் நேர்த்தி யான நடிப் பாற்றலைக் காணமுடிகிறது. மணி ரத்தினத்தின் 'தளபதி' ரஜினிகாந்தின் நடிப்பை சிலாகிக்க வைக்கின்ற ஒரு திரைப் படம் நீங்கள் ஒரு அதிகம் பார்த்திருக்கக் கூடிய சின்ன உதாரணம்.

மன்னன் திரைப்படத்தில் "அம்மா என்றழைக்காத" என்னும் பாடல் காட்சி ரஜினிகாந்தின் இயல்பான நடிப்பினை அதிகம் காணலாம். இதில் இன்னுமொன்றையும் சொல்ல வேண்டும் ரஜனிகாந்தின் நடிப்பில் உண்மைத்தன்மை உணரலாம். ரஜினிகாந்த் ரஜனிகாந்தாகவே நடிப்பார்.

இன்னொரு பாத்திரமாக ரஜினி காந்த் மாறுவது, அவருக்கு இயலாத ஒன்று அதுவே அவரது பலமாகவும் ஆகிவிட்டது அவருக்கு வெற்றியையும் அது சமைத்துக் கொடுத்தது.

ஒரு கேள்வியாகக் கேட்பதென்றால் ரஜனி காந்தின் ஒரு புகைப்படத்தைக் கொடுத்து ஈது எந்த திரைப்படத்து ரஜனிகாந்த்? என்று கேட்டால் உங்களின் யாராவது பதில் சொல் வீர்களா?

இவ்வாறான கேள்வியை எம்.ஜி.ஆர் மற்றும் விஜய் குறித்தும் கேட்டுவிட முடியும். திரைப் படங்களிள் ஆழ்ந்த பரிச்சயம் உடையவர்கள் சிவாஜி கணேசனின் புகைப்படத்தை பார்த்தும் இது எந்தத்திரைப் படம் என்று கண்டு பிடித்து விடுவார்.

ஓரளவு கமல்காசனுக்கும் இது பொருந்தும். அவ்வாறான ஒரு கூற்றை முன் வைத்த போதிலும், ரஜினி காந்தின் நடிப்புப்பாணியே அதிகம் பேரைக் கவர்ந்து இதில் இன் னொன்றையும் சொல்லியாக வேண்டும்.

ஒப்பீட்டளவில் சிவாஜிகணேசனிலும் பார்க்க, எம்.ஜி.ராமச்சந்திரவிற்கும் அதிக இரசிகர் கூட்டம் இருந்த போது எம்.ஜி ரின் நடிப்புபாணி பிடித்து, இரசிகர் கூட்டம் நிறைந்ததல்ல. அவர்களுக்கு எம்.ஜி.ஆறையே பிடித்திருக்கிறது. அதனால் தான் எம்.ஜி. ஆரினால் முதலமைச்சராகவும். முடிந்தது

ஆனால் ரஜனிகாந்தின் கதை வேறு ரஜினி காந்தை இரசிகர்கள் விரும்பினார்கள் என்று சொல்லிவிட முடியாது.

அவரது நடிப்புப் பாணி பிடித்துப் போயிற்று அதனால் கமல்காசனுடன் ஒப்பிடுகிறபோது ரஜனிகாந்திற்குப் பெருவாரியான இரசிகர் கூட்டம் திரண்டது ரஜனிகாந்த் உயர்ந்தார்.

தமிழ்த்திரையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமிழ்த்திரை எதிர்பார்க்கின்ற தமிழ்திரை இரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்கின்ற ஒரு நாயகனாக ரஜினிகாந்த் ப்ரியா திரைப்படத்திலேயே தோன்றுகிறார்.

இதனை பஞ்சு அருணாசலம் தயாரித் திருந்தார் அதற்கு முன்னர் புவனா ஒரு கேள்விக்குறி, பைரவி ஆகியதிரைப்படங்களில் அவர் நாயகனாக நடித்திருந்தாலும், அது தமிழ்திரையின் நாயகவிம்பத்தை பூர்த்தி செய்கின்ற நாயகனாக இல்லை ப்ரியா திரைப்படமான ரஜனிகாந்திற்கு அத்தகைய அந்தஸ்தினைக் கொடுத்திருந்தது.

அதன் தாயாரிபாளரான பஞ்சு அருணாசலம் தான் பிறிதொருசந்தர்ப்பத்தில் ரஜனிகாந்தை தமிழ்த்திரையின் முதன்மை நாயகனாகவும் உருவாக்கினார். அது சுவாரஜ்யமான கதை என்பது போக, தமிழ்த்திரையின் முதன்மை அந்தஸ்தை பெறுவதற்கான சிலர் செய்த குறுக்கு வழிகளைப் போன்றது இது சொல்கிறேன்.

இன்னும் வரும்...

ஈராண்டு நினைவஞ்சலி

தமிழ்ப் பேரறிஞர் அமரர் க.சிவராமலிங்கம்பிள்ளை

மண்ணில் 16/09/1925

விண்ணில் 25/08/2005

செந்தமிழே உரு வெடுத்து
வந்த திருக்கோலமிதோ!
இந்துக் கம்பனி அன்னை
இரந்து பெற்ற ஏந்தலன்றோ!
சிந்தனையில் செய்பணியில்
சோர்வின்றி தினம் உழைத்த
சுந்தரனே சிவராமலிங்கமையா – உன்
பிரிவெண்ணி
துயரடைந்தோம் துதிக்கின்றோம்.

கவிஅஞ்சலி திரு. திருநந்தகுமார் | தகவல் : பதஞ்சலி நவேந்திரன் |
இரங்கல்: யாழ் இந்து மைந்தர்கள்

KS Suppliers Limited





- Electrical
- Air conditioning
- Refrigeration
- Ventilation and HVAC controls
- Wholesale and Retailers
- CCTV Security Cameras
- Fire Alarm Systems



237 Edgware Road,
Colindale,
London NW9 6LU

Tel: 020 8205 3159
Mob: 077 9914 2759
Fax: 020 8200 8918

அவமான அரசியல்



வித்தகன்

(ஒரு பேப்பருக்காக)

சுயமரியாதை, தன்மானம் என்பவற்றிற்காகப் பதவியைத் தூக்கி எறிகின்ற அரசியல் வாதிகளையோ, கொள்கை, மக்கள் நலன் என்பவற்றை முதன்மைப் படுத்துகின்ற அரசியல் கட்சிகளையோ சிறிலங்கா அரசியலில் காண்பது மிகவும் கடினமானது என்றாலும் அரசியல் பதவிகளுக்காக தன்மானத்தையும் சுயமரியாதையையும் தூக்கி வீசுகின்ற அரசியல் வாதிகளுக்கு பல உதாரணங்களைக் காட்டலாம்.

அந்த வகையில் உடனடியாக ஞாபகம் வருகின்ற அரசியல் கட்சி என்றால் அது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாகத் தானிருக்கும்.

யார் ஆட்சியில் இருந்தாலும் அமைச்சர் கதிரைகளை அலங்கரிப்பது என்பதை மட்டுமே கொள்கையாகக் கொண்டும் மலையக மக்களின் அறியாமையைத் தமது பெரும் ஆயுதமாகக் கொண்டும் கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அண்மைக்காலச் செயற்பாடுகள் சுயமரியாதை கொண்ட எவரையுமே வெட்கித் தலைகுனியவே செய்ய வைக்கும்.

அடிப்படை வசதிகளையாவது பெற்று வாழ்வதற்குத் தேவையான சம்பளம் கூட இன்றி மிருகங்கள் மட்டுமே வாழ்வதற்குகந்த லயத்துக் காம்பராக்களிலே தங்கள் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களிடம் சந்தாப் பணம் என்ற போர்வையில் சுரண்டும் (உறிஞ்சும் என்ற பதமே பொருத்தமாக இருக்கும்) பணத்திலே கட்சி அலுவலகம், கட்சிக் காரியாலயம் என்பவற்றை நடாத்திக் கொண்டு அந்த மக்களின் அடிப்படை நலனைக் கூடக் கவனிக்கத் தவறிய இந்தப் பச்சோந்தி அரசியல் வாதிகள் இதை விடக் கேவலப்படுத்த முடியுமா என்று ஐயுறுமளவிற்குக் கேவலப்படுத்தப்பட்ட பின்னும் மகிந்த அரசிற்கு முட்டுக் கொடுக்க நினைப்பதற்கு பண, பதவி ஆசைகளைத் தவிர வேறு எந்தக் காரணத்தையும் கூற முடியாது.

சில வாரங்களுக்கு முன்பதாய் கட்சியின் முக்கிய உறுப்பினர் முத்து சிவலிங்கத்தை 'குடிகாரன்' என்று சிங்கள அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பேசி விட்டார் என்று நீதி கேட்கச் சென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினருக்கு பசில் ராஜபக்சவிடமிருந்து நீதி கிடைக்கவில்லை.

மாறாக 'பறதெமலா' என்ற கீழ்த்தரமான வசவும் வெள்ளைத் தாளைக் கொடுத்து உங்கள் பதவிகளை ராஜினமாச் செய்து விட்டுப் போங்கள் என்ற 'ஆலோசனையும்' தான் கிடைத்தது.

இந்த அவமானத்தால் 'கொதித்தெழுந்து' தங்கள் அமைச்சர் பதவிகளை ராஜினமாச் செய்த விட்டுக் காட்டமான அறிக்கை விட்டது யாவரும் அறிந்ததே.

ஓரிரு நாட்கள் கழித்து மகிந்த ராஜபக்சவை சந்தித்துப் பேசியதிலிருந்து இவர்களது சுருதி இறங்கி விட்டது மட்டுமல்லாது மீண்டும் அரசில் ஒட்டிக் கொள்ளப் போகிறார்கள் என்ற பேச்சு பரவலாக அடிபடுகிறது.

மகிந்தவுடனான பேச்சுக்களில் தொழிலாளர் நலன் சார்ந்த விடயங்களோ தமக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்கக் கூடிய விடயங்களோ அடங்கியிருந்திருந்திருக்கும் என்று அரசியல் கற்றுக்குட்டிகள் கூட எதிர்பார்க்க மாட்டார்கள்.

மாறாக அவர்களைச் சந்தோசப்படுத்துவதற்கான பெறுமதி (காசோலை) எவ்வளவாக இருக்கும் என்பதே கேள்வியாக இருந்திருக்கும்.

இதை விடக் கேவலப்படுத்த முடியுமா என்று ஐயுறுமளவிற்குக் கேவலப்படுத்தப்பட்ட பின்னும் அரசிற்கு முட்டுக் கொடுக்க நினைப்பதற்கு காரணம் என்ன?

அரசாங்கம் விட்டெறிகின்ற எலும்புத் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டு வாலை ஆட்டுவதையே வழக்கமாகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினர் அரசில் ஒட்டிக் கொண்டுதானிருப்பார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம் தான் என்றாலும் மீண்டும் பதவியில் ஒட்டிக் கொள்ளுமுன்னர் தம்மை மிகவும் கேவலப்படுத்திய பசில் ராஜபக்சவின் பகிரங்க மன்னிப்பைக் கோருமளவிற்கு சிறிதளவாவது தன்மானம் இவர்களின் இரத்தத்தில் கலந்திருக்குமா என்பதே இவர்களுக்கு வாக்களித்த இலட்சக் கணக்கான மலையக மக்களின் ஆதங்கமாக இருக்க முடியும்.

தற்போது மெல்ல மெல்ல உண்மைகளை உணரத் தொடங்கியிருக்கும், தம் முதுகில் சவாரி செய்து கொண்டிருக்கும் பச்சோந்தி அரசியல் வாதிகளை அடையாளம் கண்டு கொண்டிருக்கும் மலையக மக்களின், குறிப்பாக மலையக இளைஞர்களின் துரதிஸ்டம் என்னவென்றால் தமக்காகக் குரல் கொடுக்கக் கூடிய மக்கள் நலனை முன்னிலைப் படுத்துகின்ற மாற்று அரசியல் தலைமை இல்லாமையே.

நம்பிக்கை தரக்கூடிய புதிய தலைமையாக உருவாகிக் கொண்டிருந்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனும் ஏனைய மலையக அரசியல் வாதிகளின் பாதையைப் பின்பற்றத் தொடங்கியிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

மலையக மக்களின் இன்றைய நிலையைப் பார்க்கின்ற போது தந்தை செல்வா பல ஆண்டுகளுக்கு மன்னர் ஈழத் தமிழர்களின் நிலை கண்டு கூறிய வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகின்றது.

'மலையக மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'

ஒவ்வாமை - சில தகவல்கள்

ஒவ்வாமை என்பது எல்லோருக்கும் உண்டாகுவதுண்டு. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வடிவில் உருவாகும். ஒவ்வொருவராலும் வேறு வேறு விதத்தில் உணரப்படும். ஒவ்வாமை உருவாகும் காரணிகளாக உணவுவகைகள், வீட்டு பிராணிகள், மருந்து வகைகள், செடிகளில், பூக்களில் இருந்து காற்றில் பறக்கும் மகரந்தங்கள், வீட்டில் உண்டாகும் தூசிகள் என்பவற்றைச் சொல்லலாம்.

சிலருக்கு ஒன்றில் தொடங்கி பின்னர் அதை சார்ந்தவற்றிலும் ஒவ்வாமை உண்டாகி விடும். சிலர் எதனால் ஒவ்வாமை உண்டாகிறது என்பதை அறியாமலே வாழ்கிறார்கள்.

உடலில் நம்மை பாதுகாக்க நோய் எதிர்ப்பு சக்தி இருக்கின்றது. இப்படியாக தூசிகள்,மகரந்தங்கள், மூக்கினுள்ளோ, கண்ணுள்ளோ இல்லை நம் தோலிலோ படும் போது உடலின் பாதுகாப்பு கலங்கள் (ஷெல்கள்) அதற்கு எதிராக யவெவைழனல ஐ தயாரிக்கின்றன. இதனால ஏற்படும் விளைவுகளே ஒவ்வாமையாகும்.

ஒவ்வாமைக்கான அறிகுறிகள்.

கண் எரிவு, மூக்கு எரிவு என்பவற்றை அவற்றுக்கு உதாரணமாக சொல்லலாம். நமக்கு ஒவ்வாமை எனில் அதனை அறிந்து அதற்கான மருத்துவ வழிகளையும், நாளாந்த வழிமுறைகளையும் செய்தலே சிறந்ததாகும். ஏனெனில் ஒவ்வாமையினால் வேறு வருத்தங்கள் உண்டாகி விடலாம். உதாரணத்திற்கு மகரந்தங்களினால் உண்டாகும் ஒரு வித ஒவ்வாமையினால் மார்புச்சளி, ஆஸ்துமா போன்றவை உண்டாகி விடும்.

இனி ஒவ்வாமைக்கான காரணிகளையும் அதை தவிர்க்கும் சில முறைகளையும் பார்ப்போம்.

மகரந்தங்களால் ஏற்படும் ஒவ்வாமை:

மாசி - சித்திரை மாதத்தில் இவ் ஒவ்வாமை ஏற்பட்டால் அதற்கு கூடிய காரணம் புற்களில் இருந்து காற்றில் பறக்கும் ஒரு வித தூசியே. சித்திரை - ஆவணிக்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டால் அதற்கு பூக்களின் மகரந்தமே காரணியாகும். இதன் அறிகறிகளாக மூக்கால், கண்ணால் நீர் வடிதல், கண் எரிதல், தடிமன் போன்ற ஒரு உணர்வு என்பவற்றைக் கறிப்பிடலாம்.

இதை தடுக்கும் வழி முறைகள் என்றால் முதலில் இவை உள்ள இடங்களை தவிர்க்க வேண்டும். பகல் வேளையில் கண் எரிந்தால் சன் கிளாஸ் போடலாம். அவற்றை விட ஒவ்வாமைக்கென மருந்தகத்தில் விற்கும் மூக்கிற்கு விடும் மருந்து (துளிகள்,ஸ்பிறே) வாங்கி பாவிக்கலாம். அதற்கு மாத்திரையும் உண்டு.

மருந்துகளினால் ஏற்படும் ஒவ்வாமை

நம்மில் பலர் எத்தனையோ மருந்துகள் பாவிப்போம். ஆனாலும் ஒவ்வாமை கொடுக்க கூடிய மருந்துகள் உண்டு. எனவே எந்த மருந்தையும் மருத்துவரின் ஆலோசனையின்றிப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.கூடுதலாக குழந்தைகளுக்கு மருந்துகளைக் கொடுக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வீட்டுப்பிராணிகளால், தூசிகளால் ஏற்படும் ஒவ்வாமை:

கூடுதலாக குழந்தைகள் தான் வீட்டுப்பிராணிகளால் ஒவ்வாமை உண்டாகி அவதிப்படுவார்கள். இதை நாம் முதலில் அறிந்து வீட்டுப் பிராணிகளை அகற்ற வேண்டும். தூசியினால் ஏற்படும் சமயத்தில் படுக்கையறை மற்றும் வீட்டில் பாவிக்கும் பொருட்களை மாற்ற வேண்டும். உதாரணத்திற்கு தலையணை உறைகள். தூசிகள் தங்காத துணிவகையில் அவற்றை மாற்றி கொள்வது சிறந்ததாகும்.

உணவுப்பொருட்களால் உண்டாகும் ஒவ்வாமை:

நண்டு இறால் போன்ற கடலுணவுகள் கத்திரிக்காய் தக்காளி போன்ற மரக்கறிகள் அன்னாசி போன்ற பழங்கள் என ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான உணவகள ஒவ்வாமையை ஏற்படுத்தும். இவ் ஒவ்வாமைக்கும் ஒரே சிறந்த வழி அவ் உணவுப்பொருட்களை தவிர்ப்பது தான்.

- பிரியசகி

SRI SATHIYASAIBABA PRASANNA
Sri Malayala Bhagawathi Astrlogical Centre
Pandit Boopathy Sastry

25 years experience in astro Palmist.
(Malayalam & Nepali Manthiram expert)

An expert pandit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, Job, Love, Marriage, Family problem, Sickness, Promotion, Visa, Court, lottery, abroad, money, Removal of enemy. All types of black magic and evil things removed. **All Matters will be kept in secret.**

Spoken languages: Tamil, Hindi, Telugu, Kannada & English.

ஸ்ரீமத் சதியசாயி பாபா பிரசன்னா
ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்
பண்டிதர் பூபதி சாஸ்திரி

25 வருடங்கள் அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள பூபதி சாஸ்திரி அவர்கள் கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஏவல்கள் அகற்றிக் கொடுக்கப்படும்.

Ajans Food & Wine 324, Rayners Lane, Pinner, Middlesex HA5 5EF.
Closest Tube station: Rayners Lane. Buses: H9, H10, H12
Tel: 07961651939 Opening Times: 9.30am - 8.30pm 7days a week.

தற்கொலையை ஒத்த கோழைத்தனமுண்டா?

வித்தி: கேள்விப்பட்டனீங்களோ செய்தியை? எங்கட பழைய வீட்டிற்கு பக்கத்தில் இருந்த தயா தற்கொலை செய்து விட்டாவாம். அதுவும் இரண்டு பிள்ளைகளுடன் தானாம். பிள்ளைகளுக்கு மருந்து கொடுத்து விட்டு தானும் குடித்தவாம்.

நித்தி: ஒ மை கார்ட். நல்ல பிள்ளை எல்லோ? நெடுகலும் சிரித்தபடியே இருக்கும் அந்த பிள்ளை. அந்த பிள்ளைகளும் நல்ல வடிவு எல்லோ. சந்தோசமாகத் தானே இருந்தவர்கள்.

வித்தி: ம்ம் பெரிய வீடு இரண்டு வி.எம் கார்ளும் நிற்குது. விதம் விதமாக உடுப்புபோட்டுகொண்டுதான் வெளிக்கிடும். ஆக்கள் பொறாமைப்படுற அளவிற்குதானே இருந்தார்கள்.

நித்தி: குடும்பத்தில் என்ன பிரச்சனையோ யாருக்கு தெரியும்?

இப்படியான உரையாடல்களை புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து அடிக்கடி கேட்க கூடியதாக இருக்கிறது. இயந்திரமான வாழ்க்கை முக்கியமாக பெண்கள் தான் அதிக அளவில் பாதிக்கபட்டாலும் இப்போது ஆண்கள் மத்தியிலும் இந்த நோய் பரவுவது வருத்தற்குரியதாகின்றது.

நின்று பேச நேரம் இல்லை. மனைவி வேலையால் வீட்டிற்கு வர கணவன் வேலைக்கு போக ஆயத்தமாக இருப்பார்.

பல நாட்களில் தொலைபேசி மூலமாகவோ சிறிய குறிப்பு கொப்பிகளின் மூலமாகத் தான் தங்கள் அன்றாட முக்கிய தகவல்களை பாரிமாறி கொள்ளுதல். வேலையில் பளு அதிகம் என்றாவுடன் வீட்டிற்கு வந்தவுடன் விழுந்து படுத்தல். மற்றவர்களுடன் மனம் விட்டு தங்கள் துன்பங்கள் கஸ்டங்களை பகிர்ந்து கொள்ளாமை.இப்படி எத்தனையோ காரணங்களை அடுக்கி கொண்டு போகலாம்.

முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது கணவன் மனைவி இடையில் உண்டாகும் சுமுகமான கருத்தாடல். கணவன் மனைவி இருவருமே சமமாக மதிக்கப் படவேண்டும்.

சமமாக மதிக்கப்படவேண்டும் என்பதன் அர்த்தம் மனைவி தொலைக்காட்சி பார்த்து கொண்டிருக்க கணவன் சமைத்து மேசையில் சாப்பாடு வைத்துக் கொண்டு கூப்பிட வேண்டும் என்று இல்லை.

குடும்ப வருமான விடயங்களில் இருந்து வேலைத்தளத்தில் நடைபெறும் மாற்றங்கள், இரு பக்கத்து சொந்த பந்தங்களிற்கு இடையில் ஏற்படும் துன்பங்கள் துயரங்களில் இருவரும் ஒன்றிணைந்து செயற்படல், கணவன் மனைவி இருவருமே தங்கள் துணைகளின் குறிப்பறிந்து நடத்தல் எனப் பல விடயங்களில் நாம் எமது கவனத்தை செலுத்த வேண்டும்.

முக்கியமாக கணவன் ஒருவரிடம் வட்டிக்கு பணத்தை வேண்டும்போதோ அல்லது ஒருவருக்கு கொடுக்கும்போதோ அதை தனது மனைவியிடம் பகிர்ந்து கொள்ளுதல் மிக முக்கியமாகும். பல பெண்களின் அநியாயமான சாவிற்கு இந்த 'வட்டிப்பணம்' தான் முக்கிய காரணமாய் இருக்கின்றது.

இந்த இயந்திரமான வாழ்வில் ஏதோ ஒரு வகையில் மனம் சோர்வடைந்து தான் போகின்றது. பல சிறிய கஸ்டங்கள் கவலைகள் ஒன்று சேர்ந்து பெரிய தாக்கத்தை உருவாக்கின்றது. இந்த நோய்க்கு உட்பட்டு இருப்பவர்கள் எல்லாவற்றிக்கும் பயப்பிடுதல், சந்தேகம், தேவையில்லாமல் புலம்பும்புதல், அதிகமான வியர்வை என்று பல அறிகுறிகள் காட்டும்.

எம் இனத்தவரிடம் இருக்கும் குறைபாடு இப்படியான அறிகுறிகளை கண்டவுடன் நோயாளிகளை கோயிலுக்கோ தேவலாயத்துக்கு அழைத்து செல்லுதல். நூல் கட்டுதல் என்று இப்பவும் சில மூட நம்பிக்கையில் குணப்படுத்துவதாக கூறிக்கொண்டு இருப்பார்கள். இதற்குரிய உதவிகள் நம்மைச் சுற்றி இருப்பதை ஏனோ இவர்கள் அறிய தயக்கம் காட்டுகின்றார்கள்.

இவர்களுக்கு உதவி செய்வதற்கு என்றே கவுன்சிலிங் வசதிகளுடன் கூடிய ஒரு சமூக கட்டமைப்பு இயங்கி வருவது நம்மினத்தவர் அறியாத ஒன்று. நாம் வசிக்கும் நாடுகளில் அரசினால் நடாத்தப்படும் கவுன்சிலிங் வசதிகள் இருந்த போதிலும் அதை நாடுவதற்கு நம்மவர்கள் தயக்கம் காட்டுவது பற்றியும் நாம் இங்கு சுட்டி காட்ட விரும்புகின்றோம்.

அங்கு பணிபுரியும் நிபுணர்கள் பெரும்பாலும் வேற்றினத்தவராக இருக்கும் போது ஒரு அந்நியத்தன்மை இருப்பதாலும் மொழிப் பிரச்சனை இருப்பதாலும் நம்மவர்கள் அங்கு ஆலோசனை கேட்டு செல்வது குறைவு. இந்த நாடுகளில் இருக்கிறது

கணவன் சரி இல்லை என்பதற்காகவும், குடும்பத்தில் ஏற்படும் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்காகவும், பெற்று வளர்த்த அந்த இளம் அரும்புகளை பெற்ற தாயே கொல்வது என்பதும், அவை இறப்பதை தாய் பார்பதும், எவ்வளவு கொடுமையானது. தன் சுக துக்கங்களை மறந்து பிள்ளைகளுக்காகவே வாழத் துணியும் தாய்மார்கள், அவர்களை கொல்ல துணிவது கொடுமையானது.

திருத்த முடியாக கணவனுடன் இனியும் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலையேற்பட்டாலும் இந்த நாடுகளில் தனித்து வாழ முடியாதா? அதற்குத் தற்கொலை தான் வழியா?

எமது ஊரைப்போன்று பொருளாதாரத்துக்கு, இந்த நாடுகளில் கவலைப்பட வேண்டிய தில்லை, மனத்தைரியமும், வழிகாட்டலுமே இது போன்ற கொடுமைகளை நிறுத்த முடியும். இது இருபாலருக்கும் பொருந்தும் ஆயினும், பெண்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். நம் மத்தியில் காதலில்லாத மணமுடிப்புகள் இன்னமும் இடம்பெறுகின்றன.

பாலியல் உறவு, முதல் குழந்தை பெறுதல், குடும்பவாழ்வு என்பன சமுகக் கட்டாயத்தால் பெண்கள் மீது திணிக்கப்படுகின்றன.

துணிந்த பெண்கள் விவாகரத்து பெற்று போகிறார்கள். பயந்தவர்கள் பைத்தியமாகிறார்கள். தமிழர் மத்தியில் செல்வாக்கு மிக்க பொதுநல அமைப்புக்கள் தமிழீழ மக்களின் பிரச்சினைகள் பற்றி மட்டுமே அக்கறை செலுத்துகின்றன.

அதற்கு மட்டுமே பணம் திரட்டி, செலவு செய்கின்றன. இங்கே வாழும் தமிழர் மீது அக்கறை காட்டும் ஒருசிலர், அரச நிதியை பெற்று தமக்கு வருமானம் பெறுவதிலேயே குறியாக இருக்கின்றனர்.

இவர்கள் மேற்படி பொதுநல அமைப்புகளுடன் அரச பணத்துக்கு போட்டியிடுவதால், இவர்கள் துரோகிகளாக அடையாளம் குத்தப்பட்ட நிலையில், மக்கள் இவர்களிடம் உதவி தேட விரும்புவதில்லை.

தாயகத்தில் போரினால், ஏழ்மையினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க ஆசைப்பட்டும் தமிழனாக பிறந்த பாவத்திற்காக தங்கள் இன்னுயிரை பிறர்க்காதியாகம் செய்து பலர் வீரகாவியம் படைத்துக் கொண்டிருக்க இங்கு வாழும் நம்மவர்கள் இப்படியான வருத்தங்களில் சிக்குண்டு யாருக்கும் உதவாத பலருக்கு உபத்திரமான சாவை எதிர்நோக்கி கொண்டிருக்கின்றார்கள்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோல் வாழ்க்கை வாழ்வதற்கு வளமான வழிகள் இருந்தும் அழிந்து கொண்டிருக்கின்றது நம்மினம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம். இளையோர்கள் நாம் சிந்தித்து செயலில் இறங்குவதே இப்போது எமக்கு இருக்கும் தலையாய கடமையாகும்.

- ரமா

துயர் பகிர்வோம்

அம்மாவின் மடியில்

24

01

37

அம்மாளின் மடியில்

31

07

07

திருமதி அம்பிகா தர்மலிங்கம்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பையா; பவளம்மா தம்பதிகளின் மகளும், தொழிலதிபர் (பிறீலங்கா இண்டஸ்றீஸ் ஜா-எல) காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற பத்மாவதி, பத்மசிகாமணி (முகாமையாளர் யூனிற்றி பிளாஸா, கொழும்பு) சிறீரஞ்சிதமலர் (இலண்டன்) வசந்தா
(இலண்டன்) ஆகியோரின் சகோதரியும், மருத்துவர் சூரியகலா (சூரியா மருத்துவமனை, சென்னை) காலஞ்சென்ற சந்திரகலா, சசிகலா ஆகியோரின் தாயாரும், மருத்துவர் சிறீக்குமார் (உரிமையாளர் சூரியா மருத்துவமனை, சென்னை) காலஞ்சென்ற வெங்கட்சாமி, பரமசிவன் ஆகியோரின் மாமியாரும், மருத்துவர் ராஜீவ் ((இலண்டன்)
ராகுல், மருத்துவர் சந்தியா(சென்னை) ஆதித்தியா, பூஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் ஈமச்சடங்குகள் சென்னையில் நடைபெற்றன. இத்தகவலை அன்னாரை அறிந்தோர் யாவரும் ஏற்றுக் கொள்க.
தகவல் சூரியகலா சிறீக்குமார் (சென்னை)
சசிகலா பரமசிவன் (சென்னை)

0091 44 24 86 88 88
விலாசம் : 115, ஜானகி நகர், வளசரவாக்கம், சென்னை 87 தமிழ்நாடு.

எங்கள் பள்ளிக் கூட அணி பக்கத்து ஊருக்கு விளையாடப் போனது

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உதைபந்தாட்டத்தின் உலகக்கிண்ணத்திற்கான போட்டி எந்த நாட்டில் நடந்தாலும் பிரித்தானிய அரசாங்கம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்குமளவிற்கு அந்த நாட்டின் உதைபந்தாட்ட ரசிகர்கள் நடந்து கொள்வார்கள்.

போட்டி நடக்கும் நாட்டிற்கு ஆயிரக்கணக்கில் போய் இறங்கி, தங்கள் அணியைத்தவிர வேறு எந்த அணி வென்றாலும் கலாட்டாதான். வேறு ஒரு நாட்டிற்குப் போய் அந்த நாட்டு ரசிகர்களிடம் கலாட்டா பண்ணுவதற்கும் ஒரு 'தில்' இருக்கவேண்டும்.

இப்படியான 'தில்' இருப்பதாக நினைத்துக் கொண்டு தான் ஒருமுறை எங்கள் பள்ளிக் கூட அணிக்கு ஆதரவாக நாங்கள் கொஞ்சப்பேர் வெளியூர் ஒன்றுக்குப் போனோம்.

உதைபந்தாட்டம் அல்ல. வொலிபோல் என்ற கரப்பந் தாட்டம். கிரிக்கெற் போன்ற வெள்ளக்காரரின் விளை யாட்டுக்கள் எங்கள் கிராமப்பகுதிகளுக்குள் நுழையாத காலத்தில் கிராமப் பள்ளிக்கூடங்களில் கரப்பந்தாட்டம் தான் கோலோச்சியது.

இரண்டு பனங்குற்றிகளை நட்டு, குறுக்கே வலையைக் கட்டி பந்தை அதற்கு மேலாக 'மூசி மூசி' அடித்துக் கொண்டிருப்பார்கள். சாதாரணமாக கோயில் வீதிகளில், வாசிகசாலை முன்றல்களில் ஒரு சிறிய இடத்திலேயே விளையாடக் கூடியதாக இருந்ததினால் இது கிராமவாசி களின் ஆதர்ச விளையாட்டாக இருந்தது.

வென்றவர்களுக்கு தோற்றவர்கள் கைலாகு கொடுக்கும் விம்பிள்டன் ரென்னிஸ் நாகரீகம் எல்லாம் பரவாத கிராமம் அது

இந்த அபிமானத்தின் காரணமாக எங்கள் பள்ளிக்கூடத் திலும் ஒரு 'திறமான' கரப்பந்தாட்ட அணி உருவாகி யிருந்தது. விளையாடியவர்கள் - நோஞ்சான்கள், நெத்தலிப் பயில்வான்கள் இல்லை. ஆறடி தொடும் உயரம். மண்வெட்டி பிடித்து மரத்துப்போன கைகள்.

தொங்கி எழுந்து வலைக்கு மேலாக ஓங்கி அடித்தால் பந்தின் வீச்சை தடுக்கமுடியாமல் எதிர் அணியினர் நிலத்தில் விழுவார்கள். எங்களில் விசில் அடிக்கத் தெரிந்தவர்கள் விசில் அடிக்க நாங்கள் சிலர் 'காய் கீய்' என்று தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்தி அட்டகாசம் செய்வோம்.

உள்ளூர் பாடசாலைகள் எல்லாவற்றையும் இப்படியாக மண்கவ்வச் செய்தபின் வெளியூர் பாடசாலை ஒன்றோடு மோதப் புறப்பட்டது எங்கள் பாடசாலை அணி. எங்கள் தலைமை ஆசிரியர் வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில் கூட்டும் அசெம்பிளிக் கூட்டத்தில் பெரிய பிரசங்கமே செய்து முடித்தார். ஐரோப்பாவை தன் ஆட்சிக்கு கீழ் கொண்டு வந்த மகா அலெக்சாந்தர் இந்தியாவை நோக்கி படையெடுத்ததை ஞாபகப்படுத்தினார்.

உணர்ச்சிவசப்பட்ட நாங்கள் நால்வர் எங்கள் அணிக்கு ஆதரவாக அந்த ஊருக்கு போவதென்று தீர்மானித்தோம். பள்ளிக்கூடத்திலிருந்து ஓர் தட்டிவானில் வீரர்களுடன், விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியரும், வேறு சிலரும் புறப்பட்டார்கள். மாலைக்கூட வாசலில் நின்று எல்லோருமாக வழியனுப்பி வைத்தார்கள்.

இதற்காக அன்று கடைசி வகுப்பும் நடைபெறாது என்று அறிவித்ததினால் எங்களுக்கு இரட்டிப்புச் சந்தோசம். நாங்கள் போக வேண்டிய ஊரின் தூரம் ஏழு மைல்களுக்கு மேலிருக்கும். கொஞ்சம் முன்னதாக வெளிக்கிட்டால் விளையாட்டு தொடங்கும் நேரத்துக்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்ற எண்ணந்தான்.

சக மாணவர் கூட்டம் கலைந்து போகவும் எங்கள் பயணம் ஆரம்பமானது. எங்கள் குட்டி ரவுண் பக்கமாகப் போனால் ஒழுங்கான றோட்டில் பயணம் சுகமாக இருக்கும் என்று தெரிந்திருந்தாலும், எங்களின் சித்தப்பா, பெரியப்பா வழியில் குறுக்கிட்டு 'எங்கையடா போறீங்கள்' என்று கேட்டுத் தொலைத்து, பயணத்தை நிறுத்தச் செய்துவிடுவார்கள் என்ற பயத்தில், எங்கள் ஊரின் பின்பக்கமாக தோட்டவெளிகள், வயல்கள் பக்கமாக இருக்கும் 'கப்பி' றோட்டால் பயணமானோம்.

தார் போட்ட அடையாளமே இல்லாமல் காற்றும், மழையும் அரித்துக் கொண்டு போய்விட, பெரிய கற்கள் ஆங்காங்கே துருத்திக் கொண்டு நிற்கும் அந்த றோட்டில், சைக்கிள் ஓடுவது மகா சிரமமாக இருந்தது. ஒவ்வொருமுறை கல்லின் மேலாகத் தொங்கி விழும்போதும், அந்த றோட்டுப் போட்ட முகம் தெரியாத ஒப்பந்தகாரரின் மரண ஊர்வலம் எப்போ நடந்தாலும் இந்த றோட்டாலேயே நடக்க வேண்டுமென சபித்துக் கொண்டு தொடர்ந்தோம்.

கடந்தது நடந்தது

எழுதுவது: கே.எஸ்.பாலச்சந்திரன்

இவ்வளவு சிரமத்தின் மத்தியில் நாங்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்த பொழுது, கரப்பந் தாட்டத்தின் மூன்றாவது செற் நடந்து கொண்டிருந்தது. வழக்கம் போலவே எதிர் அணியின் வீரர்கள் அடிக்கடி நிலத்தில் குப்புற விழுவதைக் கண்டவுடனேயே எங்கள் உற்சாகம் கரைபுரண்டோடியது. எங்கள் பாடசாலையின் பெயரைச் சொல்லி கோசமிட்டோம்.

சடுதியாக மைதானமே அமைதியானது. எல்லோரும் எங்களைப் பார்த்தார்கள். பார்வை சுமுகமானதாக இருக்கவில்லை. எங்கள் பாடசாலை அணி வீரர்களே 'யார் இவர்கள்' என்று ஆச்சர்யத்துடன் பார்த்தார்கள். நாங்கள் அத்தோடு நிறுத்தியிருக்கலாம். ஆரவாரத்தைத் தொடர்ந்தோம்.

வென்றவர்களுக்கு தோற்றவர்கள் கைலாகு கொடுக் கும் விம்பிள்டன் ரென்னிஸ் நாகரீகம் எல்லாம் பரவாத கிராமம் அது என்று எங்களுக்கு வெகு சீக்கிரத்திலேயே தெரிந்து விட்டது. மரவள்ளிக்கட்டைகளும், குறுணிக்கற் களும் விளையாட்டு இடத்தில் சரமாரியாக வந்து விழுந்தன.

'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தும்' பாணியில் எங்கள் வீரர்கள் கல்வீச்சின் மத்தியிலும் விளையாடி மூன்றாவது செற்றையும் வென்று போட்டியில் வெற்றி பெற்றார்கள். இதன்பிறகு நடந்ததுதான் சுவாரஸ் யமானது. முன்னேற்பாடாக தட்டிவான் டிரைவர் மைதானத்துக்கு அருகிலேயே வாகனத்தை நிறுத்த எங்கள் அணி வீரர்கள் உடுப்புகள் கூட மாற்றாமல் அவசரம் அவசரமாக ஏறி புறப்பட்டுச் சென்றார்கள்.

போகும்போது எங்கள் பக்கமாக பரிதாபப் பார்வை வீசி விட்டுச் சென்றார்கள். ரோம சாம்ராச்சியத்தின் விளையாட்டு அரங்கிலே பல்லாயிரக்கணக்கான பார்வை யாளர்கள் பார்த்துக் கொண்டிருக்க, சிங்கங்களுடன் விடப்பட்ட கைதிகளைப்போல வெலவெலத்து நாங்கள் நின்று கொண்டிருந்தோம்.

கடைசிக்கல்லை புழுதிபறக்க விரையும் தட்டிவான் பக்கமாக ஏறிந்து விட்டு திரும்பிய ஒரு உள்ளூர் பெரியவன் எங்களைக் கண்டுவிட்டான். 'இங்கை நிற்கிறாங்கள்' என்று தன் சகபாடிகளை அழைக்கவும், நாங்கள் எங்கள் சைக்கிள்களில் பாய்ந்து ஏறினோம். உழக்கிய வேகத்தில் 'கடகட'வென்று ஒரு சத்தம் கேட்டது. என்னுடைய சைக்கிள் செயின் கழன்று விட்டது. சற்று நடுமாறுவதற்கிடையில் முதுகில் யாரோ மொத்தினார் கள். சைக்கிளையும் உருட்டிக் கொண்டு ஓடித்தான் பார்த்தேன். காலடிகள் அண்மித்துக் கேட்கவும், அதை அப்படியே போட்டு விட்டு முன்னால் சென்று கொண்டிருந்த நண்பனின் சைக்கிள் பாரில் தொற்றிக் கொண்டேன்.

நாங்கள் போய்ச் சேர்வதற்கு முன்னால், திந்தக் கதை எங்கள் வீடுகளுக்கு 'செல்லிடப்போன்' இல்லாத அந்தக்காலத்திலேயே போய்ச் சேர்ந்துவிட்டது. சொல்லா மல் போனது, சைக்கிள் தொலைத்தது எல்லாவற்றுக்கு மாகச் சேர்த்து அங்கே வாங்கத் தவறியதை அப்பாவிடம் வாங்கினேன். என் நண்பர்கள் வீடுகள் பங்கமாகவும் ஓலங்கள் கேட்டன.

ஒரு ரேடியோ ORU RADIO

புத்தம் புதுக்காலை
நாள்தோறும் 7.00am-10.00am
உலக செய்திகள், விளையாட்டு செய்திகள், போட்டி நிகழ்ச்சி, நாணயமாற்று வீதம், மற்றும் உங்களுக்காக இன்னும் பல காத்திருக்கின்றன...

மலரும் நினைவுகள்
திங்கள் முதல் வெள்ளி வரை
10.00 am-11.00am
மனதைத் தொடும் பாடல்களுடன் உங்கள் மலராத நினைவுகளை மலர வைக்கும்.

சட்டி சுமமா அதிருதில்ல
திங்கள் முதல் வெள்ளி வரை
11.00am-12.00pm
வேறொன்றும் இல்லையுங்கோ சமையலும் தரணும்.

அன்புள்ள தோழிக்கு
திங்கள் முதல் வெள்ளி வரை
12.00pm-1.00pm
உச்சி முதல் பாதம் வரை பெண்களுக்காக தொகுத்து வழங்கப்படும் ஒரு நிகழ்ச்சி.

அறிவோம்
திங்கள் முதல் வெள்ளி வரை
1.00pm-1.30pm
பழைய விடயங்களை புது சிந்தனையுடன் அறியவைக்கும்.

செய்தி
நாள் தோறும் 1.30pm-2.00 pm
சுடச் சுட செய்திகளைத் தருகின்றோம். அது மாத்திரமல்ல ஆவி பறக்கும் செய்திகளையே அதிகம் தருகின்றோம், ஒரு ரேடியோவின் செய்திப் பொதி

எனக்கு பிடிச்சிருக்கு
திங்கள் முதல் வெள்ளி வரை
4.30 pm-5.30 pm
உங்கள் விருப்பப் பாடல் கேட்கும் நேரம்

தீறமைக்கு சவால்
திங்கள் முதல் வெள்ளி வரை
5.30 pm-6.30pm
கேள்வி எங்களிடம் பதில் உங்களிடம் மற்றும் பரிசும் உங்களிடம்.

செய்தி
நாள் தோறும் 6.30pm- 7.00pm
தாயகத்தையும் தமிழகத்தையும் உங்கள் வீட்டுத் தரையில் தவழ விடுகிறது ஒரு ரேடியோவின் செய்திப் பொதி.

வேட்டையாடு விளையாடு
திங்கள் முதல் வெள்ளி வரை
8.00pm - 9.00pm
அதிஷ்டம் அறிவு இரண்டும் உன்டா? வேட்டையாட வாருங்கள்.

சும்மா சும்மா
திங்கள் 7.00pm - 8.00 pm
முக்கியமான விசயங்களை சும்மா சும்மா நாங்களும் நீங்களும் சேர்ந்து கதைக்கலாம்.

வட்டமேசை
திங்கள் 9.00pm -10.00pm
சமகால அரசியல் வட்டமேசை

நிகழ்ச்சி நிரல்
சிரிக்க... சிந்திக்க... சினக்க...!

அந்திமாலை பொழுது
செவ்வாய் 7.00 pm-8.00 pm
இளைஞர்களுக்கான ஒரு இளைஞனின் தீப்பந்தம்

இந்துவும் இம்சை அரசனும்
புதன் 7.00 pm-8.00 pm
சிரிப்புடன் சிந்திக்க ஒரு நிகழ்ச்சி

சங்கனாதிய நான்
புதன் 10.00pm -11.00pm
சமுதாய பிரச்சனைகளை அக்கறையுடன் அலசி ஆராயும் ஒரு நிகழ்ச்சி.

என் இனமே! என் சனமே!
9.00pm - 10.00pm வியாழக் கிழமைகளில்
புலம்பெயர் மண்ணும் எமது வாழ்வும்

நீங்களும் பேசலாம்
வெள்ளி 7.00 pm-8.00 pm
பேசக் கூடிய விசயத்தை பேசாமல் இருப்பது தவறு அதனால் நீங்களும் பேசலாம்.

Kutty's with Sharu akka
சனி—ஞாயிறு 11.00am-12pm
குழந்தைகளுக்கான நிகழ்ச்சி.

Something Something
உங்களுக்கும் எங்களுக்கும்
7.00pm -8.00 pm சனி
Something Something தான் இப்ப சொல்ல முடியும், மிச்சம் தெரிந்து கொள்ள phone பண்ணுங்கோ ஆனால் வெறும் கையோடு போக மாட்டீங்கள்.

பல்லவியை பாடுங்கள்
ஞாயிறு 12.00pm-1.00 pm
பாடலின் சரணம் குடுத்து பல்லவியைப் பாட வைப்போம்.

Top 10 Songs
சனி 5.30.pm-6.30.pm
பாடல்களின் வரிசை

Top 10 Movies
ஞாயிறு 5.30pm-6.30.pm
படங்களின் வரிசை

பின்குறிப்பு: எங்கள் போட்டி நிகழ்ச்சிகளில் சில நேரம் தாராளமாக அல்வா கிடைக்கும்.

ஒரு ரேடியோ

லண்டன் 020 8715 4775
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 43 500 0277
கனடா 416 848 7253
www.oruradio.com

அங்கவை சங்கவை

முல்லைக்குத் தேர் தந்த பாரி வள்ளலின் பெண்கள்தான் அங்கவை, சங்கவை.

மாட மாளிகையில் வாழ்ந்த இவர்கள் தங்கள் தந்தையை இழந்து தவித்த போது அடைக்கலம் தந்து மணமுடித்து வைத்தவர் வள்ளல் பாரியின் நண்பரான புலவர் கபிலர்.

அன்று இதே வெண்ணிலவின் போது எங்களைப் போற்றிப் பாதுகாத்த தந்தையும் எங்களுடன் இருந்தார். எங்களுக்கான குன்றும் எங்கள் வசம் இருந்தது.

இன்று எங்கள் தந்தையையும் இழந்தோம்... நாட்டையும் இழந்தோமே?

என பாரியின் மகளிர் அங்கவையும். சங்கவையும் கதறிய கதறல் புறநானூற்றைப் புரட்டிப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

இவர்கள்தான் இன்றைய தமிழ் சினிமாவின் கேலிப் பொருள்.

இதற்கு தமிழாய்ந்த வாத்தி ஒருத்தர் பல்லை இளித்துக் கொண்டு வாங்க வந்து பழகுங்க என்று மாமா வேலை பார்க்கும் காட்சியைப் பார்த்தபோது ரத்தம் சூடேறி விட்டது.

வசனம் : சுஜாதா.

நல்லது.

அங்கவை சங்கவைக்கு பதிலாக பிரியதர்ஷிணி தேவதர்ஷிணி என்றோ.... அபித குஜலாம்பாள் குசல குஜலாம்பாள் என்றோ... அல்லது சிவாஜிராவ் கெய்க்வாட்டுக்குப் பிடித்த பார்வதம்மா பசவம்மா என்றோ போட்டிருக்கலாமே.

எது தடுத்தது இவர்கள் அனைவரையும்?

சண்டைக்கோழியில் குட்டிரேவதி என்று வந்த வசனத்திற்காக எஸ்.ராமகிருஷ்ணனை ஒரு வழி பண்ணிய இலக்கியவாதிகள் அங்கவை, சங்கவை விஷயத்தில் மட்டும் சகலத்தையும் பொத்திக் கொண்டிருப்பது ஏன்?

படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டுங்கள்? என்று பொங்கி எழுந்த தமிழ் பாதுகாப்புப் பேரவையினர் இப்போது தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்களா?

கற்பு விஷயத்தில் குஷ்புவை விட்டேனா பார்...என்று தொடை தட்டிய ஜாம்பவான்கள் அங்கவை, சங்கவை விஷயத்தின் போது மட்டும் எங்கே போய்த் தொலைந்தார்கள்?

இப்படி ஏகப்பட்ட கேள்விகள் என்னுள் மண்டையைக் குடைந்தபடி...

இதில் வக்கிரத்தின் உச்ச கட்டம் என்ன வென்றால் அங்கவை, சங்கவை இருவருக்கும் கருப்புச் சாயம் பூசிக் காட்டியிருப்பது.....

மூடர்களே....! ஒன்றை மட்டும் நினைவில் வையுங்கள்.

கருப்பு என்பது நிறமல்ல. இனம்.

இன்னும் உங்களுக்குப் புரியும் மொழியில் சொல்வதானால்.....

Black is not a Colour

To Erase,

It is a RACE

இத்தோடு நிறுத்துங்கள் உங்கள் விபரீத விளையாட்டை. அப்புறம்....

நாங்களும் பழக ஆரம்பித்தால்.....

எச்சரிக்கை!

குட்டக் குட்டக் குனியும் தமிழன்
எழுந்தால் தெரியும்
எழுவார்களா?
இதுவே இன்றுள்ள கேள்வி ,

- பாமரன்

என்ன செய்யப் போகிறோம்

எவ்வளவு அழகிய பூமி.....என்னை சுற்றி இருப்பது!
என்னதான் வாழ்கை பெரிய சுமையாக தெரிந்தாலும்..
கொட்டுகின்ற பனியும்...அதனை கொஞ்சு கின்ற புல் தரையும் ..
நான் நட்டு வைத்த செடியில் முதல் முதலாய் பூத்து....
நாணத்துடன் சிரிப்பது போன்ற பூவும்...
சின்ன குழந்தை முத்தமாய்..
என் தேகம் நனைக்கும் மழை துளியும்..
என்றோ பிரிந்து வந்தாலும்..
இன்னும் என் இதயத்தின் வலி கொண்ட சிறகாய்..இன்றும் என் உயிர் பிசையும்.....
வாழ்ந்து விட்டு வந்த என் தேசத்து வசந்தமும்..
ம்ம் எண்ணியே பார்க்கிறேன்.. இன்னும் ஏதோ இருப்பது போல்த்தான் இருக்கு வாழ்வில்..! ஆயினும்..
நான் இரசித்த அழகுகள் எல்லாம் என்றும் அப்படியே இருக்க.தான் மட்டும் இருந்து கொண்டு பூமி .. எம்மை... காலம் வந்தால் கை அசைத்து வழி அனுப்பி வைக்கும்!!!
கட்டாயம் அது நடக்கும்!!!
இருட்டில் தொலைத்த கறுப்பு மலரா வாழ்வு என்றெண்ணி ...
கனக்கிறது ...நிகழ் காலம்..!!
எதிர் காலம்..தன் ஒரு கரத்தினை தான் எங்களுக்காய் தரும்... ! மறு கரத்தை...
தனக்கும் கடவுளுக்கும் இடையில் செய்த ஒப்பந்தம் போலவே ஒளிச்சு வைக்கும்!!
வாழ்வு என்ற படகு கால கடலில் மூழ்கையில்... நீ நீட்டுகின்ற கையை .. தட்டி விட்டு....
அது தன் பாட்டில் நடை பயிலும்!!!
பிறப்பு ... ஆரம்பம்!
இறப்பு... முடிவு!!
வாழ்க்கை சிறு இடைவேளை!!
பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் என்ன செய்ய போகிறோம்??
நடப்பது நடக்கட்டும்... நம் கையில் என்னவென்று...
உயிர் இருக்கையிலேயே உணர்வு செத்து போவாமா? இல்லை..... விதியை பிடித்து வந்து...தூக்கில் ஏற்றி...
வெற்றி குதிரையின் முதுகில் பயணம் செய்து... உன்னையும் என்னையும் தந்த உலகிற்கு... உருப்படியாய் ஏதும் செய்வோமா? பச்சை பாய் விரித்த எங்கள் வயல் நிலமும்... பால் நிலவொளி கொண்டு கழுவிய எம் வீட்டு முற்றமும்... எப்படி பறி போனதென்று எழுதி வைப்போமா? இனி வரும் சந்ததி கையிலதை ஏடாய் ஆக்கி கொடுப்போமா?
எப்படி உன் பாட்டன் திரும்ப திரும்ப அடி வாங்கினான்... எப்படி அவனை அடித்தவனை நாங்கள் திருப்பி அடித்தோம்.. என்றும் மறக்காமல் சொல்வோமா?
காதல்...காதல்..என்று மட்டும் பேசி காலத்தை கொல்வோமா?
இல்லை....கணணி யுகத்துடன் சேர்ந்து ஓடி..
நாமும் கொஞ்சம் வெல்வோமா?
என்ன செய்ய போகிறோம்???

- பிரேமினி

Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



- ▲ Massage Therapies by experienced and highly skilled therapists
- ▲ Treatment is designed around your individual health needs
- ▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- ▲ Only natural medicines are used
- ▲ No side effects at all
- ▲ Wide range of therapies



- ▲ Arthritis
- ▲ Frozen Shoulder
- ▲ High Blood Pressure
- ▲ Pulled Muscles
- ▲ High Cholesterol
- ▲ Trapped Nerve
- ▲ Paralytic Conditions
- ▲ Certain Skin Conditions
- ▲ Stress and Strain
- ▲ Back Pain
- ▲ Whiplash
- ▲ Obesity
- ▲ Joint Pain
- ▲ Digestive Disorders
- ▲ Diabetes
- ▲ Sleeplessness
- ▲ Stiffness
- ▲ Migraine

FREE Consultation

Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

- * Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
- * Male and Female therapists available
- * Can speak in Hindi Tamil or English & Malayalam
- * Free Parking

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.....



www.kahc.co.uk

Call 020 8902 1104 / 020 8902 1707

20% Discount as Summer Special

எதுவாய் இருந்தாலும் பேசித் தீருங்கப்பா!



வாழ்க்கை உறவுகளின் மீது கட்டப்பட்ட புனிதமான ஆலயத்தைப் போன்றது. இந்த ஆலயம் சிதிலமடைகையில் மனித மாண்புகளும், வாழ்வின் புரிதல்களும் அர்த்தமிழந்து போகின்றன. உயரிய பண்பாடுகளினாலும், அடர்த்தியான கலாச்சார வாழ்க்கை முறையினாலும் உலகின் கவனத்தைக் கவர்ந்த எங்கள் குடும்ப வாழ்க்கை முறை சமீபகாலமாகச் சரிவடையத் துவங்கியிருப்பது குடும்ப உறவு முறையில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிருக்கிறது.

பலவீனமான குடும்ப வாழ்க்கைக்கு மேற்கத்திய நாடுகளை உதாரணம் காட்டிய நிலை இன்று மாறி அடுத்த வீட்டு வாசலை நோக்கி விரல் நீட்டும் நிலை உருவாகி வருகிறது. விவாகரத்து விண்ணப்பங்களோடு வழக்கறிஞர்களைச் சந்திக்கும் நகர்ப்புற வாசிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக என்னுடைய வழக்கறிஞர் நண்பர் ஒருவர் புள்ளி விவரங்களோடு விளக்கி அதிர்ச்சியளித்தார்.

ஆழமாய் சிந்திக்கையில் பெரும்பாலான விவாகரத்துக்கள் மிகவும் சாதாரண காரணங்களுக்காகவே கோரப்படுகின்றன. மிக மிக முக்கியமான காரணம் கணவன் மனைவியரிடையே இன்றைக்கு குறைந்து போயிருக்கின்ற உரையாடல்கள். மாலை நேரங்களில் ஒன்றாக அமர்ந்து மனம் விட்டுப் பேசும் குடும்பங்களில், ஒன்றாக இரவு உணவு அருந்தி குழந்தைகளோடு அளவளாவும் இல்லங்களில் உறவு விரிசல்கள் பெரும்பாலும் நிகழ்வதேயில்லை.

கிராமப் புறங்களில் விவாகரத்து குறைவாய் இருப்பதற்கு இந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையும், மனம் விட்டுப் பேசுவதற்கு அவர்களுக்கு வாய்க்கின்ற சந்தர்ப்பங்களுமே காரணமாகி விடுகின்றன.

We will analyse the life of a typical Tamil woman coming to live in the UK. Most probably she will visit Colombo city first time in her life to get her visa and to travel to western country where her husband lives. Her maximum education would be O level and rarely advanced level. Her husband profile is also very important in this respect; usually he will be working in a super market / petrol station / KFC / McDonalds / shop/ industrial level laundrette. A Tamil woman with a university education will not marry a man with this type of profile; because of the Tamil mentality, a woman can marry a man with an education of similar to her or above her level. So invariably large numbers of Tamil men with less skill or no skill, who live in western countries are ended up in marrying poorly educated women. Once she arrived in this country she has to face a lot of challenges; English language (her husband himself is already struggling), financial strain and above every thing she does not know where to start an what to do. For that couple it is extremely difficult period and having a baby is the major source of relief, joy and gives them some rationale for their struggle. She would not have made any drastic difference, had she been delayed her pregnancy. Because she does not have the necessary skills or expertise to embark on an ambition of working in a professional field. If she wants to progress in the way expressed by Suvethiga that poor Tamil woman has to start her education at least from O level, some times they may have to start from further lower level of education. Is this feasible? That poor husband worked hard in the cold weather for many years often for his family and relatives; just married and eagerly waiting to start a new life will be totally frustrated if anyone preaches him about the importance of educating the women (himself not educated). That's how the future of a Tamil woman going behind the pushchair.

The woman who said getting married is one of her life goals was right!

Because she does not have proper education therefore does not have a proper job; then marriage is the only hope in Tamil community for that woman. That poor woman does not have enough family support to study or work; on the other hand she is very well aware of the social stigma of an unmarried woman so she made an appropriate decision.

Entire topic itself is very complex and needs some fundamental knowledge to understand.

You cannot achieve great things just because you are dreaming and ambitious about it, you should have necessary resources and help to achieve that. Because we all live in highly competitive world and meritocracy it self is not going to bring the success.

Peer Pressure

We all know that this issue is a problem all the time. This is the pressure we feel from our friends to do certain things, dress in different ways, talk in different ways etc. The things that give in to peer pressure are:-

No self-confidence, Isolation, Loneliness, Depression. Peer pressure leads to a negative outcome, few examples are:- Not doing school work, Cheating, Giving up ativites, Drinking, Smoking, Drugs, Shoplifting, Teasing & Bullying. However, there are ways to defeat peer pressure:- Join clubs, Distance yourself from bullies, and make excuses when people pressure you into things. There's a way to everything.?

By Flora Stanislaus

வளவோடு ஒரு வீடு புத்தளம் நகரில்
நூர்நகர் புகையிரத நிலையத்துக்கு
அருகில் இந்துக் கல்லூரி நடை
தூரத்தில் இக்ரா International
பக்கத்தில் அனுராதபுர பிரதான வீதி
அருகில் Electicity and water supply
Available. 20 perches நிலத்தில
(50அடி 110அடி) 9 perches
அழகான வீடு விலை £14500
தொடர்புகளுக்கு:- Mr Salman Hud 13, Clement Avenue, Leicester LE4 7QJ
+447817912708 (UK)

ஜோதிடம்
ஜாதகம் கணித்தல், பலன் கூறுதல், திருமணப் பொருத்தம் பார்த்தல், எண்கணித ஆலோசனை என்பன பார்க்கப்படும். 8.00am – 9.00pm வாரத்தில் 7 நாட்கள்.
கொழும்பு ஜோதிடர் ஸ்ரீ துளசிராஜா 07950 571 140
Flat 127 D, Ealing Road, Wembley

அழகும் ஆரோக்கியமும்
இலவச ஆலோசனை
உடல் நோய் சம்பந்தமான பிரச்சனைகள்
(மூட்டுவலி, வீக்கம், சலரோகம், கொலஸ்ரோல், அல்சைமர் நோய், கண் பிரச்சனைகள், ஆஸ்மா,அலர்ஜி மற்றும்...இதர)
தலைமுடி சம்பந்தமான பிரச்சனைகள் (வரண்ட முடி, வெடிப்பு, முடி உதிர்தல்...இதர)
தோல் , முகம் சம்பந்தமான பிரச்சனைகள் (முகப்பருக்கள், கரும்புள்ளிகள், வரண்டதோல், Sunbum ...இதர)
Personal Consulting available. In-Home Service avilable
தொடர்புகளுக்கு: KALA
020 8255 7476 / 07973 815 623

VISION
"Building your business dream"
T: 020 8772 7991
020 8772 7992
F: 020 8772 7993
890 Garratt Lane
London SW17 0NR
Buying or Selling your Business?
Business Transfer & Commercial Financial Specialists
Finance arranged for any type of business
NACFB

நன்கு அனுபவமுள்ள சமையல் ஆள் தேவை
இலங்கை, தென்னிந்திய உணவுகள் நன்கு சமைக்கத் தெரிந்த ஆள் உடன் தேவை
Four experienced chefs are needed. Must have good knowledge and be able to cook Sri Lankan and South Indian dishes.
தொடர்புகளுக்கு | Contact
07956 801 594 / 02085 436 266

"கற்பித்தல் ஓர் கலை"
Tution Classes in Modern
வயது 5லிருந்து 15 வயது உள்ள மாணவர்களுக்கு
* Science * Maths and * Tamil
Exam Focus Classes
விசேட பிரத்தியேக வகுப்புகள் பரீட்சை ஒட்டிய நேரங்களில் நடைபெறும்.
British Citizenshipற்கு விண்ணப்பிக்க காத்திருப்பவர்களுக்கு Life in the UK பரீட்சைக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Contact: Shankarii, T: 020 8640 6228 / M: 07877 976 741
E: shankarii29@yahoo.com

அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் டொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.
Ram: 07861 371 837 / Thas: 07885 987 857

பறக்கும் தட்டுக்கள்- 6 (FLYING SAUCERS)



மணிமேகலையிலும் கூட வான் வழிப்பயணங்கள் பற்றிச்சித்தரிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்திலும் வானவூர்தி பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. சங்க இலக்கியமான புறநானூற்றில்

வலவன் ஏவா வான ஊர்தி (புறம்–27, 8)

என்ற வரி விமானத்தை ஓட்டுபவர் இல்லா வானவூர்தியைக் கொண்டிருந்தான். என்கின்ற கருத்து நம் தலையைச் சுற்ற வைக்கின்றது. விமான ஓட்டியை வலவன் என அழைக்கின்றது புற நானூறு. இது நிச்சயமாக கற்பனையில் உருவான கதை என கூற முடியாது. புறநானூற்றுத்தமிழன் உண்மையில் நமக்கு முன்னோடிகளே! அந்த முன்னோட்டத்தை இன்றைய தமிழராகிய நாம் உணரவில்லை மாறாக தமிழை மறக்கவே முனை வது கவலையையே தருகின்றது.

அடுத்து ஈழத்து இலக்கியங்களை நோக்குகின்ற போது முதன்முதலில் வந்த ஈழத்து வானியல் (astronomy) நூலாக வெளிவந்தது சரசோதி மாலை (கி.பி.1310) ஆகும் கி.பி. 1250 கி.பி. 1621ல் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் இலங்கையில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள தம்பதெனியாவை தலைநகராகக் கொண்டு ஆண்ட நாலாம் பராக்கிரமபாகுவின் ஆணைப்படி தேனுவரப் பெருமாள் இந்நூலை ஆக்கியதாக கூறப்படுகிறது. இது 12 படலங்களைக் கொண்டது. இதில் நட்சத்திர தெசைப்படலம் வானியல் பற்றிய கருத்துக்களையே கூறுகின்றது. 1892 பங்குனி மாதம் இது முதன்முதலாக ஏட்டிலிருந்து அச்சுவடிவமாக பதிக்கப்பட்டது.

சேகராச சேகரமாலை, சுந்தன தீபிகை, சுங்கராஜ அநோமதசி என்பவரால் வடமொழிச் செய்யுள் நடையில் இயற்றப்பட்ட "தைவஞ்ஞ காதேனு" ஆகியவையும் வானியல்பற்றிக்கூறும்நூல்களாகும். மேலும் அண்ட வெளி பற்றியும் சூரியன் சந்திரன். கோள்கள் பற்றியும் வால்வெள்ளிகள் பற்றியும் விஞ்ஞான பூர்வமாக மேற்கொள்ளப்பட்ட சிறந்த வானியல் ஆய்வு நூல் சுவாமி விபுலானந்தரால் இயற்றப்பட்ட விஞ்ஞான தீபம் (Light of the science) இது ஒரு அறிவியல் விஞ்ஞான நூலாகும். அத்துடன் 1986 இல் யாழ்ப்பாண வானியல் கழகத் தலைவராக இருந்த. செந்தில் நாதன் என்பவரால் எழுதப்பட்ட ஆரம்ப விண்ணியல் இது வானியல் வேற்றுக்கிரக மனிதன். உடுத்தொகுதிகள். வால்வெள்ளிகள். விண்துகள்கள். சூரியனையும் அதனைச்சுற்றும் கோள்கள். என்பன பற்றிய தகவல்களை யாவரும் இலகுவில் அறிந்து கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வானியல் கோள்களின் அசைவு பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்தது.

1970களில் கலாநிதி க.இந்திரகுமாரின் விண்வெளி அற்புதங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகின. மேலும் இவரின் மண்ணிலிருந்து விண்ணுக்கு என்ற நூல் விண்வெளி தொடர்பான பல தகவல்களை பாமர மக்களும் அறியும் வகையில் எழுதப்பட்டிருந்தது. 1996ல் இதே ஆசிரியரால் எழுதப்பட்ட விண்வெளியில் வீரகாவியங்கள் என்ற அறிவியல் நூலானது வேற்றுக்கிரகங்களுக்கான பயணங்கள் விண்வெளியில் மனிதன் நடாத்திய அற்புதங்கள் பற்றிக் கூறும் சிறந்த விண்ணியல் நூலாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புத்தொளி சிவபாதத்தின் அப்பலோ -11. அப்பலோ -13. ஆகிய விண்ணியல் நூல்கள் அப்பலோ விண்கலத்தின் சந்திரனுக்கான பயணத்தின் சுவாரஸ்யமான தகவல்கள் அடங்கிய நூலாக வெளிவந்தன. 1998ல் பா.தனபாலனின் அறிவியல் சிந்தனை அலைகள் என்ற விண்வெளி வானியல் பற்றிய நூலும் தடம் பதிக்கின்றது. ஆகவே நமது ஈழத்து எழுத்தாளர்கள் வானியல் பற்றி எழுதிய நூல்களை நினைவு கூரும் பொருட்டே எனது தலைப்பிலிருந்து சற்று விலகிச் சென்றேன்.

ஈழத்து வானியல் சிந்தனை எழுத்தாளர்களின் நூல்களை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

பைபிளிலும் வெளிக்கிரக மனிதர்களின்(Alien) தொடர்பு பற்றிக் கூறப்பட்டுள்ளதுடன் பறக்கும் தட்டினை எலெக்கைல். வீல் (Ezekiel's weel) என அழைக்கப்படடுள்ளதுடன் அது இரத்தினக் கற்களைப் போல மஞ்சள் பிரவுன் கலந்த நிறங் களில் காணப்பட்டன எனவும் செபர் ஆற்றிற்கருகே உள்ள சல்டியாவில் (chaldea இன்றைய ஈராக்) காணப்பட்டன. என பைபிள்கூறுகிறது.

(Ezekiel 1;16) மேலும் பிரபல்யமான ஓவியர் லியானார்டோ டாவின்சி கூட தனது ஓவியத்தில் பரசூட் மற்றும் பறக்கும் தட்டுக்கள் போன்ற அமைப்புடைய படங்களை ஏறத்தாள கி.பி.1475 களில் வரைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதே போல உலக அதிசயங்களில் ஒன்றான (Ancient Wonders) எகிப்திய பிரமிட்டுக்கள் கூட மனிதர்கள் உருவாக்கியதாக இருக்க முடியாது ஏனென்றால் கிரேன் புல்டோசர் ஆர்க்கிடெக்சர் என்று விஞ்ஞான அறிவு வளர்ந்திருக்கும் இப்போது கூட மனிதன் என்னதான் முயன் றாலும் ஒரு பிரமிட்டைக்கூட நிர்மானிக்க முடியாது அதனால்தான் சொல்கின்றேன்.

பிரமிட்டுக்களே வேற்றுக்கிரகவாசிகள் (Alien) கட்டியதாக இருக்கலாம். என்று 1922 நவம்பரில் எகிப்தின் புராதன லக்ஸர் கோயில்களுக்கு மேற்கே உள்ள பாலைவன மணலில் காணப்படுகின்ற பிரமிட்டுக்களைப் பற்றி ஆய்வு செய்த ஹார்வட் கார்ட்டர் என்ற ஆங்கிலேயர் கூறியுள்ளார்.

அடுத்து வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய கதை மனித இனத்திற்குப் புதியதல்ல அது ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதை உணர்த்த மேற்கு ஆபிரிக்காவில் வாழ்ந்த டோகோ நாட்டைச் சேர்ந்த மக்கள் வானசாஸ்திரத்தில் முன்னோடி களாக இருந்தவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

அடங்காப்பற்று அ.மயூரன்

கேள்வி பதில்

அஞ்சலா ஜெகநாதன்
(மூலிகை மருத்துவர்)



கேள்வி: எனக்கு 49 வயதாகிறது (பெண்). இரவு வேளைகளில் அதிகமாக வியர்க்கிறது. சில சயமங்களில் காரணமில்லாமலே அழ வேண்டும் போல் உணர்கின்றேன். நித்திரை கொள்ள முடியவில்லை. அதிகமான மாதவிடாய் போக்கும் இருக்கிறது. இது என்னவோ என அங்கலாய்க்கின்றேன். இந்நிலைக்கு ஏதாவது மருந்து சொல்வீர்களா?

பதில்: நீங்கள் குறிப்பிட்ட அறிகுறிகளையும், வயதையும், கருத்துக்கெடுக்கும் பொழுது, உங்களின் மாதவிடாய்ச் சக்கரம் முடிவுக்கு வருகிறது எனக் கருதுகிறேன். மாதவிடாய்ச சக்கரம் முடிவுக்கு வருதல் பெண்களுக்கு ஒரு நோயல்ல இது வாழ்க்கையில் ஒரு நிலையாகும். இந்நிலையை சுமூகமாக கடந்து செல்ல மூலிகைகளும், உயிர்ச்சத்துக்களும், தாதுப் பொட்களும் உதவும். மாதவிடாயச் சக்கரம் முடிவுக்குவர எடுக்கும் காலம் பெண்ணுக்குப் பெண் வேறுபாடாக இருக்கிறது.

இக்காலத்தில் வழமையான ஓமோன் சுரப்பிகளில் மாற்றமேற்படுவதனால் அறிகுறிகள் வெளிக்காட்டப்படுகின்றன. இந்நிலைக்கு மூலிகைச் சேர்மானமான Black Cohosh Complex மேலதிகமாக தேவைப்படும். உயிர்ச்சத்துக்கள், தாதுப் பொட்களுக்காக Female Multiple மற்றும் Rho என்னும் மூலிகை தயாரிப்பு ஆகியன உதவக் கூடும்.

மூலிகைத் தயாரிப்புக்கள் ஓமோன் சுரப்பிக்களைச் சமன் செய்வதோடு, அங்கலாய்ப்பு நிலையையும் குறைத்து விடுகிறது. `Hotflush` என்னும் நிலையையும் இரவு வேளையில் வியர்வையையும் குறைக்க உதவுகிறது. போதியளவு உடல் அப்பியாசம் இக்கால கட்டத்தில் தேவைப்படுகிறது. மாதவிடாய்ச்சக்கர நிறுத்த காலத்தில் போதியளவு உடல் அப்பியாசம் செய்தவர்களுக்கு அறிகுறிகள் உடனடியாக நின்றுபோனது அவதானிக்கப்பட்டுள்ளது. நீங்கள் புகை பிடிப்ப வரானால், அப்பழக்கத்தை நிறுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்கள் தேவைப்படும் பட்சத்தில் என்னை நீங்கள் தொடர் கொள்ளலாம்

துப்பாக்கித்தேசம்

துப்பாக்கிகளை புதைத்து துப்பாக்கிகளை விதைத்து
துப்பாக்கிகளை அறுவடை செய்யும் – துப்பாக்கித்
தேசத்தில் எப்போதேனும் பெய்கிறது மழை
நீராய்
ரத்தமாய்
உடல்களாய் சொற்களாய்
கண்ணீராய்...

- மிதக்கும்வெளி

ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் அர்ஜுனா நாடி குருஜி ஜெங்கம்மா

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

60 வருட அனுபவம்

07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

செஞ்சோலை படுகொலை நினைவுதினம்

தேவதைகளுக்கு எழுதப்பட்ட மரண சாசனம்



மகா வித்தியாலயத்தின் அனைவரும் அறிந்த உயர்தரம் பயிலும் கெட்டிக்கார மாணவி அவள்.

அவள் செஞ்சோலை வளாகத்தில் நடக்கும் வதிவிட தலைமைத்துவ பயிற்சி நெறியில் கலந்து கொள்ள பாடசாலை சார்பில் தயாரானாள். அதற்கு முன் 'தமிழ்த்தினம்' என்னும்

மாணவர்களின் தமிழ்த்திறமைக்கான போட்டி ஒன்றில் தமிழ் இலக்கண பிரிவில் போட்டியிட சென்றாள்.

அருகில் இருந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து கலைப்பிரியா என்னும் மாணவியும் கலந்து கொண்டாள். போட்டிக்களை முடித்துகொண்ட சில நாட்களிலேயே , செஞ்சோலை வளாகத்திற்கு தலைமைத்துவ வதிவிட பயிற்சி நெறியில் கலந்து கொள்ள வந்துவிட்டனர்.

ஒகஸ்ட் 14 ம் நாள் 2006 ஆம் ஆண்டு காலை 7 மணி செஞ்சோலை வளாகம் எங்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மிகச்சிறந்த மாணவிகளால் நிறைந்திருந்தது.

அப்போதுதான் யாரும் எதிர்பார்த்திராத யாரும் கற்பனை செய்ய முடியாத அந்த சம்பவம் நடந்தேறியது. திடீரென அங்கு வந்த இலங்கை அரசின் 'கிபிர்' எனப்படும் யுத்தக்குண்டு விமானங்கள் நான்கு சேர்ந்து தாழ பதிந்து பதிந்து வீசிய குண்டுகள் அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான மாணவிகளின் உடல்களை கிழித்து ரத்தசகதியில் போட்டன.

ஒலியை விட வேகம் கூடிய , இலங்கை விமானப்படையின் யுத்த விமானங்களில் ஏறத்தாழ 40 வீதமான விமானங்கள் வந்து ஒவ்வொன்றும் 250 கிலோ எடையுள்ள, யுத்தத்தில் வீசப்படும் குண்டுகளை தங்கள் மீது வீசும் என அவர்கள் கற்பனை கூட செய்து இருக்கவில்லை என்பதினால் அவர்கள் ஓடி ஒளிந்து தப்பித்து கொள்ள முடியமால் போனது.

தங்களது பாடசாலைகளின் சார்பில் தமிழ்த்தின போட்டியில் கலந்து கொண்ட மாணவிகள் முதல் இரு இடங்களை பெற்றிருந்த சந்தோச செய்தி இரு பாடசாலைகளின் முதல்வர்களுக்கு கிடைத்திருந்தது.

இவை எவற்றையும் அறியதவளாய் கிபிர் குண்டுகளால் கிழிக்கப்பட்ட கலைப்பிரியா உயிரற்ற உடலாக புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் கிடந்தாள். அதே போல் கௌசிகாவும் மரணத்துடன் போராடிக்கொண்டு இருந்தாள்.

குண்டுகள் அவள் வயிற்றை கிழித்து குடல்களை பெருஞ்சேதம் செய்திருந்தன. மருந்துவர் அவளின் காயத்தின் நிலை பற்றி இன்னொரு மருந்துவருடன் ஆங்கிலத்தில் உரையாடியது அவளது காதிலும் விழுந்தது.

கௌசிகா இனிமேல் உயிருடன் இருக்க போவதில்லை என்பதை தெரிந்து கொண்டாள். தன்னுடன் பக்கத்தில் இருந்து சண்டை போட்டு விளையாடிய சிறுவர்கள், உறவினர்கள் எல்லாருடனும் கதைக்க வேணும் போல இருப்பதாக சொன்னாள். அவள் விருப்பப்படி ஊரே வந்து குவிந்தது.

ஒகஸ்ட் 14 ம் நாள் 2006, காலை 10 மணியிருந்து 7 மணிவரை- புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் கௌசிகாவின் கட்டிலை சுற்றி அவள் பார்க்க விரும்பியவர்கள் நின்றிருந்தனர்.

அவள் உயிர் வலிக்க வலிக்க தனது இறுதி வார்த்தைகளை மெல்ல மெல்ல உதிர்ந்தாள்.

'அம்மா....நான் மீள முடியாது போல் இருக்கிறது என்னை கட்டிப்பிடிச்சுக்கொண்டு படுங்கோ அம்மா'

'தங்கச்சி விலோ...நீ அம்மாவின்ர சொல்லை கேட்டு நடக்க வேணும், நீ

ஒருத்திதான் மிஞ்சப்போகின்றாய் கவனம்'

'அப்பா நீங்கள் இனிமேல் குடிக்க கூடாதப்பா'

சிங்களப்படைக்கு முன்னால் மாணவர்களும் எதிரியாச்சு, இனி மாணவர்கள் மாணவராக இருந்தால் போதாது அவன் நினைக்கிற மாதிரியே எதிரியாகவே மாற வேண்டும்'

'எங்களை அடித்த கிபிர்களை சுட்டுவிழுத்த வேண்டும்'

அம்மம்மா, அன்ரி, சித்தப்பா, மாமா, அப்பப்பா எல்லாரும் எனக்கு சோடா பருக்குங்கோ, அம்மா உன்னை பிரியும் காலம் வருகுது. என்னை கட்டியணைம்மா...'

'எல்லாரும் எனக்கு சோடா பருக்குங்கோ'

'அம்மா என்னை கொஞ்சிக் கொண்டு படு அம்மா'

'கஜி...தேவாரம் பாடு'

'பாய்....பாய்....பா....ய்ய்...

இரவு 7.15 மணியளவில் எல்லோருடைய வேண்டுதல்கள், நேர்த்திகள், அழுகைகள் தாண்டி அவள் கையசைப்புடன் அவர்களிடம் இருந்து விடைபெற்றாள்

(ஒகஸ்ட் 14 ஆம் நாள் ஈழத்தின் செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் வதிவிட பயிற்சி நெறியில் ஈடுபட்டிருந்த 52 மாணவிகள் இலங்கையரசின் விமானப்படை விமான ங்களால் குண்டு வீசிக் கொல்லப்பட்டனர்)

எங்களை அடித்த கிபிர்களை சுட்டுவிழுத்த வேண்டும்' என்று சுருண்டிருந்த உடல் நடுங்கும் வண்ணம் வார்த்தைகள் கோபத்துடன் அவளிடம் இருந்து வந்தன.

தேய்ந்து கொண்டு போன குரலிலும் இவ்வளவு கோபம் கொண்டு சொல்கிறாள், அந்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவின் கட்டிலில் வாடிய மலரென கிடக்கும் கௌசிகா.

அவள்தான் உதயகுமார், பாக்கியலட்சுமி யின் முதல் கனவு. அவர்களை பொறுத்த வரை குடும்பத்தின் நம்பிக்கை. குமுளமுனை

- நன்றி அருணபாரதி

MARKANDAN & CO

SOLICITORS & ESTATE AGENTS

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ▲ ஒப்பந்த தகராறுகள்
- ▲ நுகர்வோர் பிரச்சினைகள்
- ▲ மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- ▲ Bankruptcy Problems
- ▲ மதுபான அனுமதிகள்
- ▲ கட்டட அனுமதிகள்
- ▲ Cafe அனுமதிகள்
- ▲ House / Flat Purchase or Sale
- ▲ Remortgages
- ▲ Right to Buy
- ▲ Highly skilled migration
- ▲ Power of Attorney
- ▲ Sponsorship for UK Visas
- ▲ Work Permit application
- ▲ Civil Litigation

No Win – No Fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

கடன் சுமையில் இருக்கிறீர்களா?

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா?
அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

சிறுகதை

சர்ப்பங்கள்

படைத்தவர்
இராஜன் முருகவேல்



அகிலனிடமிருந்து அவனது குழந்தையின் முதலாவது பிறந்ததின விழாவுக்கு அழைப்பு வந்திருந்தது.

மலிவான கடையொன்றில் 'பிளாஸ்ரிக்' விளையாட்டுப் பொருள் ஒன்றை வாங்கி, வர்ணப் பூப்போட்ட கடதாசியால் சுற்றி, சிவப்பு நாடாவொன்றால் கட்டிக்கொண்டு பிறந்தநாள் விழா நடைபெறும் மண்டபத்தை அடைந்தான் காந்தன்.

போகும்போது கழுத்தைத் தடவிக் கொண்டான். சங்கிலி தடக்கியது. மோதிரம் பளிச்சிட்டது. மணிக்கூட்டைத் திருப்பினான். தங்க முலாமிட்ட சங்கிலியிலான கடிகாரம் குலுங்கிப் பளபளத்தது.

இவைகளைப் போட்டுக்கொண்டு போனால் தான் கணக்கெடுப்பார்கள். மண்டபத்துக்கு வெளியே சில தமிழர்கள் தமக்குள்ளே சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து ஏதோ கூடிக் கதைத் தவாறு இருந்தார்கள். உள்ளே உழைந்தான்.

'ஹப்பி பேர்த் டே -நிமலன்' என்ற மினுங்கலாவான வெளிய எழுத்துக்கள் மண்டபச் சுவரில் தொங்கியவாறே வரவேற்றன.

உள்ளே பலர் குழுமியிருந்தார்கள். எங்கும் ஒரே பேச்சொலிகள். பெற்றோரின் கண்காணிப் பில் இருந்து விலகிய பிள்ளைகள் அந்த மண்டபம்முழுவதும் ஓடியாடிக்கூச்சலிட்டவாறு திரிந்தார்கள். அவர்களைப்பொறுத்தவரையில் அது விளையாட்டு. பெரியவர்களைப்பொறுத்த வரையில் அது அவர்களின் உரையாடல் களுக்கு இடையூறு.

அவர்களைக் கூப்பிட்டுப் பக்கத்தில் இருத்துவதற்கு அம்மாவுக்கு மனம் வராது. பட்டுப்புடவை கசங்கிப்பாழாய்ப் போய்விடுமே என்ற பயம். அப்பாவுக்குத் தன்னுடைய கதை குளம்பி விடுமென்ற கவலை.

அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தால் தாய்நாட்டின் நிலைமைகளைப் பற்றி நாலு வார்த்தை கதைத்து ஏனையோருக்குத் தனது மேதாவிலாசத்தைக் காட்ட முடியாதே என்ற தவிப்பு.

'மக்களே! நீங்கள் எங்களைத் தொந்தரவு செய்யாவிட்டால் சரி. இது பிறந்தநாள் விழா.'

அந்தச் சின்னஞ் சிறிசுகளின் கைவரிசையில் சிற்றுண்டிகளும், கை துடைக்கும் கடதாசி களும், பலகாரம் சுமந்த மட்டைத் தட்டுகளும் அந்த மண்டபம் முழுவதுமாய்த் தாறுமாறாய் நிறைந்து கொண்டிருந்தன.

அவர்களைப்பற்றிக் கவனிக்க எவருக்கு நேரம்? வீட்டு வேலைகளாலும் சமையல் களாலும் வீடியோத் தமிழ்ப் படங்களாலும் முடங்கி வாழும் பெரியவர்களுக்கு இப்படியான விழாக்கள்தானே சந்திப்பு மகாநாடுகளின் ஊக்குவிப்பு நடுவம்.

அந்தச் சந்திப்பில்தான் எத்தனை விதம் விதமான கருத்துக்களும், கதைகளும் கனதியாகப் பரிமாறப்படுகின்றன.

கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான். நேரம் இரவு எட்டு மணியை நெருங்கிக் கொண்டி ருந்தது. இன்னும் அகிலனையோ, அவனது மனைவியையோ அல்லது பிறந்தநாளுக்குரிய நிமலனையோ அங்கு காணவில்லை.

மண்டபத்துள் முன்னால் அமைந்திருந்த சிறு மேடையில் உள்ள மேசை ஒன்றில் அழகாக அடுக்கப்பட்ட பலகாரங்களின் நடுவே கேக் ஒன்று மிகவும் கம்பீரமாக, ஒரேயொரு சிறிய மெழுகுதிரியைத் தாங்கிக் கொண்டிருந்தது.

வீடியோக் கமராக்காரர்கள் பரபரப்பாகத் தமது கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

எவரோ ஒரு அறிமுகமில்லாதவர் பலகாரத் தட்டு ஒன்றைக் காந்தனின் கைகளில் திணித்து விட்டு அவசர அவசரமாக அடுத்தவரை நாடிச் சென்றார்.

'அண்ணை....'

ஒருவர் தயக்கத்துடன் வந்து நெருங்கி நின்றார்.

'என்ன' என்பதுபோலப் பார்த்தான்.

'நீங்கள் ஏதாவது பாவிக்கிறதெண்டால் அந்த அறைக்குப் போங்கோ... அங்கை எல்லாம் கிடக்கு....'

அவர் சுட்டிக்காட்டிய அறையைத் திரும்பிப் பார்த்தான். பல ஆடவர்கள் அங்கே குழுமி யிருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

'பியரும் இருக்கு.... குறை நினையாமைத் தேவையானதை நீங்களே எடுத்துக் கொள்ளலாம்.' அன்பான உபசரிப்பு.

'நன்றி...'

அவர் போய்விட்டார்.

காந்தன் குடிப்பழக்கம் இல்லாதவன் இல்லை.. எனினும் இவ்வாறான பொது இடங்களில் மதுபானம் பாவிப்பதால் ஏதாவது வம்பை விலை கொடுத்து வாங்க நேரிடலாம் என்ற எண்ணம் அவனை அங்கே செல்ல விடாமல் தடுத்தது.

எட்டரை மணியிருக்கும். அகிலன் குடும்ப சமேதராக குழந்தையுடன் மண்டபத்துள் நுழைந்தான்.

'ஹாய்....! ஹலோ...!!' என்ற அறிமுக அழைப்புகளில் சில நிமிடங்கள் கரைந்தன.

கறுத்தநிறக் 'கோட் சூட்டில்' அந்த ஒரு வயதான குழந்தை நிமலன் கேக்கின் முன்னால் நிறுத்தப்பட்டான்.

பாவம் குழந்தை. சிவந்த கண்களால் அலங்க மலங்க விழித்தவாறு தூக்கக் கலக்கத்துடன் தள்ளாடியபடியே, அப்பா அம்மா அருகிருக்க ஒருவழியாகக் கேக்கினுள் கத்தியை நுழைத்தது.

'ஹப்பி பேர்த் டே டு யூ, ...!!'

மண்டபம் எங்கும் ஒருகணம் ஒன்று சேர்ந்து கோரஸாகியது.

'ஓமோம். இப்பவாகிலும் சந்தோஷமாய் இருங்கோ. அங்கை எத்தினையோ சனம் சாகுது. இங்கை இதுதான் இல்லாத குறை....'

பக்கத்து அறை வாசலில் இருந்து கர்ண கடூரமாக ஒருகுரல் ஒலித்தது.

'யார் இந்த நேரத்தில் அபசகுனம் மாதிரி.' என்று திரும்பிப் பார்த்தான் காந்தன்.

எந்தச் சூழ்நிலையில் எதைப் பேசுவதென்று சிலருக்குத் தெரிவதில்லை. அந்தந்த இடத்தில் பொருத்தமானவற்றைக் கூறினால்தான், அவை காத்திரமானவையாகவும் பெறுமதியானவை யாகவும் ஏற்கப்படும் என்பதைச் சிலர் புரிய மறுக்கிறார்கள்.

அங்கே ஒருவர் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டிருந்தார். குடிவெறியில் அவருக்கு ஞானம் பிறந்திருக்கிறது...!

அந்த ஞானம் பிறந்தநாளையே குழப்பி வீண் பிரச்சனைகளை வளர்த்துவிடுமோ என்ற பயத்தில் அவரை நெருங்கினான் காந்தன்.

'அண்ணை.... இந்த நேரத்திலை என்ன கதையிது?'

'வந்து தம்பி, இந்த நேரத்திலை கதையாமை எப்ப கதைக்கிறது? நான் பிழையாயே கதைக்கிறன். எங்கடை நாட்டைப்பற்றியெல்லே கதைக்கிறன். நாலுபேருக்கு எங்கடை நாட்டைப் பற்றித் தெரியவேணும்....'

'அது எல்லாருக்கும் தெரியும்.... இப்ப பிறந்தநாளுக்கு வந்திருக்கினம்.'

'பிறந்தநாள் தேவையே...? இல்லைத் தெரியாமைத்தான் கேக்கிறன், பிறந்தநாள் தேவையே...?!'

'உதைப் பிறந்தநாள் கொண்டாட்டத் துக்கு ஒந்து அங்கை தந்த தண்ணியளைக் குடிச்சுப்போட்டீட கேக்கிறது?'

'என்ன தம்பி, கதை ஒருமாதிரிப் போகுது? என்னையே கேள்வி கேக்கிறீரோ.... நான் ஆர் தெரியுமே?'

'இப்ப சத்தம் போட்டு எல்லாத்தையும் குழப்பப் போறியளோ?'

'ஓம். குழப்பத்தான் போறன். உன்னாலை ஏலுமெண்டால் நிப்பாட்டிப் பார். உனக்கு என்னைப் பற்றித் தெரியேலை... நான் ஆடும் எண்டால் எல்லாம் ஆடும்....'

'ஓமோம். இப்ப எல்லாம் ஆடும்தான்....'

'என்ன நக்கலோ...'

என்று கத்தியவரை மேலும் பலர் சூழ்ந்து கொள்ளக் காந்தனை ஒருவர் கையைப் பிடித்து அப்பால் அழைத்துச் சென்றார்.

'நீங்கள் ஏன் அந்தாளிட்டைப் போய் வாயைக் குடுத்தனீங்கள்? இப்பிடியானதுகளைத் திரும்பிப் பாக்கக் கூடாது.'

'இல்லை. இந்த இடத்திலை கூச்சல் போடுறாரே எண்டு போனன்.'

'இவரோ... இப்பிடியான ஆக்களைக் கணக்கெடுக்கிறதாலைதான் வீணான குழப்பங்களும் பிரச்சினையளும் வருது. ஓசியிலை குடிச்சுப்போட்டு ஆர்ப்பாட்டம் செய்யவெண்டே சிலபேர் இருக்கினம். இவை தரவழியள் ஆக்களைக் கண்டால்தான் வெறி எண்ட சாட்டிலை கூடக்கூடத் துள்ளுவினம். ஏன் எண்டு திரும்பிப் பாராமை இருங்கோ.... ஒருக்கா ரண்டுதரம் கத்திப் போட்டுத் தங்கடைபாட்டிலை ஓரமாய் ஒதுங்கிவிடுவினம்.'

உண்மைதான். பாவம். குடிவெறியிலை தள்ளாடுதுகள் எண்டு போட்டு இவையளுக்கு உதவி செய்யப் போனால், அதைவிட வில்லங்கம் வேறை எதுவுமே இல்லை.

றோட்டிலை விழுந்து படுப்பினம். போற வாறவையோடை கொழுவுவினம். கண்ணாடி யளைப் போத்தில்களை உடைச்சு விலாசம் காட்டுவினம். பக்கத்திலை ஒருத்தர் இருக்கிறார் எண்ட துணிவுதான் இதுகளுக்குக் காரணம்.

இவையளைக் கவனியாமைவிட்டால் தங்கடை பாட்டிலை ஒழுங்காய் வாலைச் சுருட்டிக்கொண்டு வீட்டை போய்ச் சேருவினம். பாம்புக்குப் பக்கத்திலை போனால் படமெடுக் கத்தான் செய்யும். இன்னும் கிட்டப் போனால் கொத்தி விசத்தைத்தான் கக்கும். இவையளும் பாம்புகள்மாதிரித்தான்.

பொது இடங்களில் மற்றவர்களின் எண்ணங் களுக்கு மதிப்புக் கொடுக்காமல் தான் தோன்றித்தனமாகச் செயற்படுபவர்களைச் சர்ப்பத்துக்கு ஒப்பிட்டதில் நியாயமிருப்ப தாகவே காந்தனுக்குப் பட்டது.

ஹா ஹா ஹா...

வந்தவர் :டாக்டர் நீங்க சொன்ன மாதிரி சிகரட்ட நிறுத்தி அதுக்கு பதிலா சூயிங்கம் பழக்கத்த ஏற்படுத்திட்டன்.

டாக்டர் :நல்லது. நல்லது.

வந்தவர் :ஆனால் ஒரு பிரச்சினை

டாக்டர் :இதில என்ன பிரச்சனை?

வந்தவர் :எவ்வளவு தீக்குச்சி வேஸ்ட் பண்ணினாலும் சூயிங்கம் பத்தவே மாட்டன் எண்ணுது.

precise design & print
you imagine we implement

creative artwork from **concept to design**

seven | zero
graphic designers
020 7043 4319

453 crusoe road | mitcham | surrey CR4 3LB

அரங்கேற்ற மலர்கள் || விழா மலர்கள் || அழைப்பிதழ்கள் || நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் || தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளும்....

மனிதரில் எத்தனை நிறங்கள்?

முதன் முதலாய் தன்னுள்ளே தன்னை பார்க்கும் யாரும் எனக்குள் இவ்வளவு அழுக்குகளா? குப்பைகளா என்று அதிசயிப்பர்.

ஏனென்றால் மனிதன் என்றுமே தன்னைப் பற்றி அறிய முயல்வதில்லை. மாறாக அடுத்த வரைப் பற்றித் தெரிந்து கொள்வதிலேயே நேரத்தை செலவிடுகிறான்.

அடுத்தவர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதில் பாதி கூட தன்னைப் பற்றி தெரிந்திருப்பதில்லை.

ஒரு டாக்டர் பெண்மணி வசதியான நாகரிக குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவருடையமாமியாரும் அவர்வழி உறவுகளும் அதிகம் படிக்காத கிராமவாசிகள்.ஒருமுறை மாமியார் மருமகள் பணிபுரியும் வைத்திய சாலைக்கு வைத்தியம் பார்க்கச் சென்றபோது டாக்டர் மருமகள் உடன் இருந்தவர்களிடம் படிக்காத பட்டிக்காட்டு பெண்மணியை மாமியார் எனச் சொல்லத் தயங்கி இவர்கள் எனக்குத் தெரிந்த குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் என்று சொன்னாராம்.

நுனி நாக்கு ஆங்கிலமும்,படிப்பும்,பதவியும் மட்டுமே நாகரிகத்தின் அளவுகோல் என்று நினைக்கும் இவர்களுக்கு உறவுகள் பற்றியும் மனித மனங்களைப் பற்றியும் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஒருவர் தன்னுடைய கடை திறப்பு விழாவிற்கு ஒரு அரசியல் வாதியை அழைத்திருந்தார். அவரின் நண்பர் சொன்னார் குத்து விளக்கு ஏற்ற அரசியல்வாதியின் மனைவியையே அழைக்கலாம் என்று. ஆனால் அவரோ வயதான தன் விதவைத் தாயை வைத்து குத்துவிளக்கேற்றினார்.

என்ன இப்படி செய்து விட்டீர்கள் என்ற நண்பரிடம்,

'அரசியல்வாதியை அழைத்தது என் கடை விளம்பரத்திற்கு. ஆனால் குத்து விளக்கு ஏற்றி நான் நன்றாக இருக்க வேண்டும் என வாழ்த்த என் தாயைவிட சிறந்தவர் யார்? என்றதும் நண்பர் வாயடைத்துப் போனார்.

எனக்குத் தெரிந்த வேறொரு பெண் எந்த விசேஷத்திற்கும் போக மாட்டாள். அப்படிப் போக வேண்டிய கட்டாயமிருந்தால் எதிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே நிற்பாள். இதனால் பல நேரம் அவளுக்கும் அவள் கணவனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும்.

அடுத்தவர்களைப் பற்றிப் பேசும் போது தெரியாது. தன்னைப்பற்றி அடுத்தவர்பேசும் போதுதான் அந்த வேதனை புரிகிறது.

"ஏன் இப்படி நடந்து கொள்கிறாய் உன் கணவர் சொல்வதில் தவறென்ன? நாம் நாலுபேருக்கு முன்னால் நின்று உதவினால் தானே நமக்கு யாராவது செய்வார்கள் என்றதும் உடைந்து போய் அழுதாள்.

விசாரித்த பிறகுதான் தெரிந்தது பிள்ளை இல்லாத அவளை எந்த நல்ல காரியத்திற்கும் முன்னிறுத்தி அழைப்பதில்லை.நேரடையாக சொல்லாவிட்டாலும் அவர்களின் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டு தான் ஒதுங்கியிருப்பதாகச் சொன்னாள்.

இது புரியாத அவள் கணவர் ஏதோ அகங்காரத்தில் இப்படியிருப்பதாக அவளைத் திட்டுகிறார்.

இதைக் கேட்டதும் என்ன சொல்வது என்று புரியவில்லை.பிள்ளை பெறுவதும்,இல்லாமல் இருப்பதும் ஒரு இயற்கை நிகழ்வு என்று உணராமல் ஏற்கனவே இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட அவர்களை மேலும் இப்படி நோகடிக்கும் மனிதர்களும் இருக்கிறார்கள்.

கல்லூரியில் படிக்கும் பக்கத்து வீட்டுப் பெண் பிள்ளைகள் ஆண் நண்பர்களுடன் பழகுவது பற்றி மட்டமாக அவதூறு பேசிய பெண்மணி தன் மகளும் அதே போல் பழகிய போது அடுத்தவர்கள் தன் மகளைப் பற்றி தப்பாக பேசுகிறார்களே என்று வருந்தினார்.

அடுத்தவர்களைப் பற்றிப் பேசும்போது தெரியவில்லை தனக்கு என்று வரும் போதுதானே வலி புரிகிறது.

அடுத்தவரை நோக்கி ஒரு விரலை நீட்டினால் மற்ற நான்கும் நம்மை நோக்கி இருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

தனக்குச் சாதகமாக ஏதும் நிகழும்போது ஒருவரை ராசியானவர் என்பதும் சாதகமில்லாத போது அப்போதே தெரியும் அவர் ராசியில்லாதவர் அதான் இப்படி' என்று தூற்றுவதும் மனிதர்களின் இயல்பாகி விட்டது.

மனிதர்களை மனிதர்களாகப் பார்க்காமல் ஜாதி,மதம்,அந்தஸ்து,செல்வாக்கு, என்ற அளவீட்டில் பார்க்காதீர்கள்.

ஒரு ஓவியர் யேசுபிரானின் படத்திற்கு மாடலாக ஒரு பொருத்தமான முகத்தைத் தேடினாராம். ஒரு நாள் ஒரு காட்டின் வழியே செல்லும் போது ஒரு மனிதனைக் கண்டாராம்.

பழங்களையும் கிழங்குகளையும் தின்று விட்டு,ஓடை நீரை பருகி ஆனந்தமாக இருந்த அவன் முகத்தில் சாந்தமும்,அமைதியும் கண்டு இவனே பொருத்தமானவன் என்று அவனை மாடலாக வைத்து யேசுவின் படம் வரைந்தாராம். அருமையாக வந்திருந்ததாம்.

அதற்குப் பரிசாக அவனுக்கு நிறையப் பணம் கொடுத்து நகரத்தில் அவனைக் கொண்டுவிட்டு வேண்டியதை வாங்கிக் கொள் என்று போய்விட்டார்.

சில காலம் கழித்து யேசுவியும் முடியும் நிலையில்யூதாஸின் உருவத்திற்கு ஆள் தேடிப் போனபோது கொடூர முகத்துடனும்,குரோதம் பொங்கும் விழிகளுடனும் ஒருவனைக் கண்டு அவனை வைத்து காட்டிக் கொடுத்த யூதாஸை வரைந்தார்.

பிறகுதான் தெரிந்தது கொண்டார் காட்டில் பார்த்தவன் தான் அவன்.அன்று கள்ளமில்லா மனதுடன் குழந்தையைப் போல் இருந்தவனின் பணமும்,ஆசைகளும் பெருகியதும் மாறிவிட்டான் என்பதைப் புரிந்து கொண்டார்.

மனிதன் தேவனாவதும்,சாத்தானாவதும் சூழ்நிலைகளின் ஆசாபாசங்களின் விளைவே அன்றி பிறப்பினால் அல்ல.

நேரத்திற்கு நேரம் மனிதர்கள் முழுக்க முழுக்க வெவ்வேறு முகங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர். நிறம் மாறும்போது குணம் மாறும் குணம் மாறும் போது தரம் மாறும்.

ரோஜாவுக்கு ஆசைப் பட்டால் அதன் முட்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது நியதி.

மனிதர்களையும் அவர்களின் குறை,நிறை களோடு ஏற்கப் பழகுவதே உண்மையான மனித நேயத்தின் வெளிப்பாடு.

- கண்மணி

ஹா ஹா ஹா...

ஆசிரியர்: டேய் ராஜா! உலகத்தை முதலிலை சுத்தி வந்தது யாரெண்டு சொல்லு

ராஜா: சேர்! சும்மா ஊர் சுத்திற வங்களைப் பற்றியெல்லாம் நாங்கள் ஏன் கதைச்சுக் கொண்டிருக்க வேணும் . வேறை கேள்வி கேளுங்கோ!

ஆசிரியர் ????

Residential Mortgages & Commercial Loans for Business

RS Finance

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Mortgages

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans

Shops
Petrol Stations
Restaurants
Care Homes Etc.

Please contact on these no's whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans

Contact:
Sri
297 High Street North,
Manor Park,
London E12 6SL
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755
Mob: 07803 600 543

மட்டைக் கிளப்பானின்....

அலசுவோம் -39

குறளி வீடு

அஞ்சன மையைப் பக்குவமாக அரைத்தெடுப்பதையும் ஒரு சிறுபிள்ளையைக் கொண்டு அம் மாயமையினூடாக சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலத்திலெல்லாம் முறையே நடந்த நடக்கும் நடக்கப்போகும் விடயங்களை ஆஞ்சனேயராகிய அனுமாரின் உதவியுடன் அறிவதையும் பற்றி சென்றமுறை எழுதினேன். நான் குறிப்பிட்ட அந்தக் குறளி வீட்டில் பரமக்குட்டிப் பரிசாரி அஞ்சனம் பார்க்கத்தொடங்கினார். அஞ்சனம் பார்த்ததற்கான நோக்கம். குறளியை ஏவியது யார் என்று அறிவதும், குறளி எதனூடாக ஏவப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்து அதற்கேற்ப மாற்று மந்திர வைத்தியம் பார்ப்பதும்தான்.

குறளி சாதாரணமாக உடும்பு, தவளை, சிறுமுதலை அல்லது சிலவேளைகளில் செத்துப் போன குழந்தை போன்றவற்றினூடாக ஏவப்படுவது வழக்கமாம். குறளியேற்றப்பட்ட சூனியப் புதையல் ஏவப்பட்ட வீட்டு வளவில் எங்காவது புதைக்கப்பட்டிருக்கும் அல்லது காட்டில் கட்டித்தொங்கவிடப்பட்டிருக்கும். அதைக் கண்டறிந்து கூறுவது அஞ்சனமையில் தோன்றும் அனுமாரின் வேலையாகும். ஏவற் சூனியம் கண்டுபிடிக்கப்பட்டால் அரைவாசிப் பிரச்சனை தீர்ந்தமாதிரித்தான். பின்னர் மாற்றுச் சூனியம் செய்து குறளியை வீட்டைவிட்டு அகற்றுவது இலகுவாகிவிடும்.

ஆனாலும் குறளியை ஏவிய மந்திரவாதி திறமைசாலியாக இருந்தால் மாற்றுச் சூனியம் சாத்தியமாகாமற் போகலாம். அப்படியாயின் அந்த மந்திரவாதியையே கண்டுபிடித்து அவரது காலைக் கையைப் பிடித்து மாற்று மாந்திரீகம் செய்யவேண்டும். சூனியத்தைச் செய்தவருக்கே அதைத்திருப்பிவிடக்கூடிய திற மைசாலிகளும் உள்ளனர்.

சிறுவயதில் இயற்கையாகவே பெரிய மனிதர் களின் வாயைப் பார்த்துக்கொண்டு திரியும் குணம் ஏற்பட்டுவிட்டதால் இத்தகைய செய்திகள் கல்லில் எழுத்துப் போல் என்மனதில் பதிந்துவிட்டன. அவற்றை உங்களோடும் பகிர்ந்துகொள்கிறேன்.

ஓரளவு எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்த சிறு குழந்தையொன்றின் உதவியோடு அந்த வீட்டில் அஞ்சனம் பார்க்கும் வேலை தொடங்கி விட்டது. நானும் அந்தவயதில் நன்றாக வாசிப்பேன். எனக்கும் போய் அந்த அஞ்சனமையில் அனுமாரைத் தரிசித்து விடவேண்டுமென்று ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை. வீட்டில் பெற்றோர் அதற்கு என்னை அனுமதிக்கவில்லை. நான் அந்த வீட்டிற்குள் சென்றால் எனக்கும் குறளி தொற்றிவிடுமென்று அம்மா பயந்தா. நானும் பயத்தில் நமக்கு என் வீண்வம்பு என்று ஒதுங்கிக்கொண்டேன்.

நண்பர்களோடு வெளியில் தெருவில் நின்று நடப் பவைகளை வேடிக்கை பார்ப்பதும் திடீரென ஏதாவது மரக்கிளைகளில் காகம் குருவிகளால் சலசலப்பு ஏற்பட்டாலும் குறளியென்று பயந்து தலைதெறிக்க எனது வீட்டுப்பக்கம் ஓடுவதுமாக மிகவும் பரபரப்பாக அந்தக் காலம் கழிந்தது. ஆனால் குறளியை ஊலாயமாக்கி குறளிவித்தைகளைப் பழகிவிடவேண்டுமென்ற ஆர்வம் ஓயாது என்னைத் தொடர்ந்தது.

அஞ்சனம் பார்த்த வீட்டிலோ ஒருநாள் திடீரென்று அல்லோலகல்லோலமாக இருந்தது. பரமக்குட்டிப் பரியாரிக்கும் அந்தப் பிள்ளைகளின் மாமானாரான துரைச்சாமி என்பவருக்கும்? அஞ்சனம் பார்த்த விடயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ளுமளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. வீட்டிற்குள்ளிருந்து வாசலுக்கு வெளியே வந்த இருவரும் கட்டிப் புரளத் தொடங்கி விட்டனர். குய்யோ முறையோவென்று ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

அஞ்சனமையில் தோன்றிய அனுமார் குறளியை ஏவியது பரமக்குட்டிப் பரிசாரிதான் என்று எழுதியதாகவும் அதை வாசித்த குழந்தையை மேற்கொண்டு அஞ்சனம் பார்க்க விடாது பரியாரி தடுத்ததோடு கண்டவற்றைக் குழந்தை கூறவெளிக்கிட்டபோது அதைக் குழப்பியதாகவும் குற்றச் சாட்டுக்களை முன்வைத்துப் பரியாரியை துரைசாமி அடித்துக் கலைக்க வெளிக்கிட்டார். நின்றவர்கள் குறுக்கே புகுந்து ஒருவாறு சண்டையைக் கலைத்து விட்டார்கள்.

பரியாரியோ பொல்லாத மந்திரவாதி அவருக்கு எதிர் மாந்திரீகம் போட அங்கு யாருமில்லை. அதனால் அவரைக் கொண்டே அவரால் ஏவப்பட்ட குறளியை விரட்டவேண்டுமென்று பலரும் கருதினார்கள். பரிசாரியைக் கொண்டே அந்த வீட்டில் தொடர்ந்தும் நிவர்த்தி மாந்திரீகம் செய்ததாக ஞாபகம். ஆனால் கடைசி வரை குறளி போனபாடில்லை.

இறுதியில் குறளிபிடித்த இரண்டு பெண்களையும் அந்த வீட்டைவிட்டு அகற்றித் தனித்தனியாக வேறு இடங்களில் கொண்டு போய் விட்டார்கள். அதன்பிறகு அந்த வீட்டில் இடம்பெற்ற குறளிச் சேட்டைகள் நின்றுவிட்டன. ஆனால் பெண்கள் போயிருந்த இடங்களில் மீண்டும் அதன் சேட்டைகள் ஆரம்பித்து விட்டன. அந்த இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் பின்னர் திருமணம் நிகழ்ந்தது. அதன்பிறகு குறளியின் சேட்டை தானாகவே நின்றுவிட்டது.

அந்த இளம் பெண்களைப் பீடித்த ஹிஸ்டீரியா நோயே குறளி வடிவில் அவ்வளவு கோளாறுகளையும் நடத்தியிருக்க வேண்டுமென்னும் கருத்து எனக்கு மிகப்பிற்பட்ட காலத்தில் பராயமறிந்து அறிவு முதிர்ச்சியடைந்த பின்னரே தோன்றியது. அதுவும் பிரபல பகுத்தறிவு வாதி ஆபிரகாம் கோவூரின் குறளிபற்றிய சில கட்டுரைகளை வாசித்தபோதுதான் ஆஹா! இதுதானா விசயம், இதுதான் நடந்திருக்கிறது என்ற எண்ணம் வலுப்பட்டது.

குறளியைப் பற்றி அந்த நாட்களில் நான் எனது ஊரில் வயதுக்கு மூத்த மனிதர்களிடமிருந்து அறிந்துகொண்ட பொய்களும் புரட்டுகளும் ஏராளம். குறளிவித்தைக் காரர்கள் குறளியை எப்படித் தங்களுக்கு வாலாயமாக்கிக் கொள்வது என்பது பற்றி நான் சிறுவயதில் அறிந்த செய்தியை இங்கு பகிர்கிறேன்.

தேவாங்கு எனப்படுவது நமது இலங்கை, இந்தியா மற்றும் மடகாஸ்கர் நாடுகளில் வாழும் சிறுவிலங்கு. அதனை லெமூர் என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

நீண்ட நெடுங்கடல்களை இந்த விலங்கு நீந்திக் கடந்திருக்க முடியாதாகையால், கடல்கோள்களால் நிலங்கள் பிரிக்கப்படமுன் ஒரே நிலத்திட்டாக மேற்கூறிய நாடுகள் இருந்ததாலேயே அங்கெல்லாம் வாழ்ந்த அந்த விலங்கு இன்றுவரை அழிந்துபோகாது காணப்படுகிறது என்றும், அந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அழிந்து போன எமது தென்குமரிக்கண்டத்தை தென் லெமூரியா என்றும் கூறுகிறார்கள்.

இந்தத் தேவாங்கு இந்து சமுத்திரப் பிரதேசத்துக்கே உரியவோர் விசேடித்த விலங்காகும். எப்போதும் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய் கண்களை உருட்டி விழித்தபடி மரங்களில் தொற்றிக் கொண்டிருக்கும் இந்த நோஞ்சான் விலங்கின் முக்கிய உணவு மயில் என்றும் மயிலைப் பிடித்து அதன் மூளையை இவ்விலங்கு குடித்துவிடும் என்றும் கூறுவார்கள். மயில் தன்னைப் பாதுகாக்க இரவில், இறந்து காய்ந்த மரங்களிலேயே தங்கும்.

மயிலைப்பிடிக்கத் தேவாங்கு மரத்தில் ஏறும்போது பட்டைகள் உடைந்துசப்தம்உண்டாவதால்மயில்தனக்கு வரும் ஆபத்தையுணர்ந்து பறந்துவிடும்.

தொடருவம்

இல்லந்தோறும் இனிய வாழ்வு

மூளைத் திறன்

Dr. பாலேந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

ஒருவருடைய மூளை திறன் பெரும்பாலும் அவருடைய நினைவுதிறனில் தங்கியுள்ளது. நினைவு ஆற்றல் குறைவடைய மூளையின் முழுமையான செயலாற்றல் பாதிப்படைகிறது. 2000 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணிப்பின்படி உலகில் சுமார் 22 மில்லியன் மக்கள் மறதிநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மறதியை கொடுக்கும் இரண்டு முக்கியமான நோய்கள்

1. Dementia 2. Alzheimer's Disease

இந்நோய்களின் குணங்குறிகள் வெளிப்படையாக தெரிய ஆரம்பிப்பதற்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்னரே இந்நோயின் ஆரம்பம் மூளையில் ஏற்பட்டிருக்கும். ஒருவருடைய மூளை திறம்பட இயங்கும்போது அவருடைய உயர்வு, நினைவு, கனவு, எண்ணங்கள் யாவும் சிறப்பாக இருக்கும். மூளை செயலாற்றல் சற்று மாறுபட்ட உடனேயே அது சம்பந்தபட்டவரின் நாளாந்த வாழ்வினைப் பெரிதும் பாதிக்கும். ஒருவருடைய நினைவுதிறன் குறை வடையும்போது மூளையை பரிசோதிப்பது நல்லது.

1. CT Scan - இதை computerised x-ray Tomography எனப்படும். இதன்போது x-ray கதிர்மூலம் மூளையின் முப்பரிமாண கட்டமைப்பை படம் எடுக்கப்படும். இதில் மூளைக்கட்டி அல்லது குருதி ஓட்டப்பிரச்சனையினால் பாதிக்கப்பட்ட மூளையின் பகுதியைக் கண்டு கொள்ளலாம்.

2. MRI Scan - இது Magnetic Resonance Imaging எனப்படும். இதன்போது தலைமேல் பாய்ச்சப்படும் மின்காந்த அலைகள் மூளைக்கலங்களில் ஒரு அதிர்வினை ஏற்படுத்தும். இவ்வதிர்வுகள் கம்பியூட்டர் உதவியினால் உருமாற்றப்பட்டு மூளையின் படத்தினை வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தும். சிறப்பாக இதன்மூலம் மூளையின் வெவ்வேறு பகுதிகள் எந்த அளவு Oxygen பயன்படுத்துகின்றன என அறியலாம்.

3. Pet and Spect Scans - இதனை Positron Emission Tomography எனப்படும். இதன்மூலம் மூளையின் வெவ்வேறு பகுதிகட்கு செல்லும் குருதியின் அளவினைக் கண்டறியலாம். ஒருவருடைய மூளைத்திறன் அளவு கேள்விக்குறியாக வரும்போது MRI Scan மூலம் மூளையின் வெவ்வேறு பகுதிகளின் Oxygen பயன்படுத்தும் அளவினையும், PET Scan மூலம்மூளைக்கு செல்லும் குருதியின் அளவையும் கண்டுகொண்டு ஆக்கபூர்வமான முடிவுகளை ஏற்று நடைமுறைப்படுத்தலாம்.

மூளையின் தொழிற்பாட்டைப் பற்றி அறிந்தால், பின்னர் அதில் ஏற்படும் பாதிப்புக்களை அறிந்து கொள்வது இலகுவாகும். தினமும் எமது மூளையில் சுமார் 60,000 எண்ணங்கள் தோன்றும். இவற்றில் பல மீண்டும் மீண்டும் தோன்றுவன. ஒவ்வொரு எண்ணமும் அதனுடன் தொடர்புடைய பல விடயங்களை மூளையில் தூண்டிவிடும். மூளையில் சுமார் 100 பில்லியன் கலங்கள் Neurons உள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருக்கும். ஒவ்வவொரு கலமும் மற்றதுடன் தொடர்பு கொள்ள Neurotransmitters எனப்படும். இரசாயனப்பொருள் உதவும். இவற்றில் சில

1. Serotonin 2. Adrenalin 3. Noradrenalin
4. Dopamine 5. Acetylcholine

இவை பெரும்பாலும் புரதத்திலுள்ள அமிலோ அமிலங்களில் இருந்து உற்பத்தி யாகின்றன. மூளை சிறப்பாக தொழில்பட பின்வரும் உணவுப் பொருட்கள் மிக அவசியம்.

1. விட்டமின் A,B,C,D 2. கனிப்பொருட்கள் Zinc, Magnesium
3. Phospholipids 4. Amino Acids
5. Glucose 6. Oxygen

மேற்கூறிய உணவுப்பொருட்கள் அனைத்தும் போதிய அளவு கிடைக்கும்போது மூளை சிறப்பாக தொழிற்படும். நன்கு தொழிற்படும் மூளை தனது நினைவுஆற்றல், சிந்தித்து செயல்படல், முடிவுகளை எடுத்தல், உணர்ச்சிகளை சீராக வைத்திருத்தல் ஆகிய செயல்களை திறம்பட ஆற்றும்.

உலகத்தமிழர் கலை கலாச்சார மன்றம் பெருமையுடன்
வழங்கும்

இன்னிசை மாலை

Tickets £7

Date & Time: 08/09/2007 சனிக்கிழமை மாலை
5.30 pm (doors open 5.00 pm)

இடம்:

Greenford Assembley Hall
Greenford
Middlesex
UB6 9QN

ஆதரவு வழங்குவோர்

Priya Resturant
(South indian & Sri Lankan Cusine)
Empire Lets Estate Agent

ஐரோப்பாவில் முதற் தடவையாக இலங்கையில் பகழ் பெற்ற கீபோர்ட் வாத்தியக் கலைஞர் திரு Fajas அவர்கள் லண்டனில் புகழ் பெற்ற வாணம்பாடி இசைக்குழுவினர்களுடன் இணைந்து வழங்கும் இன்னிசை காலங்கள்

சங்கீத பூஷணம் திரு குற்றாலம் நாகராஜனின் சங்கீத இசைக் கச்சேரியும்

பரத சேஸ்த்ர நாட்டியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற் உள்ளன

இதில் திரட்டப்படும் நிதி அனைத்தும் வெண்புறா நிறுவனத்திற்கு வழங்கப்பட உள்ளது

கானாத் தவறாதீர்கள் தொடர்புகளுக்கு 07903652581



தாயாய், சகோதரியாய், தோழியாய்...

நான் அண்மையில் இலங்கை வன்னியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்குப் போயிருந்தேன் அந்த அனுபவங்களை ஒரு குறிப்பாக எழுதியிருக்கிறேன்

- த அகிலன்

'குழந்தைகள் நாம் குழந்தைகள் நாம்
அண்ணனின் அன்பு குழந்தைகள் நாம்'

என்று ஆடிப்பாடுகிற சிறுவர்கள் எல்லோரும் 3-12வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் மழலைமுகம் மாறாது இன்னமும் இருக்கின்ற தமிழ்மண்ணின் புன்னகைகள். ஆனாலும் அவர்கள் வயது களையும் முகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிற புன்னகைகளையும் மீறி துருத்திக் கொண்டிருக்கிற ஏக்கமும் துயரமும். மனசின் ஆழங்களை ஊடுருவி நெருடாம லில்லை.

ஏதோ ஒரு விதத்தில் போர் இவர்களைப் பாதித்திருக்கிறது.இவர்கள் கடந்து வந்து வாழ்வின் சிறிய தூரத்துக்கிடையில் துயரம் அவர்களைத் தடுத்துத் திசைமாற்றி யிருக்கிறது. அந்தக்கசப்பான அனுபவங்களின் வலி அவர்களின் புன்னகைகளின் வளி எம் முகத்தில் அறைகிறது.

எல்லாரும் போரின் பிரசவிப்புக்கள்போர் அவர்கள் பெற்றோரைத்தின்றுவிட இப்போது செஞ்சோலை என்கிற அவர்களின் வீட்டில் ம் அப்படிதான் அழைக்கிறார்கள் 250 பேர் இருக்கும் வீடு ஆச்சரியமான 250பேர்கொண்ட குடும்பம். எனக்கு ஆச்சரியம் நிறைந்து போன வார்த்தையாயிருந்தது வீடு என்பது. செஞ்சோலை ஏதோ ஆச்சிரமமோ னொதை இல்லமோ என்றநினைப்புடன் நுழைகிற எமக்கு ஆச்சரியமாயிருக்கிறது அவர்களின் நிறைவும் அன்பும் மகிழ்ச்சியும். அனாதை இல்லம், ஒரு ஆச்சிரமம்,ஆதரவற்றோர் இல்லம், இப்படியான இடங்களில் இருக்கிற குழந்தைகள் யாராவது தங்கள் இடத்தை வீடு என்று சொல்கிறதா? ஆனால் இவர்கள் அழுத்தம் திருத்தமாக உச்சரிக்கிறார்கள் வீடு.

அந்தக் குழந்தைகளைப்படம் பிடிப்பதற்கான முன்னனுமதியுடன் நானும் நண்பர் பகியும் போயிருந்தோம். வாங்கோ கணீராய் கரிசனை யாய் ஒலிக்கிற செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனியின் குரல். கட்டடாயம் எங்களுக்கு ஒரு பிரதி தந்திரவேணும் என்கிறா செஞ்சோலையின் பெரியம்மா.

குழந்தைகள் ஜனனி அக்காவை பெரியம்மா என்றே அழைக்கிறார்கள். எப்போதும் இவரைச் சுற்றி குழந்தைகள். அவரின் கைகளையும் கால்களையும் பிடித்துத் தொங்குகின்றன குழந்தைகள்.

உள்ளே நுழைந்ததும் இருக்கிற பூங்கா குழந்தைகளாலும் மகிழ்ச்சியாலும் நிறைந் திருக்கிறது. அங்கே யாரும் துயரமாயில்லை யாரும் தனித்தில்லை எல்லோரும் வித்தியாசமி ன்றி இருந்தார்கள்.

கோபம், சின்னதாய் பொறாமை, செல்லப் போட்டி என்று குறும்பும் கும்மாளமும் தலை விரித்தாடின. அவர்களின் உலகம் இயல் பாயிருந்தது. போரின் துயர் களைந்த அவர் களின் அந்தக் கணங்களை படமாக்கத் தொடங்கினோம் நானும் பகியும்.

> இந்தக் குட்டியை ஒருக்கா படமெடுங்கொ ஒரு ஒன்றரை வயதுப் பாப்பாவை இடுப்பில் செருகியபடி கேட்டாள் 7 வயது அக்கா சீ 7 வயது தாய்

குழந்தைகள் எங்களைச் சூழ்ந்து கொண்டு மாமா என்னை எடுங்கோ மாமா என்னை எடுங்கோ என்று கத்தின. எல்லாக் குழந்தை களும் சேர்ந்தாற்போல கேட்க திணறிப் போனோம் நானும் பகியும். ஏதோ ஒரு குழந்தையைப் படமெடுத்துத் திரும்புவதற் கிடையில் அடுத்தது கோபித்துக் கொண்டு விழிகளை உருட்டும் அந்த விழிஉருட்டலைப் படமெடுத்து திரும்ப அடுத்தது என்னை மாமா என்று வெகுளியாய் சிரிக்கும்.

மாமா மாமா என்ற அவர்களின் அழைப்பில் துளியும் களவில்லை வேசமில்லை தூய்மை யான அவர்களின் அந்த அழைப்பு அதுதான் எனக்குள் அவர்களை நிறைத்தது.

எனக்கு என் சின்னவயசு ஞாபகங்கள் நிறைத் தன என்னைப் படமெடுத்தவர்களையும் நான் மாமா என்றுதான் அழைத்திருக்கிறேன். ஆன ால் அது அம்மா எனக்குச் சொல்லித்தந்தது. அதில் அன்பில்லை உறவில்லை எந்த உரிமையும் கிடையாது. ஆனால் இவர்கள் நெருகமாக சூழ்ந்து கொண்டு சொல்கிறார் கள் மாமா மனசை பிசைகிற குரல் அதில் ஏதோ இருக்கிறது.

எப்படி எப்படியெல்லாம் அந்தக் குழந்தை களைப் படமெடுக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அப்படியெல்லாம் எடுக்க என்னால் முடியவில்லை.

குழந்தைகள் என்னைக்கொமாண்ட் பண்ணின தங்களை நான் எப்படிப்படமெடுக்க வேண்டு மென்று அவர்கள்தான் தீர்மானித்தார்கள். மாமா இந்தக்குட்டியைஒருக்காபடமெடுங்கொ ஒரு ஒன்றரை வயதுப் பாப்பாவை இடுப்பில் செருகியபடி கேட்டாள் 7 வயது அக்கா சீ 7 வயது தாய்.மாமா படமெடுக்கப்போறார் சிரியுங்கோ நான் திணறிப் போனேன் ஏனோ தொண்டை வற்றியது.

மாமா நான் இந்த ரோசாப் பூவுக்குப் பக்கதில நிக்கட்டா சீ இது சரியில்லை திருப்தியில்லாது சிலபேர் ஓடிக் கொண்டிருந்தார்கள்.அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஓடினேன்.

மாமா எங்கட வீட்டுக்கு வாங்கோ அவர்கள் அழைப்புக்குப்பணிந்தபோதுபூங்காவைவிட்டு கொஞ்சம் தள்ளியிருந்தது வீடு. ஒரு அளவான கட்டடங்கள் கொண்ட பல தொகுதிகள் 14 பேர் வசிக்கும் பல வீடுகள் அவர்களது வேலையை அவர்களே செய்தார்கள் வீடு கூட்டினார்கள், முத்தம் கூட்டினார்கள்

பூஞ்செடிக்குத் தண்ணீர் ஊற்றினார்கள். செஞ்சோலையின் ஒவ்வொரு துளியும் அந்தக் குழந்தைகளின் அன்பையும் திருப்தியையும் சேர்த்துக்கொண்டு செழித்திருந்தது.

மாலை தேனீர் குடித்து வெளியேறுகையில் எதையோ விட்டு விட்டு வருவது மாதிரியிருந்தது.

திரும்பிப் பார்த்தேன் எம்மைப் பார்த்து கைய சைத்த குழந்தைகளின் புன்னகைகளைப் பத்திரப்படுத்திக்கொண்டேன். வரும் போது தான் கவனித்தேன் பூங்காவின் ஒரு கரையோர மாக பங்கர் புதிதாக வெட்டப்பட்டிருக் கிறது. மறுபடியும் யுத்தம் விழுங்கப்போகிறதா? மனம் அலை பாய்கிறது.

திரும்புகின்ற வழிமுழுதும் நெடுநேரமாய் காதுகளில் வழிந்து மனசை நிறைத்தது துளியும் கலப்படமில்லாத மாமா மாமா என்கிற அன்பின் குரல்.

"இன்ரர்நெட்டில் இருப்போர்க்கோர் இனிய செய்தி
ஓடிப்போய் பாருங்கோ....."
orudirectory.com

oru directory

உங்கள் விபரங்களை நீங்களே சரி பார்த்துக் கொள்ளவும்
www.orudirectory.com

சொப்ட்வேயர் கனவுகளும் நிஜங்களும்!

வாழ்க்கை எப்படி எல்லாம் மாறி போகுதுன்னு சில சமயம் நினைத்து பார்த்தால் சிரிப்பு தாங்க வருது. நான் எப்பவுமே ஏதாவது கனவுகளிலே கற்பனைகளிலே மூழ்கியேதான் இருப்பேன். அதுவும் நான் கொலேஜ் படிக்கர சமயத்துல எல்லாம் வேலைக்கு சேர்ந்த அப்பறமா எப்படி எல்லாம் இருக்கனும் எப்படி எல்லாம் இருக்கும் அப்படின்னு நிறைய யோசிப்பேன், கனவுகள் காணுவேன்.

அப்போ எல்லாம் சாப்ட்வேயர் வேலைனா எனக்கு என்ன கனவுன்னா, மணி கணக்கா சும்மா ஏதாவது கீபோர்ட்ல தட்டிட்டே இருக்கணும், ஆயிரக்கணகான வரிகளிலே கோடு எழுதி தள்ளனும், கன்னா பின்னானு யோசிச்சி உருப்படியான சோப்ட்வேயர் எல்லாம் உருவாக்கணும்னு அப்படின்னு கனவு கண்டுக்கிட்டு இருந்தேன்.

உருவாக்கம்!!! அதுதான் நான் பண்ண விரும்பியது. எல்லோருக்கும் உபயோகமான விஷயங்களை பண்ணணும், கணினிகளை மக்கள் சுலபமா பயன்படுத்தர மாதிரி விஷயங்கள உருவாக்கணும். இது மாதிரி ஒரு விஷயம் இருந்தா நல்லா இருக்கும்னு எனக்கு எதெல்லாம் தோணுதோ அதெல்லாம் நானே உருவாக்கலாம் அப்படின்னு எல்லாம் யோசிச்சிட்டு இருப்பேன்.

நாம வழக்கமா உபயோகபடுத்தர ஒரு சின்ன வலை கருவியில இருந்து இயக்குத் தளம் (operating system) வரைக்கும் என் கனவுகள் நீண்டுக்கிட்டே போகும். உருவாக்கணும்!!! அதுதான் நான் பண்ணணும்னு நெனைச்சது. மக்கள் கண்கள் விரிந்து தன்னை அறியாமல் புன்னகைக்கர மாதிரி கலை நுணுக்கமான விஷயங்களை உருவாக்கணும் (flash movies மாதிரி), மக்கள் கவலைகளை மறக்கர மாதிரி விஷயங்களை பண்ணனும், கணினியின் பயன்பாடுகளை உரக்க பறை சாற்றும் படைப்புகளை பண்ணனும், மக்களை பூரிக்க வைச்சு தகவல் தொழில்நுட்பத்தின் மந்திரத்துல மயக்க வெக்கர மாதிரி விஷயங்கள பண்ணனும்னு நினைத்தேன். என் உருவாக்கங்களால் மக்களை சந்தோஷப் படுத்தணும்னு நினைப்பேன்.

எனக்கு இப்போ இந்த துறையில் மூன்று வருடங்களுக்கு மேல் பணியாற்றிய பிறகு கொஞ்சம் திரும்பி பார்க்கும் போது இதுல எத்தனை கனவுகள் நனவாகி இருக்குன்னு யோசிச்சு பார்த்தால் சிரிப்புதான் வருது.

ஆரம்பம் எல்லாம் ஒழுங்காதான் இருந்தா மாதிரி இருந்துச்சு. பெங்களூருல இந்தியா விலேயே மிக புகழ் பெற்ற ஒரு தகவல் தொழில்நுட்ப கம்பெனியிலதான் வேலைக்கு சேர்ந்தேன். அகா புடிச்சாலும் புடிச்சோம் நல்ல புளியங்கொம்பாதான் புடிச்சிருக்கோம், இனிமே நம்ம இஷ்டப்படி சொப்ட்வேயர் உருவாக்கங்களா உருவாக்கித் தள்ளிக்கிட்டே இருக்கலாம்னு நினைத்தேன்.

மக்களை நேரடியா போய் சேரும் ஜன ரஞ்சகமான பொருட்கள் பண்ணனும்னு என க்கு ரொம்ப ஆவல் (அதாவது Google, Youtube, Meebo, Flickr/Picassa மாதிரியான உருவாக் கங்கள்) ஆனா B2B (Business to business) என்று சொல்லப்படும் அலுவல் சார்ந்த தொழில் அமைப்பு பற்றி எல்லாம் நான் அவ்வளவாய் அறிந்திருக்கவில்லை..

அதாவது ஒரு சின்ன கம்பெனியில் ஒரு சில நூறு அல்லது அதற்கும் கம்மியான மக்கள் பயன்படுத்தும் மென்பொருட்கள் எல்லாம் நான் யோசிச்சே பார்க்காத விஷயங்கள்.

இதெல்லாத்தையும் விட சப்போர்ட் (support) எனப்படும் மென்பொருள் மெகானிக் வேலை பற்றி நான் கேள்வி பட்டிருக்கவில்லை. இப்படிப்பட்ட சப்போர்ட் மற்றும் பராமரிப்பு வேளைகள்தான் இந்திய தகவல் தொழில்நுட்ப கம்பெனிகளின் முக்கியமான தொழில் என்று எனக்கு என்றைக்குமே தோன்றியது இல்லை.

ஒட்டுபோடுவது, பயன்பாடுகளை (applications) எப்படியாவது ஓடவைப்பது மட்டுமே இந்த கம்பெனிகளின் முக்கியமான வேலைகள் என்று நான் அறிந்திருக்கவில்லை.

> எல்லாவற்றிற்கும் மேலாக என்னால் என் பெற்றோருக்கு முன்னை விட சிறப்பான வாழ்க்கை நிலையை என்னால் அளிக்க முடிந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளாக நான் செய்து வந்திருக்கும் வேளைகளை இவ்வாறாக பிரிக்கலாம். பல பிரிவினருடன் பேசி வேலை யை முடிப்பது, உடன் வேலை செய்பவரிடம் தாஜா செய்து வேலை வாங்குவது,

உபயோகமே இல்லாத ஆயிரக்கணக்கான எக்செல் கோப்புகளை நிரப்புவது, புரொசஸ் (process) எனும் பெயரால் கோடிக்கணக்கான மணிகள் உப்பு சப்பில்லாத சொத்தை வேலைகள் செய்வது. வெளிநாட்டில் இருந்தால் இந்தியாவில் இருக்கும் சக பணியாளரிடம், இந்தியாவில் இருந்தால் வெளிநாட்டில் இருக்கும் சக பணியாளரிடமும் வேலை நிமித்தமாக சண்டை போடுவது, திடீரென்று கொடுக்கப்படும் ஒன்றுமே தெரியாத வேலைகளை வைத்துக்கொண்டு திரு திரு என முழிப்பது, ஆயிரம் வேலைகள் வந்து குவிந்த வண்ணம் கிடக்க, எதை எடுப்பது, எதை விடுப்பது என தெரியாமல் திக்கு முக்காடுவது, அவைகளை முக்கியத்து வத்திற்கு ஏற்றார் போல் வரிசை படுத்துவது, முக்கியத்துவம் திடீரென்று மாற்றப்பட அவற்றை மறுபடியும் வரிசை படுத்துவது, இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

இதில் கோட் எழுதுவதற்கான சந்தர்ப்பங்கள் எவ்வளவு என்று கேட்டால் மிகவும் சொற்பமே. சிறிதும் கலைத்திறனை வெளிக்கொணர முடியாத வேலை வகைகள். இதெல்லாம் கூட பரவாயில்லை என்று இருந்திருப்பேன், ஆனால் எனக்கு சுத்தமாக பிடிக்காத இன்னொ ன்றும் நான் எதிர்கொள்ள நேரிட்டது. இரவு வேளைகளில் வேலை பார்ப்பது.

இந்த கம்பெனியில் சேருவதற்கு முன்னாலே அமெரிக்காவில் இருப்பவருக்கு கணினி பழுதாகி விட்டால் தொலைபேசி வழியே உதவும் தொழில்நுட்ப உதவி குழு ஒன்றில் ஒரிறு மாதங்கள் பணியாற்றி இருந்தேன். அது இரவுவேளைகளில் பணியாற்றும் வேலைதான். அப்பொழுதே இரவில் பணியாற்றுவது நமக்கு சரி பட்டு வராது என்று தெரிந்துவிட்டது.

> சேருமிடம் ஏதும் இல்லாவிட்டாலும் வாழ்க்கை படகு ஓடிக் கொண்டுதான் இருக்கிறது

ஆனால் இந்த சப்போர்ட் தொழில் வந்தால் இரவில் வேலை செய்யும் கட்டாயங்கள் உண்டு. முடிந்த வரை வெளிநட்டில் வேலை செய்வோரின் எண்ணிக்கையை குறைத்து, அங்கு பகல் நேரமாய் இருக்கும்போது நமது இரவு நேரங்களில் அந்த வேலையை செய்தால்தான் இந்த நிறுவனங்கள் காசு சேர்க்க முடியும்.

அவர்களுக்கும் வேறு வழி கிடையாது. தகவல் தொழில்நுட்பத்தொழில் மிகவும் போட்டி நிறைந்த ஒரு சந்தை. வேலை முடிக்கும் நேரத்தை குறைத்துக்கொண்டே போக வேண்டும், தேவையான ஆட்கள் எண்ணிக்கையை குறைத்துக்கொண்டே போக வேண்டும் அப்பொழுது தான் லாபத்தை கூட்டி இந்த சந்தையில் நிலைக்க முடியும்.

இதனால் இரவில் வர வேண்டிய கட்டாயம் ஏற்படுமா? வேலை பளு காரணமாக வேலை செய்பவருக்கு மன உளைச்சல் அதிகமாகுமா? கஷ்டம்தான்!!! ஆனால் ஒன்றும் செய்ய முடியாது.

நீங்கள் செய்யவில்லை என்றால் வேறு ஒரு கம்பெனி ஒடரை தட்டிக்கொண்டு போய்விடும். இந்த பைத்தியக்காரத்தனமான ஒட்டப்பந்தயத்தில் எதையும் விட்டு கொடுக்க முடியாது. போட்டி கம்பெனி தொழிலாளருக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கிறதோ அதற்கு மேலாக பெரிதாக ஒன்றும் கொடுக்க முடியாது. கொடுத்தால் போட்டி விளிம்பை விட்டுக்கொடுக்க வேண்டிய அபாயத்திற்கு இந்த கம்பெனிகள் தள்ளப்பட்டு விடும்.

இந்த கம்பெனிகளுக்கு ஓடரை தரும் வெளிநாட்டு கம்பெனிகளுக்கும் இதே போன்ற நிலைதான். ஒரு வேலையை ஒரு அமெரிக்க கம்பெனி செய்வதற்கு 100 டாலர்கள் ஆகும், அதே வேலையை ஒரு இந்திய கம்பெனி 40 டாலரில் முடிக்கும் என்றால் கண்டிப்பாக இந்திய கம்பெனிக்கு தான் கொடுக்க தோன்றும். அதில் மிச்சமாகும் 60 டாலரை அவன் கம்பெனியின் இதர வளர்ச்சி பணிகளில் செலவிடுவான்.

அதே இந்திய கம்பெனிகளில் ஒரு கம்பெனி 40 டாலருக்கு செய்கிறது என்றும், மற்றொன்று 35 டாலருக்கு செய்கிறது என்றால் அவன் 35 டாலர் கம்பெனியிடம்தான் கொடுத்தாக வேண்டிய சூழ்நிலை. இல்லையென்றால் அவன் அவனுடைய போட்டி கம்பெனியிடம் தோற்று விடுவான்! இங்கே யாரையும் குறை சொல்ல முடியாது. எல்லோருக்கும் அவர்கள் அவர்களின் நிர்பந்தங்கள், பிரச்சினைகள்,

அப்பொழுது எங்கள் கனவுகளுக்கு யார் பதில் சொல்வது?? என்னை போன்று எதிர் பார்ப்புகளுடம் வரும் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் நிலைமை தான் என்ன?? எதையாவது உருவாக்க வேண்டும் என்று எங்களின் தாகம் என்ன ஆவது?

இது மாதிரி பல கேள்விகளுக்கு எனக்கு இன்னைக்கு வரை சரியான பதில் இல்லை இத்தனையும் சொன்ன பிறகு இந்த துறை யால் நான் பெற்ற நன்மைகளை பற்றி குறிப்பிடவில்லை என்றால் நான் நன்றி கெட்டவனாகி விடுவேன்.

தீவிரமான வேலை சூழ்நிலைகளால் நான் முன்னைவிட பொறுமையாய் யோசிக்கும் மனநிலை பெற்றேன். நிறைய பேசி பேசி என் பேச்சாற்றல் கொஞ்சம் வளர்ந்து விட்டது. உலகத்தின் முக்கியமான நாடுகளில் ஒன்றிற்கு சென்று தங்கி வாழும் அனுபவம் கிடைத்தது. எங்கள் குடும்ப பொருளாதார நிலைமை மேம்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக என்னால் என் பெற்றோருக்கு முன்னை விட சிறப்பான வாழ்க்கை நிலையை என்னால் அளிக்க முடிந்தது. மற்ற எல்லாவற்றையும் விட கடைசி விஷயம் தான் எனக்கு மிகவும் திருப்தி அளிக்கும் விஷயம்.

ஆனால் ஏதாவது கலைத்திறன் வாய்ந்த விஷயங்களை உருவாக்கவேண்டும் என்ற என் கனவுகளை என்னால் மறக்க முடியவில்லை.

பல சமயங்களில், என் திறைமைகள் மற்றும் எண்ண ஓட்டத்துக்கும் இந்த துறைக்கும் சம்பந்தமே இல்லையே, நான் இந்த துறையில் என்ன செய்துகொண்டு இருக்கிறேன்? என்று இயலாமை கலந்த ஒரு ஏக்கம் என்னை குழப்பமடைய செய்து விடும்.

பேசாமல் புகைப்பட துறையில் புகுந்து விடலாமா? விளம்பரத்துறையில் விழுந்து விடலாமா? எழுத்து துறையில் எழுந்து விடலாமா? என்று நிறை வேறாத கோட்டை களைகட்ட ஆரம்பித்து , சிறிது நேரத்தில் எதார்த்தத்திற்கு திரும்பி விடுவேன்.

சேருமிடம் ஏதும் இல்லாவிட்டாலும் வாழ்க்கை படகு ஓடிக்கொண்டுதான் இருக்கிறது! :-)

- சிவியார்

HERBA NATURELLE

★ Hair Dye, அழகு சாதனப் பொருட்கள்
★ Vitamins & Minerals
★ உடற்பயிற்சிக்கான போசாக்கு வகைகள்
★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்
★ மூலிகை மருந்துகள்

வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

மருந்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE Natural Health Centre, 1410, London Road, Norbury SW17 4BZ

Tel: +44 (0) 20 8765 9015 / Email: sales@herbanaturelle.com / Web: www.herbanaturelle.com

சாய்ந்த கோபுரங்கள்...

புராணங்களும் இதிகாசங்களும்

இளங்கோ
(ஒரு பேப்பருக்காக)

புராணங்கள் இந்து மதத்தின் அடிப்படை வேர்கள். புராணங்கள் இல்லை என்றால் இந்து மதமும் இல்லை. கடவுள்களும் இல்லை. ஏனெனில் புராணங்களில் வரும் கதாபாத்திரங்களே இந்து மதத்தில் கடவுள்களாக விளங்குகின்றன. ஆத்திக அன்பர்கள் புராண இதிகாசங்கள் மீது இருவித கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். பலர் அவற்றை உண்மையானவை என்று முழுதாக நம்புகிறார்கள். வேறு சிலர் அவை கற்பனையாக இருந்தாலும் அவை போதிக்கும் கருத்துக்கள் நீதியையும் ஒழுக்கத்தையும் போதிப்பவையாக இருக்கின்றன என்கிறார்கள்.

சிறு வயதில் நான் முதல் கருத்தையும் அதன் பின்னர் இரண்டாவது கருத்தையும் கொண்டிருந்தேன். தற்போது புராணங்கள் தொடர்பான எனது கருத்துக்கள் தலைகீழாக மாற்றம் பெற்றிருக்கின்றன.

புராணங்களில் வரும் கடவுள் பாத்திரங்கள் விலங்குகளும் மேற்கொள்ளாத இழிந்த முறையை மேற்கொண்டுள்ளன என்பதை பக்த கோடிகள் பாராயணம் செய்யும் புராண ஏடுகளே நமக்கு சாட்சியாக விளக்குகின்றன.

எடுத்துக் காட்டாக தாருகா வனத்து முனிபத்தினிகளை பாலியல் வல்லுறவு கொண்ட சிவனார், தான் பெற்ற மகளான திலோத்தமையை தனது தாரமாக்கிக் கொண்ட பிரம்மா, தனது கண்ணன் அவதாரத்தில் பல்லாயிரக் கணக்கான கோபியருடன் ராஸ லீலை நடத்திய விஷ்ணு. இந்த மும்மூர்த்திகள் மூவரும் சேர்ந்து அத்தி என்ற முனிவரின் மனைவியான அனுசூயையை நிர்வாணக் கோலத்தில் பார்க்க முற்பட்டது என இந்தப் புண்ணியக் கதைகளின் ஒழுக்க விழுமியங்கள் நைல் நதி அளவுக்கு நீளுகின்றன.

மும்மூர்த்திகளின் செயல்களே இப்படி என்றால் மற்றவர்களைப் பற்றி சொல்லியா தெரிய வேண்டும். இவை எந்த ஒழுக்கத்தையும் நீதியையும் போதிக்கின்றன என்பதை இதைப் படிப்பவர்களின் மூளையின் செயற்பாட்டிற்கே விட்டுவிடுகிறேன்.

கடவுளர்களின் செயல்களை வெறும் பால் மயக்கத்தோடு பார்க்கக்கூடாது என வாதிடுபவர்களும் உள்ளனர்.

பாலியல் என்பது தவறான கருத்து அல்ல. அகநானூறு குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலும் பாலியல் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனால் புராணங்கள் ஒழுக்கத்துடன் பாலியலைப் பேசவில்லை. பிறன் மனை நோக்கியவர்கள், பெற்ற பெண்ணையே பெண்டாள நினைத்தவர்கள், விலங்குகள் என்றும் பாராமல் அவற்றோடும் உடலுறவு கொண்டவர்கள் என அருவருக்கத்தக்க செயல்களை செய்தவர்களை தேவர்கள் என்றும் கடவுள்கள் என்றும் போற்றுகின்றன.

புராணங்கள் தமிழர்களுடைய சொத்து அல்ல. இது போன்ற அருவருப்பான கதைகளை பழந்தமிழர் எழுதவும் இல்லை. புறநானூற்றில் ஒரு காட்சி,

காதலன் ஒருவனுக்கு மார்பில் வேல் பாய்ந்து விடுகிறது. அவன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வருகிறான் ஏன்?

பூமியின் மடியில் விழுவதைவிட தனது காதலியின் மடியில் இறப்பதை அவன் விரும்புகிறான். இறுதியில் அவனது காதலியின் மடியிலேயே உயிர் விடுகிறான்.

இதைப்போல் குறுந்தொகையில் இரு மான்கள் தாகத்துடன் செல்கின்றன வழியில் தென்படும் சிறு குட்டையில் ஒரு மான் அருந்துவதற்குத்தான் நீர் உள்ளது. இரண்டும் சென்று வாயை வைக்கின்றன ஆனால் நீர் அப்படியே உள்ளது. ஆண் மான் குடிக்கட்டும் என்று பெண் மானும் பெண்மான் குடிக்கட்டும் என்று ஆண் மானும் தங்கள் தாகத்தின் வலியை மறைக்கின்றன.

இவைகள் அல்லவா பண்பாட்டின் வேர்கள். ஆனால் நம்மவர்களோ தமிழ் இலக்கியங்களின் பெருமை தெரியாமல் புராணச் சாக்கடைக்குள் முகம் புதைக்கின்றனர்.

நமது பழந் தமிழ் இலக்கியங்களில் வரும் கதைகளை படிக்கும் போது வீரம் மிளிர்கிறது. நேர்மைப் போரிடை புகுந்து வாழாத தமிழனை வரலாறு மதிக்காதென்பது அக்கதைகளில் தெரிகிறது.

இமய வரம்பினில் புலிக் கொடியைப் பறக்க விட்ட கரிகாற் சோழன், தமிழைப் பழித்த கனக விசயரின் தலையில் கல்லினை ஏற்றி கண்ணகிக்கு விழா எடுத்த சேரன் செங்குட்டுவன், ஆரியப் படை வென்ற தலையனங் கானத்துச் செருவென்ற பாண்டியன், எதிரியிடம் சரணடைந்து உயிர் வாழ்வதை விட மரணம் பெரிதென அதனை வரவேற்ற கணைக்கால் இரும்பொறை போன்றவர்களின் கதைகளைப் படிக்கும் போது வீரமும் தியாகமும் கொப்பளிக்கக் காண்கிறோம்.

ஆனால் இதிகாசங்களில் வரும் போர்களிலோ சூது, வஞ்சகம் தவிர வேறு என்ன இருக்கிறது.

வாலி, பீஷ்மர், கர்ணன், துரியோதனன், அபிமன்யு என ஒருவருமே நேர்மையான முறையில் கொல்லப்படவில்லை.

போரில் ஆயுதம் தரிக்க மாட்டேன் என தான் செய்த சத்தியத்தையும் மீறி கடவுள் அவதாரமாகக் கருதப்படும் கண்ணனே பீஷ்மரைக் கொல்ல சக்கராயுதத்தை எடுத்துக் கொண்டு ஓடிய கூத்துக்கள்தான் நிறைந்திருக்கின்றன.

அதீதக் கற்பனை கொண்ட கதைகளை நாங்கள் நம்பத் தேவையில்லை அதற்காக அவைகளை வெறுக்க வேண்டிய கட்டாயமில்லை. புராணக் கதைகள் பல நாடுகளில் இருந்திருக்கின்றன. குறிப்பாக கிரேக்க நாட்டு புராணக்கதைகள் மிகவும் புகழ் பெற்றவை.

ஆனால் அந்தக் கதாபாத்திரங்களுக்கு யாரும் கோவில் கட்டி குடமுழுக்கு செய்வதில்லை. ஒரு காலத்தில் கடவுள்களாக வழிபட்ட அந்த கதாபாத்திரங்களின் சிலைகள் தற்போது அருங்காட்சியத்தில் காட்சிப் பொருள்களாக மாறிவிட்டன. அவற்றின் வழிபாட்டு இடங்கள் வெறும் புராதனச் சின்னங்கள் என்ற முறையில்தான் கிரேக்கம் போன்ற நாடுகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்துப் புராணங்களின் தன்மையோ சற்று வேறுபட்டது. அவை வெறும் அதீதக் கற்பனைக் கதைகளாக மட்டும் இருந்தால் விக்கிரமாதித்தன் கதைகளைப் போல் அல்லது தற்போது மேலை நாடுகளில் சக்கை போடு போடும் ஹரிபோர்டர் போல் வாசித்துவிட்டுப் போகலாம்.

மாறாக அவைகளில் தமிழ் விரோதப் போக்குகள் காணப்படுகின்றன. வேத உபநிடதங்களைப் போல் இவைகளும் பார்ப்பனர்களை உயர்த்தி சூத்திரர்களை தாழ்த்தியே எழுதப்பட்டிருக்கின்றன.

மகாபாரதத்தில் துரோணர் என்ற பிராமணருக்காக ஏகலைவன் என்ற சூத்திரனின் கட்டை விரலை வெட்டப்பட்டது [illegible] எடுத்துக்காட்டு. புராண இதிகாசங்களை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள் அவை ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் நடந்த போர்களை மையமாக வைத்து எழுதப்பட்டது என்ற கருத்தை முன் வைத்திருக்கிறார்கள்.

தங்களை எதிர்த்த தமிழ் மன்னர்களைத் தான் ஆரியர்கள் அசுரர்களாகவும், அரக்கர்களாகவும் சித்தரித்து புராணங்களைப் படைத்தார்கள். அத்துடன் இராவணனுக்கு பத்துத் தலை போன்ற அதீத கற்பனைகளையும் சேர்த்தார்கள்.

புராணங்களும் இதிகாசங்களும் பண்பாட்டையும் நீதியையும் போதிக்கும் கதைகள் அல்ல. மாறாக ஒழுக்கக் கேடுகளும் மனித ஏற்றத் தாழ்வுகளும் கபட நாடகங்களும்தான் அதில் நிறைந்து காணப்படுகின்றன.

MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors & Administrators for Oath

M Markandan LLB A Uddin (Hons) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

We specialise in ..
For all your needs in Immigration (All aspects upto house of lords), Commercial & Residential Conveyencing, Employment, Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney, Sponsorship Declaration, HSMP, Workpermits

MARKANDAN & UDDIN

விவாக விண்ணப்பம்

01.02.2006 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

அகதி விண்ணப்பம்

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்

Markandan & Uddin Solicitors

tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381
email info@msssolicitors.com
Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670

விசித்திரமான மூளை...



'நீயொரு மக்கு' என்ற சொற்றொடரை சில வேளை நீங்கள் இன்னொருவரை நோக்கி உபயோகித்திருக்கக்கூடும். அதுபோலவே உங்களைப் பார்த்தும் சிலர் 'நீயொரு மக்கு' என்று சொல்லிய அனுபவங்களும் உங்களிடம் இருக்கக்கூடும்.

இது வழமையான ஒரு விடயம் தான் என்றாலும் நான் சொல்ல வருவது வேறு விடயம். பள்ளி நாட்களில் இப்படி மக்கு என்று ஆசிரியரால் திட்டப்பட்ட ஒரு மனிதன் அசாதாரணமான மூளையைக் கொண்டிருந்ததும் அவர் விஞ்ஞானத்தில் பல நவீன கண்டுபிடிப்பக்களைச் செய்ததும் நீங்கள் அறியாமலிருக்கலாம்.

இருபத்தோராம் நூற்றாண்டின் 'தலை' சிறந்த விஞ்ஞானிகளுள் முதன்மையானவர்யார் என்று கேட்டால் அல்பர்ட் ஐன்ஸ்டைன் (Albert Einstein) என்று நீங்கள் நிச்சயமாக அறிந்து வைத்திருப்பீர்கள். அறிந்திருக்க வேண்டும்.

இந்த மாமனிதரின் மூளையானது, ஏனைய மனிதர்களின் மூளையிலிருந்து மாறுபட்டுள்ள விடயம் பற்றியும் நீங்கள் அறிந்திருக்கக் கூடும்.

எண்ணக் கருக்களை ஒழுங்கமைத்துக் கொள்ள முடியுமான ஆற்றலைக் கொண்டிருந்த அவரின் மூளை பௌதீகநிலையிலும்மாற்றங்களைக்கொண்டிருந்ததாக விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மூளை நரம்புகளுக்கு சொந்தமாக அமையும் glial எனப்படும் ஒருவகைக் கலங்களின் எண்ணிக்கையானது ஐன்ஸ்டைனின் மூளையில் மிகவும் அதிகமாக காணப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இதனாலேயே ஒழுங்கமைக்கும் ஆற்றலை ஐன்ஸ்டைன் அதீதமாக பெற்றிருந்தார் என விளக்கம் சொல்லப் படுகிறது. இந்த glial கலங்கள் நரம்புகளுக்குத் தேவையான பாதுகாப்பையும் ஆதாரத்தையும் வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு ஐன்ஸ்டைனின் மூளையில் காணப்பட்ட நரம்புகளின் அடர்த்தியும் மிகவும் அதிகமான தாகும். அத்தோடு இரு அரைக்கோளங்களையும் மூடிக் காணப்படும் காப்புறையானது சாதாரணமான மூளையிலுள்ளதை விட மிகவும் மெல்லியதாகவே காணப்பட்டுள்ளது.

கணித ஆற்றலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மூளையின் பகுதியில் வித்தியாசமான வளர்ச்சியும் அவதானிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மூளைகளைக் காட்டிலும் 15 சதவீதம் ஐன்ஸ்டைனின் மூளையில் அவை விருத்தியுற்று காணப்பட்டதாக அறியப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் அவரின் மூளையின் அசாதாரண அமைப்பைக் கண்டு ஆச்சரியமே உருவாய் காணப்படுகிறார்கள்.

ஆக உங்களையும் யாராவது மக்கு என்று திட்டுகிறார் களா? பிறகென்ன நீங்களும் ஒரு விஞ்ஞானி ஆகப் போகிறீர்கள். அவ்வளவு தான்.

-உதய தாரகை

மாத்தையாக்களும் .....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்தில் விடுதலைப் புலிகளின் உயர்ந்த பண்பு வெளிப்படுகிறது. மாத்தையா,கருணா போன்றவர்கள் விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுத்தாலும், அவர்களை விடுதலைப் புலிகள் காட்டிக் கொடுப் பதில்லை.

தமது இயக்கத்தில் இருந்த பொழுது அவர்கள் செய்த செயற்பாடுகளுக்கு தாமே பொறுப்பேற்றுக் கொள்ளும் சிறந்த பண்பை விடுதலைப் புலிகளிடம் காணக் கூடியதாக உள்ளது.

தமிழினத்தை வடக்கு கிழக்கு என்றும் தமிழர் முஸ்லீம் என்று பிளவு படுத்துகின்ற தீய சக்திக ளுக்கும் கறுப்பு ஆடுகளுக்கும் மத்தியில் இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாகவே இருக்கிறார்கள்.

முஸ்லீம் சமூகத்தை தனிக் கலாச்சாரம் உள்ள ஒரு தனித்துவமான சமூகமாக அங்கீகரித்திருக்கும் விடுதலைப் புலிகள் தமிழீழத்தில் முஸ்லீம்களுக்கு தனி அலகு வழங்கவும் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் முஸ்லீம்கள் மீது வெறுப்புக்களை வளர்த்து வைத்திருக்கும் தமிழர்களும், தமிழர்கள் மீது வெறுப் புக்களை வளர்த்து வைத்திருக்கும் முஸ்லீம்களும் குறிப்பிட்டளவு இருக்கிறார்கள்.

உண்மையான ஒற்றுமை ஏற்படுவதற்கு இவர்களே தடையாக இருக்கிறார்கள். முஸ்லீம்களோடு ஒற்றுமையை விரும்புகின்ற விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற தமிழர்களில் கூட பலர் முஸ்லீம்கள் விடயத்தில் மாத்தையாக்களாகவும், கருணாக்களாகவும் சிந்திப்பதை பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒற்றுமை ஏற்படுவதற்கு மனம் திறந்த பேச்சு அவசியம். தமிழர் தரப்பில் உள்ள தலைவர்களும் அறிஞர்களும் முதலில் தமிழர்களுடன் பேச வேண்டும். முஸ்லீம்கள் பற்றி தமிழர்கள் மத்தியில் உள்ள அச்சங்களையும் சந்தேகங்களையும் களைய வேண்டும்.

இதையே முஸ்லீம் தலைவர்களும் தமது மக்கள் மத்தியில் செய்ய வேண்டும். அரசியல் இலாபத்திற்காக சில முஸ்லீம் கட்சிகளும், தமிழ் ஒட்டுக் குழுக்களும் இதற்கு தடையாக இருந்தாலும், இதை செய்துதான் தீர வேண்டும்.

ஒற்றுமை ஏற்படவில்லை என்றால் கிழக்கு விடுவிக் கப்படாதவரை அங்கு நடைபெறும் தேர்தல்களில் ஒட்டுக் குழுக்கள் மக்கள் வாக்குகளைப் பெற்று, ஊராட்சி, மகாணசபை, நாடாளுமன்றம் என்று வளர்ச்சி அடைவது நடந்துதான் தீரும்.

இங்கிலாந்துச் செய்திகள்

எல்லைகளை வலுப்படுத்த 1000 மில்லியன்

பயங்கரவாதத்திற்கு எதிராகக் கையாளப்போகும் அணுகுமுறையின் முக்கிய செயற்பாடாக ஒருங்கிணைக்கப்பட்ட எல்லைக் காவல் அமையப் போகிறது. எல்லைக்கும் குடிவரவுக்குமான முகவர் மையத்துடன் சுங்க இலாகாவும் விசாப் பிரிவும் ஒன்றாக இணைந்து செயற்படப் போகின்றன.

இந்தக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டிலிருந்து பயங்கரவாதிகள் ஐக்கிய ராச்சியத்தை நோக்கிய பயணத்திற்காக விமானத்தில் ஏறும்போதே ஆரம்பிக்க வேண்டும் என்பதால் செயற்திறன் குறைந்த கடதாசிப் பதிவு முறைகள் களையப்பட்டு ஒரே நேரத்திலேயே காவல்துறை, புலனாய்வு போன்றவற்றுடன் தகவல் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மின்அணுவியற் பதிவுமுறை நடைமுறைப்படுத்தப்படும்.

அதற்காக அரசாங்கம் ஆயிரம் மில்லியனுக்கு மேல் செலவிட்டு மின்அணுவியற் பதிவுமுறையை திறனுடன் நடைமுறைப்படுத்த உள்ளது.

அடையாள அட்டை தயாரிப்பிற்கான பொருட்கொள்முதல் ஆரம்பம்

அடையாள அட்டைத் தயாரிப்புக்குத் தேவையான பொருட்களை விநியோகிக்கக் கூடியவர்களுக்கு உத்தியோக பூர்வ அறிவித்தல் விடப் பட்டாயிற்று.

இந்த அறிவித்தல்மூலம் தகுதி கொண்ட அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்யப்படும். பின் அவர்களிடம் சேவை, ஆற்றலுடையோர் சேவை, உற்பத்திக்கு தேவையான பொருட்கள் போன்றவை பெறப்படும்.

நாட்டின் கட்டுமானத்திற்கு இன்றியமையாத ஆட்கள் அடையாளத்தை, தற்போதுள்ள திறன் அற்ற, இலகுவில் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய பழைய முறைமூலம் கையாள்வது கடினம். அதனாற்றான் புதிய செயற்திறன் கூடிய அடையாள அட்டைகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டு அலுவலக அமைச்சர் மெக் ஹ்லியர் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் மிகப் பெரிய அதிஸ்டசாலி

நாளை நடப்பதை யாரறிவார் என்றொரு வாக்கு இருக்கிறது. அது எவ்வளவு உண்மை என்பதற்கு உதாரணமாக இருப்பவர் தான் இங்கிலாந்தைச் சேர்ந்த 40 வயதான அஞ்சலா கெலி என்ற பெண்மணி.

இங்கிலாந்து லொட்டரி வரலாற்றிலேயே மிகப்பெரிய தொகையான 35 மில்லியன் பவுண்களை சென்ற வாரம் வெற்றி கொண்ட இவர் தான் வெற்றி பெற்றதை அறிந்ததும் செய்த முதல் வேலை றோயல் மெய்ல் நிறுவனத்தில் தான் வகித்த பதவியை இராஜினமாச் செய்தது தான்.

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

ஆகஸ்ட் 23 வியாழன்:

காலை 10முதல் - சமூக வளர்ச்சி நடுவத்தின் முதியோர் வலிமையாக்கல் திட்டத்தின் கீழ் "Bring and Buy Sale" - இடம்: Shiraz Mirza Community Hall, 76A, Coombe Road, Norbiton, Kingston Upon Thames, KT2 7AZ

ஆகஸ்ட் 28 திங்கள்:

காலை 9 மணி - அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயிலின் தேர்த்திருவிழா. இடம்: Upper Tooting Road, Tooting london SW17 7EJ

செப்ரெம்பர் 8 சனி:

மாலை 5.30 மணி. உலகத்தமிழர் கலை கலாச்சார மன்றத்தின் இன்னிசை மாலை 2007. இடம்: Greenford Assembley hall. Greenford, Middlesex அனுமதி: £7 தொடர்புகளுக்கு : 079 0365 2581

THIGAN MOTORS
CAR SALES & MOT

உங்கள் வாகனங்களை உத்தரவாத்துடனும் திறமையுடனும் திருத்திக் கொள்வதற்கும்
புதிய பழைய வாகன உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்வதற்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

- All Types of Repairs
- We also do Recovery Services
- Computer Diagnosis
- Painting
- Car Electrical
- Bodywork

Open 7 Days a Week
9:00am - 6:00pm (Mon-Sat)

திகன் மோட்டோர்ஸ்
Unit No.65, Barking Industrial Park
Barking, IG11 OYU
Tel: 0208 594 7272
Mob: 07930 749 325
Email: thileethigan@aol.com

RISING SUN

RISING SUN HOTELS &
SRI LANKAN AND SOUTH INDIAN RESTAURANT



Comfort and Value for money, all at one place.

Rooms from £40!

All our rooms comes with en suite facilities and TV. A ***free Wi-Fi*** service is also provided just ask when booking!!

We have a well stocked Bar with ***satellite television*** and big screen TVs.

Book yourself in now online at:

www.risingsunhotels.com

Buffet

(12pm till 3pm)

£6.50

Sundays - Traditional Sri Lankan Rice and Curry with Hoppers

Hopper Night

(5pm till 11pm)

£6.50

EAT AS MUCH AS YOU LIKE

Friday & Saturday
With Live Music

Hoppers, Egg Hoppers, Milk Hoppers, String Hoppers, Godamba Rotti, Egg Rotti, Fish Curry, Meat Curry, Vegetable Curry, Seeni Sambol, Katta Sambol, Pol Sambol and a Sri Lankan Desssert (Vatilappan, Fresh Fruits)

அருமையான அப்பம், வகை வகையாக அடுக்கி சுடச் சுடச் சுவைக்க நாடுங்கள் எம்மை!

Rising Sun Hotel
138 Greenford Road, Sudbury Hill, Harrow, London HA1 3QL UK
Contact **Nathan Theeba Raj** on **+44 (0) 20 8422 2575** | **+44 (0) 20 8422 2575**
Catering Manager **Priyantha** on **+44 (0) 7886375384**
email: **info@risingsunhotels.com** web: **www.risingsunhotels.com**
fax: **+44 (0) 20 8422 9198**

ஊரின் வாசம்

கோடைக்குக் குளிர்மை தந்த பூநகரி

ப.வை. ஜெயபாலன்
(ஒரு பேப்பருக்காக)

கோடைவெப்பத்தால் கடற்கரைகள், பூங்காக்களை நாடும் மனம். குடிபானங்களைக் குளிராக்கி குடித்தாலும் ஆறாத தாகம். எங்கள் ஊரில் கோடை என்றால் இப்படியா என்ற ஒப்புநோக்கில் நெஞ்சம் ஊஞ்சலாடுகின்றது.

இத்தகைய வெப்பம் ஊரில் நாம் உணராத ஒன்று தானே! ஏன் இப்படி? ஆமாம் அடுக்கான மாடிவீடுகள், ஒட்டி ஒட்டி தொடராக அமைந்த மனைகள். கள்ளருக்கு பயந்தும், வீதிச்சத்தத்தை கட்டுப்படுத்தவும் அடைக்கப் படும் யன்னல்கள், காற்றோட்டத்தையும் மீறிய சூடு சுற்றோட்டத்தை வீட்டுக்குள் தருகின்றது.

ஊரில் என்றால் ஒவ்வொரு வீட்டையும் சுற்றிய தோப்பு, ஆழக் கிணற்றில் அள்ளப்படும் ஒவ்வொரு சொட்டு நீரையும் கொண்டோடி வளவு மரங்களுக்குப் பருகத்தரும் வாய்க்கால்கள், கிணற்றடி கழிவு நீரில் வளரும் பசளி, பொன்னாங்காணி, நீள்வரிசையிலே கமுகு, வாழை, எலுமிச்சை, தோடை, மாதுளை, கறிமுருங்கை. மா, பலா, வேம்பு என்று பயன் மரங்கள் இல்லாத வீடே இராது அல்லவா?

முற்றத்து பந்தலில் மல்லிகை அல்லது முல்லை. கைகளால் கட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு பருமனான முள்முருக்கு. அப்பா அம்மா திருமணத்திற்கு சாட்சியாக பொன்னுருக்கு அன்று நட்டவை, இன்றும் முற்றத்தில் இருக்கும்.

எல்லை வேலியில் கிடுகுகளை தாங்கியபடி நிரையாக சீமைக்கிளுவை, பூவரசு என்று குழை மரங்கள். வீட்டுமுற்புறம் குறோட்டன்செடிகள், நாலு மணிக்கன்று வர்ணப்பூக்கள், பூங்கொடிகள் என்று பசுமைகள் பதுங்கி இருப்பவை அல்லவா ஊர்வீடுகள்.

கூரை ஓடுகளிலும் சீமெந்துச் சுவர்களையும் மோதி நிற்பவை இந்த பசுமைக்குள் இருந்து வரும் தென்றல் காற்றுத்தானே.

இயற்கை எழிலுடன் குளிரூட்டியாக அமைந்த கிராமங்கள் ஒவ்வொன்றுமே கோடைகாலத்தில் ஊட்டி அல்லது கோடைக்கானல்தான்.

கிராமிய மணம் மாறாத கிளுகிளுப்போடு அண்மைக் காலம்வரை இருந்த பூநகரி, காடு சார்ந்ததான பிரதேசம். 550 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரதேசம் இது. கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு. இப் பிரதேசம், இரணைதீவு. பல்லவராயன்கட்டு, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளை உள்ளடக்கியது.

விளைமீன், நண்டு, இறால் என கடல் வளத்தை கக்கும் கிராமம் இரணைதீவு. ஆடு வளர்ப்பையும் மீன் பிடிப் பையும் வருவாயாகக் கொண்ட சின்னத்தீவு. பெரியதீவு என இருதீவுகளின் இணைப்பே இரணைதீவு.

பல்லவமன்னன் ஆண்டமண் பல்லவராயன் கட்டு. பல்லவமன்னனின் இடிபாடடைந்த இராசதானியின் எச்சங்கள் இன்னும் ஆவணச் சுவடுகளாக அகழ்வு ஆய்வாளர்களின் கைகளில் கிடைத்துக்கொண்டே இருக்கின்றது.

பல்லவ மன்னனுக்கு வீரபாண்டிய கட்டப்பொம்மன் படைஅனுப்பி உதவினான் என்றும், அந்தப் படை வந்து இறங்கிய துறை வீரவில் என்று பெயர் பெற்று இப்போது வேரவில்லாகத் திரிபு அடைந்து விட்டதாகவும் சொல்வர்.

வலைப்பாடு, பொன்னாவெளி, கிராஞ்சி, குமுழமுனை, முழங்காவில் என விவசாயக் கிராமங்கள். பூனகரியோடு ஒட்டி ஞானிமடம், செட்டிகுறிச்சி, அத்தாய், நல்லூர், தம்பிராய், நாச்சிகுடா, கரிகாலநாகபடுவான் போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன.

அடர்ந்து செறிந்த பாலைமரங்கள். இனிப்பான மஞ்சள் பழங்கள் இலைகளோடு போட்டியாக கொப்புத் தோறும் குலுங்கிக் கொண்டு இருக்கும் முதிரை, வீரை மரங்களும் பாரிய வளர்த்தியோடு அடங்கலாக நிறைந்திருக்கும். கரி காலை நாகபடுவான், பல்லவராயன்கட்டு குளத்தை ஒட்டிய வயல்களில் விளைபவையும் உரமான மொட்டைக் கறுப்பன், பச்சைப்பெருமாள் நெல்வகைகள் தான்.

வெப்பவலய நாட்டிலே இதைவிடக் கூடிய வெப்பநிலைக்குள்ளும் இப்படி ஒரு கொடிய வெப்பத்தை நாம் உணரவில்லையே. அது ஏன்?

காலை தோறும் சந்திகளில் கடைவிரிக்கும் இறைச்சி வகைகள். வேட்டைக் காரரின் கட்டுத்துவக்கில் சிக்கிய பன்றி, மான், மரை, முயல் என்பன. வனப்பூக்களில் வடிந்த கொம்புத்தேன், பொந்துத்தேன் எல்லாமே பூநகரி வளச் சிறப்புக்கள்.

வேரவில், பொன்னாவெளி, கிராஞ்சி என்ற தொடர் கிராமங்களும் பழமையின் எளிமையில் மிளிர்வன. அழகாக, நிரையாக அணில் குஞ்சும் நுழையமுடியாதபடி அடைக்கப்பட்ட அளம்பல் வேலிகள், வாசலில் சங்கடப் படலை, உள்ளே நித்தம் சாணம் தெளித்து மெழுகு தரையாகிவிட்ட முற்றம், முற்றத்தை அலங்கரிக்கும் கோலம், உள்ளே மண்குடிசை, உயர ஏழும்பியகுந்துகள், உட்கார படுக்க ஏற்றதான வெளிக்கட்டுகள், பசும் சாணத்தால் மெழுகிய தரை, பனயோலையால் வேய்ந்த கூரை, வீட்டுச்சுவராக அமைபவையும் தென்னோலை தட்டிகள்தான்.

வீட்டுக்கு முன்னால் மாட்டுப்பட்டி. வீட்டோடு அருகாக ஆட்டுக் கொட்டில். செவியன் ஆடுகளின் பருத்த முலைகளில் இடித்து இடித்து பால் பருகிய ஆட்டுக்குட்டிகள் வளவில் துள்ளி விளையாடும். அனேக வீடுகள் இவ்வாறான பர்னசாலைகள்தான்.

தாழ்வான ஓலைக்குடிசை, பசிய தரை, சுற்றி பசுமையான புறச் சூழல் ஆகியன எந்தக் கோடைக்கும் ஈடு கொடுக்கக் கூடிய இயற்கை குளிரூட்டியாக அமைந்தன. இன்றும் இவை இப்படியா என்பது கேள்விக் குறிதான். எளிமையும் போதும் என்ற மனமும் ஆசைகளுக்கு வேலிகட்டி வைத்ததால் இவை ஆனந்தம் விளையாடும் குடிசைகளாக அமைந்திருந்தன.

மகாத்மா காந்தி இந்திய சுதந்திரத்தை முன்னெடுத்த போதும் கிராமங்களின் வாழ்வாதாரத்தை கிராமிய மணத்தோடு நிலை நாட்டத் தொடர்ந்து உழைத்தார் எளிமை, சுயதேவைப்பூர்த்தி கை வைத்தியம் என்பவற்றைக் கற்றுத் தந்தார்.

மேலைநட்டு வாழ்வில் இயந்திரமாக கோடையிலும், குளிரிலும் புளுங்குகின்ற நாம் இங்கிருந்து இந்தக் கிராமங்களை நினைப்பதும் கூட மனதிற்கு ஒரு குளிர்ச்சிதானே.

இருவகைச் சோதிடம்

மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

கி பி 285 மார்ச் 21ல் பூமத்திய ரேகைக்கு சூரியன் வந்தான், அன்று மேட சங்கிராந்தியும் நிகழ்ந்தது. பூமத்திய ரேகைக்கு சூரியன் வந்து சம பகலிரவுகள் உண்டாகும் நாள் இன்றும் மார்ச் 21ல் தான் நிகழ்கிறது. ஆனால் சித்திரைப் புத்தாண்டு அல்லது மேட சங்கிராந்தி மட்டும் இப்போ ஏப்ரல் 14ல் நடைபெறுகிறது.

மார்ச் 21ல் நிகழும் ஒரு நிகழ்வும் ஏப்ரல் 14ல் நிகழும் ஒரு நிகழ்வும் ஒரே நாளில் நிகழ்ந்திருந்தால் அவை இரண்டுக்குமிடையில் 24 நாட்கள் வித்தியாசம் எப்படி இப்போ ஏற்படுகிறது என்ற சந்தேகம் எழத்தானே செய்யும்.

சென்ற இதழில் இருவகை ஆண்டுகளுக்கும் இடையிலான 20 நிமிட வித்தியாசத்திற்கான விளக்கம் தந்திருந்தேன். சுருக்கமாக திரும்பவும் சொல்லுகிறேன். கதிரவன் மேட ராசியில் ஆரம்பித்து அதாவது 0 பாகையில் ஆரம்பித்து 360 பாகை கடந்து திரும்ப அதே புள்ளியை அடையும் காலத்தை மையமாக வைத்து கணிக்கப்படும் ஆண்டு விண்மீன் சம்பந்த ஆண்டு.

அவன் மகர ரேகையிலிருந்து வடக்கு நோக்கி சென்று திரும்பவும் மகர ரேகையை அடையும் காலத்தை மையமாக வைத்து கணிக்கப்படும் ஆண்டு அயன ஆண்டு. பூமியின் தளம்பலால் விண்மீன் சம்பந்த ஆண்டைவிட 20 நிமிடம் குறைவான நேரத்தில் அயன ஆண்டு முடிகிறது. இதனால் இவ்விரு வகை ஆண்டுகளுக்கும் இடையில் 20 நிமிட வித்தியாசம் ஏற்படுகிறது.

இந்த 20 நிமிடங்கள்தான் கடந்த 1722 ஆண்டுகளில் 24 நாட்கள் வித்தியாசத்தை உருவாக்கி உள்ளன. ஆண்டுதோறும் ஏற்படும் 20 நிமிட வித்தியாசம் காரணமாக சித்திரைப் புத்தாண்டு பின் செல்கின்றது. ஆண்டுகளில் குறைபாடில்லை. இருவகை ஆண்டுகளுமே துல்லியமாக வானைப் பார்த்து நிமிடம் தவறாது கணிக்கப்படுபவை.

கலண்டர் ஆண்டில் கலண்டரை சீராக்குவதன் மூலம் நாள் மாறாது பாதுகாக்கப் படுகிறது. நிராயன ஆண்டில் வானில் உள்ளதை உள்ளபடியே கணிப்பதால் எந்தச் சீர்செய்தலும் இல்லாமலே நாட்கள் சரியாக ஓடுகின்றன. இந்தியாவில் இரவாக இருக்கும்போது மேட சங்கிராந்தி நிகழ்ந்தால் மட்டும் இரவில் நாளை ஆரம்பிக்க முடியாத காரணத்தால் மறு நாளை சித்திரை முதலாம் திகதியாக அறிவிக்க வேண்டிய ஒரு சிறு தேவையுள்ளது.

அயன அல்லது கலண்டர் ஆண்டை அடிப்படையாக வைத்து கணிக்கப்படும் சோதிடத்தை மேற்குலக சோதிடம் என்றும் விண்மீன் சம்பந்த ஆண்டை அடிப்படையாக வைத்து கணிக்கப்படும் சோதிடத்தை வேத சோதிடம் என்றும் அழைப்பார்கள்.

வேத சோதிடத்தில் நட்சத்திரங்களை நிரந்தரமாக வைத்து நவக்கிரகங்கள் என்னும் சூரியர் சந்திரர் ஐந்து கோள்கள் ராகு கேது என்னும் சந்திர சந்துக்கள் ஆகிய ஒன்பதினதும் சலனத்தின் அடிப்படையில் கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மேற்குலக சோதிடமும் கிட்டத் தட்ட இதே முறையில் தான் கணிக்கப்படுகிறது.

மேற்கும் கிழக்கும் போட்டி போட்டுக்கொண்டு இருவகை சோதிடங்களை உருவாக்கினாலும் அவை கூறும் பலன்கள் அறிவியல் ரீதியாக இன்னும் நிரூபிக்கப் படவில்லை.

மிகவும் சிரமப்பட்டு துல்லியமான அவதானிப்பின் மூலமே வான் பொருள்களின் அசைவுகள் பதியப்பட்டு மேட சங்கிராந்தி, மகர சங்கிராந்தி (தைப் பொங்கல்) கதிரவனின் மகர ரேகை மத்திய ரேகை கற்கடக ரேகை ஆகியவற்றின் மேலான சஞ்சாரம் ஆகியன கணிக்கப்படுகின்றன.

அதை அறிவியலுக்கு ஒவ்வாத வகையில் இந்த இந்த இந்த நட்சத்திரம் நிற்கும்போது இன்ன பலன் உண்டாகும் என்று குழப்பி சோதிடமாக்கி உள்ளார்கள். ஏழரச் செவ்வாய் என்று அநியாயமாக எத்தனை திருமணங்களுக்கு தடை ஏற்படுத்தினார்கள். ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களை ஒழிக்க முடியாது.

இதில் ஆச்சரியமான விடயம் ஒன்றையும் உங்கள் கவனத்திற்குகொண்டு வரும்புகிறேன். நிபுணர்களின் மூன்று விதிகளுக்கு அறிவியலில் எவ்வளவு முக்கியத்துவமோ அதேயளவு முக்கியத்துவம் வானியலில் கெப்லரின் மூன்று விதிகளுக்கும் உண்டு. அப்படியான விஞ்ஞானி கெப்லரே ஒரு சோதிட நம்பிக்கையாளராம்.

H.E.M. GROCERIES
No 8, Selkirk Road Tooting,
London SW17 OBS
Opposite Lane to Primark

ஸ்ரீ மாரியம்மன் ஜோதிடம் நிலையம்

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **பண்டித் மஞ்சுநாத சாஸ்திரி** *அவர்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஏவல்கள் அகற்றிக் கொடுக்கப்படும்.*

An expert pandit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, Job, Love, Marriage, Family problem, Sickness, Promotion, Visa, Court, lottery, abroad, money, Removal of enemy. All types of black magic and evil things removed. **All Matters will be kept in secret. Spoken languages: Tamil, Hindi, Telugu, Kannada & English.**

TEL: **07960 604 990** OPENING HOURS : **8AM -8.00PM - 7 DAYS**

தட்டத் தட்டத் கொட்டுதையா . . .

TILMAX®

Quality Comes First

EPOS SYSTEMS

We are here to support your business

CASIO QT-6000

XN 900



AURES ODYSSE

WIRELESS WAITRESSING

RETAIL SOLUTIONS

130 CR
£79

CASIO TE-M80
£159

CASIO TE-100
£249

CASIO TE-2000
£289

CASIO TE-2200
£549
including scanner

CASIO QT-2100
£999

CASIO TE-800F
£1,099

24/7 SUPPLY AND INSTALL SERVICE, MAINTAIN ALL MAKES OF EPOS & PRINTERS

ORDEMAN WIRELESS WAITRESSING

FREE DEMONSTRATION AND CONSULTATION ON YOUR REQUEST

ALL KINDS OF CATERING EQUIPMENT AND CHILLED DISPLAYS

INSTALMENT/RENTAL FACILITIES AVAILABLE(SUBJECT TO STATUS)









£179



0208 55 55 055 / 07852 184 510

WWW.TILMAX.CO.UK 328 HIGH ROAD LEYTONSTONE, LONDON E11 3HS

சிறிலங்கா பாஸ்போர்ட்



சயந்தன்
(சாரலில்)

"சிங்கள தன்னவத" (சிங்களம் தெரியுமா) என்றார் கண்ணாடித் தடுப்பிற்கு அப்பால் அமர்ந்திருந்த மீசையற்ற அதிகாரி. இல்லை யென்று தலையாட்டினான் சீலன். தன்னாய்?? (தெரியாது) என சிங்களத்திலேயே அவனால் பதிலளித்திருக்க முடியும். கொழும்பில் தங்கியிருந்த கடந்த இரண்டு வருட காலத்தில் எக்காய், தெக்காய், துணாய் எனச் சில எண்களும் மேக்க, பைனவ, கருணாகர என ச் சில பயணச்சொற்களுமாக அவன் அறிந்து வைத்திருந்தான்.

சென்ற முறை கூட இதே பாஸ்போட் ஒபி ஸில் தெரிந்த சில சிங்களச் சொற்களை வைத்துத்தான் சமாளித்தான். அப்போ தெல்லாம் சிங்களம் தெரியாது எனச் சொல்லும் மனநிலை அவனிடத்தில் இருக்கவில்லை.

"தெரியாது.. எவ்வளவு காலம் இங்கை இருக்கிறது?? இலக்கணங்கள் மீறிய போதும் கேள்வித் தொனியிலான அவரது உச்சரிப்பு தமிழ்த் தொலைக்காட்சிப் பெண்களின் ஆண்களின் தமிழை விட இலகுவாக சீலனுக்குப் புரிந்தது.

"ஒரு வருசம்"

"ஒரு வருசம்.. இருக்கிறது.. சிங்களம் தெரியாது" என மீளவும் கேட்ட அவர் முகத்தில் சிரிப்பு உதிர்ந்தது. அது நட்பானதா, ஏளனம் சுமந்ததா என்பதை ஆராயும் மன நிலையில் சீலன் இருக்கவில்லை. அவன் முகம் சிரிப்பற்று கடுமையாயிருந்தது. மீண்டும் தெரியாது எனத் தலையை ஆட்டினான். அவர் இப்போது ஒவ்வொரு பேப்பர்களாக எடுத்து கவனிக்கத்தொடங்கினார். அவ்வப்போது அருகிலிருந்த பெண்மணியிடம் சிங்களத்தில் உரத்தும் சிரித்தும் கதைத்தார்.

ஹம்.. எல்லாம் சரி.. ஈவினிங் வந்து எடுங்க

கடந்த சில நாட்களாக உணர்ந்த, அதுவும் கடைசி நிமிடங்களில் அதிகரித்துக் கிடந்த ஒரு வித அந்தரித்த நிலையிலிருந்து விடுபட்டான் சீலன். ஒரு பெரும் அலைச்சலுக்குப் பிறகு பாஸ்போட் கையில் கிடைக்கப் போகிறது. ஊரிலிருந்து கொழும்பு வருவதற்கான (கொழும்பும் அவனது ஊரும் ஒரே நாடெனச் சொல்லப்படும் இலங்கையில் இருந்தன) அனுமதியைப் பெறுவதற்காக விதானை ஊடாக அரசாங்க அதிபர், அவரூடாக ஆமிச் சின்னவர், அவரூடாக ஆமிப்பெரியவர் என ஆரம்பித்தது அந்த அலைச்சல்.

வெளியே இன்னும் நிறையப் பேர் வரிசையில் நின்றார்கள். "அண்ணை உள்ளை நிறையச் சனமோ" என்று இளைஞன் ஒருவன் கேட்டான். இல்லையெனத் தலையாட்டிச் செல்ல எத்தனித்தவன் நின்று நிதானித்துச் சொன்னான். "இல்லை எல்லாரையும் உள்ளை எடுப்பாங்கள்"

சற்றுத் தூரத்தில் கடலைக் குறுக்கிட்டு மறைப்பது போல புகைவண்டியொன்று பார்வைச் சட்டத்தில் நுழைந்து பின் விலகிப் போனது. மதியம் எங்காவது சாப்பிட்டுவிட்டு, கடலோரம் அமர்ந்தும், காலாற நடந்தும் மாலை வரை நேரத்தைப் போக்கலாம் என்றெ முந்த எண்ணம் கொஞ்சம் தள்ளி துப்பாக்கி ஏந்தி விறைத்து நின்ற பச்சை சீருடைக்காரனை கண்டதும் தானாகவே அடங்கிப் போனது.

வீதியில் முழத்திற்கு ஒன்றென இருக்கும் ஆமிச் செக் பொயின்ற்றுகளை கடந்து வந்து சுடும் இனந்தெரியாதவர்களை இன்னமும் ஆமிக்காரர் பிடித்த பாடில்லை.

பஸ் தரிப்பிடத்திற்கு நடந்து வந்தான். வீதியின் அருகெங்கும் கண்ணாடிச் சுவர்க் கடைகள் விரிந்திருந்தன. இரண்டு, மூன்று அடுக்குக் கட்டடங்கள். உள்ளேயும் வெளியேயும் தனித்தனியாக, சோடி சோடியாக ஆட்கள் சிங்களத்திலும் அவ்வப்போது தமிழிலும் கதைத்தபடி திரிந்தார்கள்.

சனம் நிறைந்து பிதுங்கித் தள்ளியபடி வந்து நின்றது பஸ். ஒருவாறு உள்நுழைந்து ஏறிக்கொண்டான். "இசரட்ட இசரட்ட" (முன்னுக்கு) என கொண்டக்டர் கத்தினான்

ஒவ்வொரு முறையும் அவன் கத்தும் போதெல்லாம் தன்னைத்தான் சொல்கிறானோ என்ற பயத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி ட்றைவருக்கு அருகில் வந்து நின்று கொண்டான். அதற்குப் பிறகும் கொண்டக்டர் கத்திக்கொண்டிருந்தான்.

வீதி முழுக்க வாகனங்கள் நிறைந்திருந்தன. கிடைக்கும் இடைவெளிகளுக்குள் பஸ்ஸை நுழைத்து அநாயாசமாக ஓடும் ட்ரைவரை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. அதை விட பஸ் தரும் அங்குல இடைவெளிகளுக்குள் எல்லாம் நுழைந்து ஓடும் ஓட்டோக்கள் (ஆட்டோ) மேலும் கவனத்தை ஈர்த்தன.

சீலனுக்கு அவனது பார்வதி ஓட்டோ நினைவில் வந்தது. பள்ளிப் படிப்பை முடித்து விட்டு சும்மா இருந்தவனுக்கு அம்மா பார்வதி தான் ஓட்டோ வாங்கி தொழில் செய்யும் படி சொன்னாள்.

அவளே அங்கிங்கென்று கடனும் புரட்டிக் கொடுத்தாள். ஏற்கனவே ஒருவர் பாவித்த ஓட்டோ தான். ஆயினும் பார்வைக்கு புதியதாகத் தான் தோன்றியது. அவனும் கொஞ்சம் காசு போட்டு ஒடியோ பிளேயர், பேஸ் சவுண்ட் சிஸ்ரம், சொகுசான இருக்கைகள் என மேலும் விருத்தி செய்திருந்தான்.

ஊருக்குள் இவனொருவனே ஓட்டோ வைத்திருந்தபடியால் அதுவே நிறைய வாய்ப்புக்களுக்கு காரணமாகியது. தவிர பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கான ஓட்டம் என்றெல்லாம் தனித்தனியே வருமானம் கிடைத்தது. அப்பா இருபது வருடங்களிற்கு முதல் இயக்கத்துக்குச் சாப்பாடு கொடுத்ததற்காக சவமாகிப் போன பிறகு இப்போது தான் நினைத்தவற்றை, விரும்பியவற்றை அடைய முடிந்தது.

சிறுகதை

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிற்கெல்லாம் ஓட்டம் வரும். ஒரு தடவை வவுனியா வரை கூட போய் வந்திருக்கிறான்.

திடீரென ஒரு நாள் பாதையை மூடிவிட்டதாக சொன்னார்கள். பரவாயில்லை உள் ஓட்டமே போதும் என்றுதான் அப்போது நினைத்தான்.

அடுத்தடுத்து ஓட்டோக் காரர்கள் கொலை செய்யபடுவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. தொடக்கத்தில் என்னவோ, கொலை செய்யப்பட்டவர்கள் எதேச்சையாக ஓட்டோக் காரர்களாக இருந்திருக்கலாம் என சீலன் நினைத்திருந்தான். பின் வந்த ஒரு நாள் ஓட்டோகாரர் சங்கத்தில் அறிமுகமான பிரபு என்ற இருபத்தொரு வயசுப் பொடியன் பிணமாகக் கிடந்தான். பிரபுவைத் தொடர்ந்து துரையண்ணையும்..

வீதியில் முழத்திற்கு ஒன்றென இருக்கும் ஆமிச் செக் பொயின்ற்றுகளை கடந்து வந்து சுடும் இனந்தெரியாதவர்களை இன்னமும் ஆமிக்காரர் பிடித்த பாடில்லை. ஆனால் சந்தைக்கு கிழங்கு விற்கப் போகும் பூரணத்தையும், பள்ளிக்கூடம் போகும் பன்னிரண்டு வயசுப் பொடியனையும் மறித்து வைத்து ஆயிரம் கேள்வி கேட்கிறார்கள்.

சீலனின் அம்மா ஓட்டோ ஓட்டம் ஒன்றிற்கும் போக வேண்டாமெனத் தடுத்தா. ஊருக்குள் ஓடவே அவனுக்குப் பயமாயிருந்தது. வீட்டுக்குள் அடைந்தான்.

யாழ்ப்பாணத்து ஓட்டோக்காரர் இயக்கத்திடம் ஆயுதப் பயிற்சி எடுத்தவை யாம். அதனால தானாம் ஒவ்வொருவராக சுடுறாங்கள் என்று கதை பரவியது. ஆயுதப் பயிற்சி எடுக்காதவர்களைச் சுட மாட்டார்கள் என சீலனால் சந்தோசப்பட முடியவில்லை. ஏனெனில் பிரபுவும் துரையண்ணையும் ஆயுதப் பயிற்சி எடுத்ததில்லையே..

அம்மா வெளிநாட்டில் இருக்கும் யார் யாரோவுக்கெல்லாம் தொலை பேசியில் பேசினாள். தூரத்து உறவினர் ஒருவர் அதற்கான ஒழுங்குகளைச் செய்வதாக கூறினார்.

சீலன் கொழும்பிற்கு வெளிக்கிடுவதற்கு முன்னால் ஏற்கனவே விற்கப்பட்டுவிட்ட ஓட்டோவைத் தேடிச்சென்று ஒரு தடவை ஓடிப்பார்த்தான் வீட்டு வளவிற்குள்ளேயே..

பஸ் நின்றது. சனங்கள் ஒட்டுமொத்தமாக இறங்கினார்கள். சீலன் வெளியே பார்த்தான். செக் பொயின்ற்! ஆயுதம் தரித்த ஒரு இராணுவத்தான். மிகுதி இரண்டு பேரும் பொலிசார்.

அடையாள அட்டையையும், பொலிஸ் பதிவு துண்டையும் எடுத்து வரிசையில் நின்றான். முன்னால் நின்ற பயணி சிங்களத்தில் ஏதோ சினந்தார். அநேகமாக அவர் தமிழர்களையோ அல்லது புலிகளையோ அல்லது இருவரையும் சேர்த்தோ திட்டியிருக்கலாம். அபூர்வமாக அரசாங்கத்தை அல்லது ஆமியை கூட திட்டியிருக்கலாம்.

வரிசை ஒரு கட்டத்தில் நகராது நின்றது. இலங்கைச் சனநாயகக் குடியரசு கொடுத்த அடையாள அட்டை வைத்திருந்தும், கொழும்பில் தங்குவதற்கான பொலிசின் அனுமதிப் பதிவு வைத்திராத ஒருவரை பொலிசாரில் ஒருவன் மிரட்டிக் கொண்டிருந்தான்.

"ஐயா நேற்றுத்தான் வந்தனான். இண்டைக்குப் பின்னேரம் தான் எடுக்க வரச்சொன்னவை"

"ஏன் கொழும்புக்கு வந்தது.."

"பாஸ்போட் எடுக்க வந்தனான். இண்டைக்கு எப்பிடியும் பொலிசில பதிஞ்சிடுவன் "

அவர் ஒரு ஓரமாய் நிற்கப் பணிக்கப்பட்டு மற்றவர்கள் அழைக்கப்பட்டார்கள். வரிசை நகர்ந்தது.

சீலனின் அடையாள அட்டையையும் பொலிஸ் பதிவையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அடையாள அட்டையின் பின்னால் பிறந்த இடம் யாழ்ப்பாணம் என்று இருப்பதால் ஒருபோதும் கேள்வியின்றி விடுவிக்க மாட்டான் என சீலனுக்கு நன்றாகவே தெரியும்.

"எவ்வளவு காலம் இங்கை இருக்கிறது" காலை பாஸ்போட் ஒபிசில் கேட்ட அதே கேள்வி. இந்த பஸ் பயணத்தில் இன்னொரு தடவையும் இப்படிக் கேட்கப்படலாம்.

தனியேயாழ்ப்பாணத்தைப்பிறந்த இடமாய்க் கொண்டவர்களுக்கு மட்டுமல்ல இக்கேள் விகள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை என பட்டியல் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையாக நீளும்.

பஸ் புறப்பட்டது. இரண்டு பேர் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரிக்கப் பட்டுக் கொண்டிருப்பது கண்களிலிருந்து மறைந்தது.

(தொடர்ச்சி 45ம் பக்கத்தில்)

ஒருமுறை வாருங்கள் பாருங்கள் வேலை நிறைவென்றால் காசு தாருங்கள்.

A & K MOTORS
Specialist in Diagnostic Tests

Repairs & Servicing
All makes & Models.

குரொய்டன் / மிச்சம் / ரூற்றிங் / ஸ்ரெதம் / மோடன் /விம்பிள்டன் / நியூ மோல்டன் / றெய்னஸ்பாக் / சற்றன். இந்த நகரங்களில் மோட்டார் வாகனம் வைத்திருப்பவர்கள் நம்பி நாட வேண்டிய இடம்.

பரந்த இடம், குறைந்த செலவு, நிறைந்த பயன்

A & K MOTORS
106 HILL RD,
MITCHAM CR4 2H2

ஆனந்தன்:
07985 588 565
குலன்:
07903 742 518

இங்கிலாந்து குடிவரவு சட்ட சம்பந்தமான ஆலோசனைகளை விளம்பரதாரர்களுக்கும் தனிப்படவர்களுக்கும் விசேட கவனிப்புடன் எம்மால் வழங்கமுடியும்.

எங்கள் திறமை வாய்ந்த அலுவலர்கள் எல்லா விதமான Immigration சம்பந்தப்பட்ட Applications, Appeals, Reconsideration, Judicial Review & Injunction போன்ற அனைத்து விண்ணப்பங்களுக்கும் நல்ல பல வெற்றிகளைத் தேடித் தருவார்கள்.

- Asylum
- British Nationality Applications
- Application for leave to enter and remain in the United Kingdom for Visitors and Studies
- Extension of stay under international graduate scheme
- Application for leave to enter and remain in the United Kingdom in an 'au pair' placement, as a working holiday maker, or for training or work experience
- Application for leave to enter and remain in the United Kingdom as a businessman, self-employed person, investor, writer, composer or artist
- Work permit employement
- Worker Registration Scheme
- Highly Skilled Migrant Programme
- Seasonal Agricultural Worker
- Application for indefinite leave to remain after 2 years, 5 years, 7 years, 10 years and 14 years
- Application for discretionary leave to remain in the United Kingdom and Humanitarian protection
- Application for leave to remain in the United Kingdom on human rights grounds
- Application for leave to remain under the European Economic Area (EEA) Law
- Application for leave to remain European Community Association Agreement (ECAA)
- Appeals against administrative removals and deportation orders
- Appeals at the Asylum and Immigration Tribunal, High Court of Jusitce (Queens Bench Division), Court of Appeal, House of Lords

KINGSTONS SOLICITORS



251A HAYDONS ROAD
WIMBLEDON
LONDON SW19 8TY

Tel: **020 8540 0468**
Fax: **020 8540 7504**

எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கின்றனர்.

43ம் பக்கத் தொடர்ச்சி...

சிறிலங்கா பாஸ்போர்ட்

இப்போதும் என்னைக் கைது செய்திருந்தால் அது மூன்றாந் தடவையாக இருந்திருக்கும் என சீலன் நினைத்துக் கொண்டான். முதல் தடவை அவனைக் கைது செய்த காலங்கள் நினைவில் வந்தன.

வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள சீலன் கொழும்பில் வாழைப்பழக் கடை யொன்றில் தங்க வைக்கப்பட்டான். கீழே கடை. மேலே 3 பேர் [illegible] கூடியவாறான ஒரு அறை. இன்னு மொரு [illegible] இவனைப் போலவே ஏற்கனவே அங்கு தங்கியி [illegible]ன.

சிறுவயதில் அப்பாவுடன் ஒருமுறை வந்துபோன கொழும்பின் காட்சிகள் நினைவுகளில் மங்கிப் போய்விட, சீலனுக்கு இதுதான் முதற் தடவை கொழும்பு. ஆங்காங்கே கைதுகள், இரவுத் தேடுதல்களென பத்திரிகைச் செய்திகள் வந்தாலும் ஓட்டோக் காரனைச் சுடவோ, கைது செய்யவோ மாட்டார்கள் என நம்பியிருந்தான், நான்கு மாதங்களுக்கு முன்னான ஒரு மாலை வரை.

ஏதோ ஒரு புதிய படம் பார்த்து வரலாம் எனக் கிளம்பியவனை துறைமுக வீதியில் வைத்து வழி மறித்தனர் இரண்டு நாட்டைக் காப்பவர்கள். அந்தக் கணத்திலேயே சீலன் நிலைகுலைந்து போனான். நாவரண்டு போனது. அவர்கள் ஆரம்பத்தில் சிங்களத்தில் கேட்ட கேள்விகளுக்கு சிங்களமா, தமிழா என்று அடையாளம் காண முடியாதவாறு பதில்கள் திக்கித் திணறி உடைந்தன. கண்களில் நீர் திரண்டது.

துறை முகத்தில் பயங்கரவாதத் தாக்குதலை நடாத் துவதற்காக உளவில் ஈடுபட்ட எல் ரி ரி ஈ பயங்கர வாதியை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தார்கள்.

நான்கரை மாதங்கள். பொலிசில் ஆரம்ப கட்ட உடல் உளச் சித்திரவதைகள், விசாரணைகள், கோட், கேஸ் என இழுபட்டு அவன் வெளியே வந்தான். அதிஸ்ரம் என ஒன்று இருந்தால் அது அவன் பக்கம் இருந்திருக்க வேண்டும். என்னதான் திட்டித் திட்டி வேலை வாங்கின ாலும் கடை முதலாளியும் அவனுக்காக அலைந்தார். வெளிநாட்டிலிருந்தும் உதவி கிடைத்தது. தொலைபேசிய அம்மா பறாளாய் முருகன் தான் விடுதலைக்கு காரணம் என்றா.

அப்போதிருந்தே சீலன், கடை கடை விட்டால் அறை யென முடங்கிப் போனான். ஒரு தடவை பிடித்தால் மறுமுறை பிடிக்க மாட்டார்கள் என கடைக்கு வந்த சிலர் சொன்னார்கள். ஒருவேளை அது உண்மை யாயிருக்குமோ என எண்ணத் தலைப்பட்ட நேரத்தில்த் தான் ஒரு ஐந்தாறு மாதம் கழித்து குண்டொன்று வெடித்தது. வெடித்ததென்னவோ சத்தம் கூட கேட்காத அளவு தூரத்தில்த் தான்.

அன்று இரவு அதை செய்தியில் பார்த்துக் கொண்டிருந்த போது வந்து கதவைத் தட்டினார்கள். பாய் தலயணை, டை, வாழைக் குலையென ஒன்றும் விடாமல் குண்டுகளைத் தேடினார்கள். கிடைக்கவில்லையென்ற ஏமாற்றமோ, கோபமோ, என்னவோ போகும் போது சீலனையும் கூட இருந்த பொடியனையும் கூட்டிச் சென் றார்கள்.

அன்று இரவு முழுதும் பொலிஸ் நிலையத்தில் தூங்க முடியவில்லை. தூங்குவதற்கு இடமில்லை. வெடித்த குண்டுகளைக் கண்டிருப்போர் என்ற சந்தேகத்தில் நிறையச் சீலன்களையும் சீலிகளையும் அழைத்து வந்திருந்தார்கள். காலை முதல், விசாரணை நடந்தது. மிரட்டலின் பயத்தில் வார்த்தைகள் குழறிப் பதில் சொன்னவர்கள் கூட சந்தேகத்தின் பேரில் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர். சீலன் இரண்டாவது தடவையாகவும் விடுவிக்கப்பட்டான். இம்முறையும் கடை முதலாளி சென்ற முறை விடுதலையான ஆவணங்களோடு காலையே வந்திருந்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலைக்காகக் காத்திருக்க விடுதலை செய்யப்பட்டவர்கள் அடுத்த கைதினை எதிர்பார்த்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பிறகொரு நாள் தொலைபேசி அழைப்பில் பாஸ்போட்டினை உடனடியாக எடுக்கும் படி சீலன் அறிவுறுத்தப் பட்டான்.

000

விமான நிலையத்தில் மனதும் உடம்பும் இலேசாய்ப் படபடத்தது. தம்பி ரென்சனாய் இருக்கப்பிடாது. நோர்மலாய் இருக்கவேணும் சரியே.. ?? காலையிலிருந்து இங்கே கொண்டு வந்து விடும்வரை ஏஜென்சிக்காரர் சொன்னதை அசைபோட்டான் சீலன்.

ஒண்டுக்கும் யோசியாதையும். எல்லாம் அதேஞ் பண்ணிக் கிடக்கு. றூட்டால போறதெண்டால்த்தான் பயப்பிட வேணும். இது த்றூ பிளைற். ஏறுறதும் இறங் கிறதும் தான். .... மற்றது அவசரப் படாமல் லான்ட் ஆகிறதுக்கு முதல் நான் சொன்னதைச் செய்யும். ??

விமானம் மேலெழும்பியது. வயிற்றுக்குள் இருந்து அமிலம் மேலெழுகின்றது போல இருந்தது. காது அடைத்துப் பின் கொஞ்சம் கொஞ்சமாக சரியானது. முன்னே பொருத்தப்பட்டிருந்த வீடியோவை நோண்டிப்பார்த்து அதில் தமிழ்ப்பட சனலைப் பிடித்துக் கெரண்டான்.

அது அவன் முதற் தடவை கைது செய்யப் பட்டபோது பார்க்கப் போன படம். எரிச்சல் கிளம்பியது. வீடியோவை நிறுத்தி விட்டு பாஸ்போட்டை கொண்டெழுந்தான். ஏஜென்சிக் காரர் லான்ட் ஆவதற்கு சில மணிநேரம் முன்னால் செய்தால் போதுமென்றிருந்தார். இன்னும் நேரமிருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை.

ரொய்லெற்றைத் திறந்து உட்சென்று கதவை முடி னான். பாஸ்போட்டை எடுத்து விரித்தான்.

இக்கடவுச் சீட்டை வைத்திருக்கும் நபர் தங்கு தடையின்றி பயணம் செய்ய ஆவன செய்யுமாறு சிறிலங்கா சோசலிச சனநாயகக் குடியரசின் ஜனா திபதியாகிய நான் கேட்டுக்கொள்கிறேன்

சீலனின் வாயில் ஒன்றிரண்டு கெட்டவார்த்தைகள் வந்து போயின. பாஸ்போட்டை ஒவ்வொரு தாளாக கிழிக்கத் தொடங்கினான். பிறகு ஒவ்வொரு தாளையும் இரண்டாய் நான்காய் என பேப்பர் குவியலாக்கி வீசியெறிந்து தண்ணீரை அழுத்தினான்.

மீதமிருந்து மிதந்த ஒன்றிரண்டு தாள்களில், முதற் கைதின் போது அவனை நிர்வாணமாக்கி குரூரமாய்ச் சிரித்த பொலீஸ்காரனின் முகம் தெரிந்தது. தலையைக் குனிந்து கொண்டான் சீலன்.

தூ..... ??

மீண்டுமொருதடவை தண்ணீர், இப்போது எந்த நடயமும் இல்லை. வெளியே வந்தமர்ந்து போர்வையால் இழுத்து முடியவன் தூங்கிப் போனான்.

- உந்துதல் தந்தவருக்கு நன்றி

துள்ளல் - இன்றுமுதல்...

வெளியாவதற்கு பல மாதங்கள் முன்னரே பரபரப்பைக் கிளப்பிய ப்ரவீன் காந்தின் துள்ளல் திரைப்படம் இன்று உலகெங்கும் வெளியாகிறது. முக்கியமாக தி.நகர் கிருஷ்ணவேணி, சைதை ராஜ், விருகம்பாக்கம் தேவி கருமாரி, கே.கே.நகர் விஜயா போன்ற உலகப் புகழ் பெற்ற திரையரங்குகளில் இந்த திரைப்படம் ரிலீஸ் செய்யப்படுகின்றது.

ரட்சகன், ஜோடி, ஸ்டார் என பல வெற்றிப்படங்களை இயக்கிய ப்ரவீன்காந்த் முதன்முறையாக கதாநாயகனாக களத்தில் குதித்திருக்கிறார். ஏற்கனவே அவர் இயக்கிய படங்களில் கொலைவெறி கதாபாத்திரங்களை ஏற்று பலரின் தூக்கத்தைக் கெடுத்தவர்.

இவர் இயக்கிய ரட்சகன் திரைப்படத்தால்தான் ஜென்டில்மேன் கே.டி.குஞ்சுமோரன் லட்சாதிபதி ஆனார் என்பது குறிப்படத்தக்கது. ஜோடி ஒரு டப்பா படம் என்று அனைவராலும் பாராட்டப்பட்ட திரைப்படம். ஸ்டார் திரைபடம் அவரது திரைவாழ்வில் மற்றுமொரு மைல்கல்லாக இருந்தது என்றால் மிகையாகாது. பாலகிருஷ்னா· சிம்ரன் நடித்து 'ஒ போடு' என்று தமிழில் டப் செய்து வெளியிடப்பட்ட தெலுகு படத்தின் தழுவல் தான் ஸ்டார் என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் புரளி கிளம்பியது. இந்த படத்தில் ப்ரவீன்காந்தின் உணர்ச்சிமிக்க நடிப்பை பிரசாந்த் பாராட்டியுள்ளார்.

வழக்கமாக ஏ.ஆர்.ரகுமான் இந்தி படத்திற்கு போட்ட மெட்டுக்கள் தமிழுக்கு கொண்டுவர பிரவீன் காந்தின் முந்தைய பட்டங்களே காரணம். ஆனால் இந்த முறை 'இன்னிசை இடி' தினா துள்ளல் திரைப்படத்திற்கு இசையமைக்கிறார். பாடல்கள் எந்த எஃப்.எம் சேனலிலும் வராதது பலருக்கு நிம்மதியைத் தந்துள்ளது.

சின்ன கலைவாணர் விவேக் ஒத்தை ஆளாக படத்தைக் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகமே.

படத்தில் டூயட் காட்சிகளில் ப்ரவீன் காந்தின் ரொமான்டிக் லுக் 'மேட்டுக்குடி' கவுண்டமணிக்கு இணையாக இருக்குமென படத்தின் ஸ்டில்களைப் பார்க்கும்போதே தெரிகிறது.

இந்த திரைப்படம் பலதரப்பட்ட மக்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 'லுழரபெஅ புரியா உள்ளே வாங்க' என்ற படு மொக்கையான டேக்லைனுடன் வெளியடப்படும் இந்த திரைப்படம் தன் திரைவாழ்வில் திருப்புமுனையாக இருக்குமென ப்ரவீன் காந்த் பேட்டியளித்துள்ளார்.

'சென்னையில் கூந்த இரண்டு வாரமாக மழை பெய்யுது. இன்னும் ஒரு வாரம் மழை பெய்யும் என வானிலை அறிக்கையில் சொல்லியிருக்காங்க. மழைக்கு திரேட்டர் பக்கம் ஒதுங்காதவங்களை நம்பித்தான் இந்த படத்தை ரிலீஸ் பண்றோம்' என சென்னை வட்டார விநியோகஸ்தர் தெரிவித்தார்.

'அகில உலக ப்ரவீன்காந்த் ரசிகர் மன்றம்' சார்பாக தமிழகமெங்கும் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. இது ரித்தீஷ் (எ) முகலை குமார் நடித்த 'காதல் நீர்' திரைப்படத்தின் வசூல் சாதனையை முறியடிக்கும் என பெரும் எதிர்பார்ப்பை கிளப்பியிருக்கிறது.

இந்த திரைப்படத்தின் எக்ஸ்க்ளூசிவ் விமர்சனம் விரைவில் வெளியாகும்.

- கப்பி பய

Tamil Sports Festival
>>> South West London

Cricket, Football, Volleyball, NetBall, Athletic and our traditional sports

Traditional Delicious Foods

Further Details: 077 99535472

www.swtsp.co.uk

AUGUST
27
BANK HOLIDAY
MONDAY

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com

மணமகள் தேவை

1) லண்டனில் வசிக்கும், 30 வயது, 5'9", மணமகனுக்கு, பிரஜாவுரிமை யுள்ள மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1131

2) In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU,Aus.or Canada. Ref: 1130

3) பிரான்ஸில் வசிக்கும், 38 வயது, 5'4", மணமகனுக்கு, தகுந்த மண மகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1129

4) இலங்கையில் வசிக்கும், 33 வயது, 5'9", A/Lபடித்த,மணமகனுக்கு தகுந்த மணம்களை தேடுகின்றனர். Ref:1128

5) இந்தியாவில் வசிக்கும், 29 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

6) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 32 வயது, 5'9", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1126

7) ஜோயியாவில் படித்த Doctorம், தற்சமயம் UK ல் student visa வில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

8) சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணம களை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

9) கொழும்பில் வியாபாரம் செய்யும், 32 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1123

10) யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணிபுரியும், 28 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1122

11) UK ல் வசிக்கும், 31வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1121

12) UK ல் நிரந்தரவதிவுடமை உள்ள, 29வயது, 5'9", மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1120

13) லண்டனில் வசிக்கும்,39 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1119

14) IT graduate, 28 years, 5'11", on permanent stay ,looking for a suitable bride, Ref: 1118

15) Top professional 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

16) லண்டனில் வசிக்கும், 33 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1116

17) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 32 வயது, 5'11", படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1115

18) கனடா பிரஜாவுரிமை, 38 வயது, 5'10", CIMA கணக்காளர். விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின் றனர். Ref: 1114

19) லண்டனில் 9 வருடம், லண்டன் பட்டதாரி, 32 வயது, 5'4", மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1113

20) Employed in Doha- Qatar, 28 years, 5'8", A/L qualified looking for a bride, an E.U citizen. Ref : 1112

21) In the U.K, with PR, 41 years, 5'7", working as assistant financial controlar, looking for a suitable bride. Ref : 1111

22) லண்டனில் வசிக்கும், 26 வயது, 5'6", O/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1110

23) British citizen, a professional, 41 years, 5'8", a divorcee, looking for asuitable bride. Ref: 1109

24) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 28 வயது, 5'7", Plumberக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். .Ref:1108

25) Canadian citizen, 45 years, 5'10", O/L qualified, looking for a suitable bride. Ref: 1107

26) Top professional 28 years, 5'9", In Europe since childhood, presently in the UK, seeks an educated bride. Ref : 1106

27) Jaffna born 37 years , 5' 6" presently working in Pondicherry, India as a Computer specialist, looking for a suitable bride. Ref: 1105

28) Hotel employee, 31 years, 5'7", in the UK for the last 8 years, looking for a suitable bride with citizenship abroad . Ref :1104

29) Canadian citizen, 31 years, 5'11', A top professional Phd, a Divorcee, looking for a suitable bride. Ref: 1103

30) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள A/L படித்த தற்போது மலேசியாவில் வேலை செய்யும் மணமகனிற்கு தகுந்த மணம களை தேடுகின்றனர். Ref: 1102

31) Canadian citizen, 44 years, 5'11", educated and well employee, a Divorcee, looking for a suitable bride. Ref: 1101

32) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

33) வவுனியாவில், A/L படித்த,36 வயது, 5'6",மணமகனுக்கு, தகுந்த மண மகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 997

34) யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி மணமகன், 30வயது, 5'7",தகுந்த மணமகளை வெளிநாடுக ளில் தேடுகின்றார். Ref: 996

35) லண்டனில் வசிக்கும்,25 வயது, 5'8", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 995

36) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி, 31 வயது, 5'4", தகுந்த மண மகளை வெளிநாடுகளில்/ இலங்கையில் தேடுகின்றார். Ref: 993

37) லண்டன் பிரஜாவுரிமை, 46 வயது, '6', சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 992

38) லண்டனில் வசிக்கும், 40 வயது, 5'10", பட்டதாரிக்கு ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தகுந்த மணம களை தேடுகின்றார். Ref: 989

மணமகன் தேவை

1) Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

2) Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

3) UK Citizen, 24 years, 5'6", a Professional & a divorcee, seeking a suitable groom. Ref:1470

4) சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1469

5) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின் றனர். Ref:1468

6) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின் றனர். Ref:1467

7) யாழ்ப்பாணத்தில் வசிக்கும், 43 வயது 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின் றனர். Ref:1466

8) German citizen, 30 years, 5'3", educated & well employed, looking for a suitable groom. Ref:1465

9) தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1464

10) கொழும்பில் கணக்காளராக பணி புரியும், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1463

11) கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஜரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

12) மலேசியாவைச் சேர்ந்தவரும்,40 வயது, 5'5", படித்த, கணவனை இழந்த மணமகளுக்கு, தகுந்த மணம கனை கனடா, ஜரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1461

13) கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1460

14) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 33 வயது, 5'4", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை பிரான்ஸில் தேடுகின்றனர். Ref:1458

15) பிரித்தானிய பிரஜாவுரிமை, 36 வயது, 5'1", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1457

16) கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1456

17) கொழும்பில் வேலை செய்யும், 25 வயது, 5'2", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1455

18) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

19) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1452

20) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

21) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

22) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

23) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1448

24) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

25) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

26) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணம கனை தேடுகின்றனர். Ref:1445

27) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

28) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

29) மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1442

30) கனடாவில் வசிக்கும் பட்டதாரியும் Accountants and Advisors company யில் வேலை பார்க்கும் 26 வயது 5'5" மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1441

31) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின் றனர். Ref:1440

32) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின் றனர். Ref: 1439

33) Uni. student, 24 years, 5'4", a British citizen, in the UK since her teenage seeks a suitable groom. Ref:1438

34) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

35) பிரான்ஸில் வசிக்கும், 35 years, 5'7", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1436

36) பிரான்ஸில் வசிக்கும், 33 years, 5'5", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1435

37) கொழும்பில் தொழில் புரியும், 36 வயது, 5', படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1434

38) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மண மணமகனை Canadaவில்/ இலங்கை யில் தேடுகின்றார். Ref: 1433

39) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மண மகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

40) இந்தியாவில் Docterஆக பணிபுரி யும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

41) Professional bride, 29 years, 5'4", a German Citizen, in UK for 6 years, a Divorcee, looking for a suitable groom. Ref:1429

42) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 25 வயது, 5'5', International Affairs Degree Final year, தகுந்த மணமகனை UK/ Canada/Colombo இல் தேடுகின்றார். Ref:1428

43) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

44) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

45) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

46) டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக் கழக மணமகளுக்கு தகுந்த மணம கனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

47) Canadian Citizen, 35 வயது, 5',விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1422

48) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி ஆசிரியை, 33 வயது, 5'3", தகுந்த மணமகனை UK/ Australia/Europe/Canada/swiss இல் தேடுகின்றார். Ref:1421

49) கொழும்பில் வசிக்கும், B.A பட்ட தாரி ஆசிரியை, 39 வயது, "5', தகுந்த மணமகனை UK/Europe இல் தேடுகின்றார். Ref:1420

50) வடமராட்சியில் வசிக்கும், பட்டதாரி ஆசிரியை, 27 வயது, 5'4', தகுந்த மணமகனை லண்டனில் / இலங்கையில் தேடுகின்றார். Ref: 1419

51) வடமராட்சியில் வசிக்கும்,39 வயது, 5'5', தகுந்த மணமகனை UK/ Europe/Canada இல் தேடுகின்றார். Ref: 1418

52) இலங்கையில் வசிக்கும்,ஆசிரியை, 26வயது, 5'3', தகுந்த மணமகனை UK/ Europe/swiss இல் தேடுகின்றார். Ref: 1417

53) Brother living in UK seeks in a suitable groom for his sister 28 years, 5'5', A Graguate, well employed Ref: 1416

54) Graguate, 27 years, 5'3' tall,in Britain since childhood,a Bank employee, seeks a suitable groom. Ref: 1415

55) Bride in colombo, 23 years, 5'6' Elocution teacher, looking for a groom in Canada, able to sponcer her. Ref: 1414

கவிதை

ஆறாத வடு

ஈழத் தமிழர் ஏட்டில் இன்னுமோர்
வரலாற்றுப் பதிவு!
நேருக்கு நேர் நின்று போர்
செய்ய முடியா கோழைகளின்!
வெறியாட்ட அரங்கேற்றம்!

செஞ்சோலை!! செங்குருதியில்
குளித்த ஓராண்டு நிறைவு!
பிஞ்சுகளை எல்லாம் நஞ்சுகள்
நசுக்கிய நாள் இது! ஈழத்தமிழர்
நெஞ்சங்களில் பதிந்திட்ட ஆறாதவடு!

எங்களின் மலர் முகங்களை
மறக்க இயலவில்லை!மனங்களில்
கண்ணீரோடு கதறிய கதறல்
உலுக்குகிறது ஈழத் தமிழனை!
பொறுப்பதில்லை எதற்கும் இனி!.

"ஏன்" என்று எந்த அரசும்
கேட்கவில்லை! போனது "தமிழ்"
உயிர் தானே! அலட்சியத்திலும்
உயர்ந்து நிற்கின்றது எங்கள்
தமிழரின் இலட்சியம்!

- தமிழ்தங்கை

காத்திருப்பு

உன்னைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டது.
உனது குரலில் அன்பை அனுபவிக்க
ஏங்கித் தவிக்கிறது மனம்.
பாசம் நிறைந்த உன் பார்வைக்குள் நனையும்
நாளின் நினைவுகளில் கழிகிறதென் நிகழ்காலம்.
கால நீட்சியில் உனது கோலத்தில்
எழில் கூடியிருக்கும் என்று
நினைக்கிறேன்
இத்தனை காலப் பிரிவினால் நீயும்
என்னைப் போலவே தவித்தபடி இருக்கலாம்.
நேரில் பேச வேண்டிய செய்திகளை
சுமக்கின்ற எங்களின் மனங்களில் சுமைகளை
மாற்றிக் கொள்கின்ற நாளின் வருகையை
எதிர்பார்க்கின்ற கணங்களில் அழிவுகள்
வருடங்களாக நகர்கின்ற பொழுதிலும்
தொடர்கிறது உனக்கான எனது காத்திருப்பு.
பேசிக்கொள்ள நேரமற்ற விதமாய்
உணர்வுமிக்க பொழுதொன்றில் சந்திக்கனும்
உனது கனிவான பார்வையே போதும்
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க
உன்னைப் பற்றிய கனவுகளில் வாழ்வதால்
வாழ்க்கையை இனிமை நிறைந்ததாய் உணர்கிறேன்.
நானும், உனக்கான எனது கவிதையும்
வழமை போலவே காத்துக் கொண்டிருப்போம்
எங்களது காத்திருப்பு ஒருபோதும் முடிவடையாது
ஏனெனில், நீ இல்லாமல் போய்விட்ட செய்தியும்
உன்னைப் போலவே இரகசியமானது
என்பதுடன் பெறுமதியும் வாய்த்தது.

- சூரியநிலா

தீர்வு எதுவரை?

புல்லுத் தரையில் விளையாடிப்
புண்ணாய்ப் போன கால்களுக்குப்
புழுதி தனையே மருந்தாக்கிப்
புரண்ட மகிழ்ச்சி மீள்வருமா

காலை உணவும் இல்லாமல்
காலிற் செருப்பும் இல்லாமல்
காச்சும் வெயிலில் விளையாடிக்
களித்த நாட்கள் மீள்வருமா

தோட்டம் துரவில் அலைந்தலைந்து
தொட்டாற் சுருங்கி மரம்தேடி
தொட்டுத் தொட்டு இலைசுருட்டி
தொலைத்த நாட்கள் மீள்வருமா

முறமது குடையாய் மாறிவிட
முற்றம் நிறைந்த மழைநீரில்
காகிதக் கப்பல் விட்டேநாம்
களித்த நாட்கள் மீள்வருமா

வீட்டுப் பாடம் செய்யாமல்
விளையாடிப் பின் காலையிலே
வியாதி எனவே பலசொல்லி
வீட்டில் நின்ற நாள்வருமா

காதல் என்ற சொல்லுக்குக்
கருத்தே தெரியா வயதினிலே
கடிதம் கொடுத்துப் பதிலுக்காய்
காத்த நாட்கள் மீள்வருமா

கள்ள மில்லா மனங்கொண்ட
கனிவும் பண்பும் மிகக்கொண்ட
நண்ப ரோடு சேர்ந்திருந்த
நல்ல நாட்கள் மீள்வருமா

தொல்லை இல்லா நண்பருடன்
தொடராய் ஓடும் வண்டியிலே
தொங்கிக் கொண்டே பயணித்துத்
தொலைத்த நாட்கள் மீள்வருமா

அறியாமல் நான் செய்துவிட்ட
அத்தனை தவறும் களைந்தகற்றி
அழகாய் மீள வாழ்க்கையினை
அமைத்து வாழும் நாள்வருமா

- முரளி

இனிவரும் உலகு

என்னோடு வா!
இறைவா!
என்னோடு வா!
அழைக்கின்றேன் – உன்னை
துதிக்கின்றேன் உன்னை
அருள் தரும் வாழ்வு – இனி
புதுசுகம் தரும் வாழ்வு
மனிதத்தை விதைத்து
நேசத்தை வளர்ப்போம்!!
மாயத்தைக் களைந்து
உண்மையை உடுப்போம்!!!
போர்களை ஒழிப்போம்!
புதுமைகள் செய்வோம்!
பாவங்களை மன்னிப்போம்!
பகைவர்களை நேசிப்போம்!!
பயந்துவிடாதே!
மரங்கள் இல்லை
இங்கே – உனக்கு சிலுவைகள் செய்ய!

- சுழபாரதி

தீர்ப்பதைக் கூறிடும்!

தீர்ப்பதை கூறிடும்
பைத்தியக் காரரே
பகுத்தறி வென்ற
பஞ்சாங்கம் எடுத்தீரோ?

அரை குறை பண்டிதர்
அகிலத்தில் எதுவரை?
புரிந்திட்டால் இன்றே
புறப்பட்டு போவீர்

கலங்கிய ஓடையில்
தெளிநீர் அள்வீரோ?
உண்மையில் உண்மையில்
உத்தமர் நீவிரோ?

உலகத்தில் மதமது
இல்லையோ கூறிடும்
இந்துவை முன்னாடி
எடுத்தீரோ நீர் ஏனும்?

பிழைப்புக்கு வழியில்லா
பிச்சைக் காரரே
சங்கம் ஊதியே
சங்கமா அமைத்தீர்?

காதன் போல
கத்தியே கரைகின்றீர்
சாதன் நாமென்ன
சாய்ந்தா போவோம்?

குருடர்கள் பார்வை
எதுவரை செல்லும்?
மலடரே உம் கரு
மனிதமா தந்திடும்.

செவிடரின் செவியதில்
பறையொலி விழுமா?
அகந்தை கொண்டாரின்
அகமது என் செய்யும்?

பொழிந்தது புரிந்ததா
பொலிவுடன் படைப்பீரா?
மனிதம் கொண்டீரோ
மன்றுக்கு விடுவீரோ?

நியாய வாதிகள்
நீதியை கொள்வாரோ?
தீர்க்க தரிசியே
தீர்ப்பதைக் கூறிடும்!

- நாடோடி

கொல்லுதேன்?

ஆளைக் கொல்வதேன்?
வாளாய் ஒரு வீச்சு
காயத்தில் காயமில்லை
மாயமென்னடி மாயமிது?
பாயுமுன் அறியவில்லை – எனைப்
பாடையிலும் வாட்டுமென்று
தீயெரியும் அடர் நடுவே – உன்
தீண்டலின் இன்பம் கண்டு
நான் எரிந்து விட்டேனடி!
நான்..... எரிந்து விட்டேனடி!

- ஆதிவாசி

தமிழர் விளையாட்டு விழா
>>> தென்மேற்கு இலண்டன்

கிரிகெற், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளுடன்
எமது பாரம்பரிய கூடி, கிளித்தட்டு விளையாட்டுகள்.

தாயகக் உணவகம்
மேலதிக விபரங்களுக்கு: 077 99535472

www. swtsp.co.uk

AUGUST
27
திங்கள் கிழமை
வங்கி விடுமுறை நாள்

அறுவைப் பக்கம்

துபாயில் 1மணி நேரம் டைம் பாசுக்கு 2 திர்காம்!!!

நேத்து இங்கே வார ஆரம்பமாச்சா, அதனால கொஞ்சம் ஆணி ஆதிகமா இருந்துச்சு. எல்லாத்தையும் பிடுங்கிட்டு வீட்டுக்கு போனா செம போர். எவனாவது மாட்டினா தேவலை நாம கொஞ்சம் ஃபிரஷ் ஆகிக்கலாம்னு நெனச்சா ஒருத்தனும் மாட்டலை.

போன்ல யார் கிட்டயாவது மொக்கை போடலாம்ன்னு பார்த்தா 0 ஃபில்ஸ் தான் இருந்துச்சு. பின்ன ஏதாவது படம் பார்க்கலாமேன்னு உக்காந்தா நம்ம விஜய் படம் ஒன்னு மாட்டுச்சு.

டேய்ய்ய்ய் நல்லா வருது வாயில, நீ எங்கிட்டு இருக்க சொல்லு கிட்டத்துல இருந்தா நானே வந்து காச மாத்திகிறன்

பார்த்துகிட்டு இருந்தேன். அதில விஜய் பைக் வேணும்ன்னு நெனைச்சா மேலேயிருந்து பைக் சாவி விழுது. தொப்பி வேணும்ன்னு நெனைச்சா தொப்பி கிடைக்குது. சரி நாமலும் அதுபோல செய்வோமேன்னு 'ஆண்டவா நம்ம மொபைல்ல ஒரு 25 திர்காம் தட்டி விடுப்பா'ன்னு ஒரு அப்ளிகேஷன் போட்டேன். என்ன ஆச்சர்யம் டொய்ங்ன்னு ஒரு 25 திர்காம் வந்து விழுந்துச்சு.

Thanks aandavanன்னு ஒரு SMS அந்த நம்பருக்கு தட்டி விட்டுட்டுசரிமொக்கைபோடசரியான ஆளைதேடினேன். என்னடா இவர் வினையூக்கிமாதிரி அமானுஷ்யமா எழுத ரார்ன்னு நெனைக்காதீங்க விஷயம் இது தான்.

இங்க ஒரு மொபைல்ல இருந்து வேற மொபைல்க்கு பைசா டிரான்ஸ்பர் பண்ணலாமா அப்படி ஒரு அப்பாவி இன்னொறு அப்பாவிக்கு டிரான்ஸ்பர் பண்ணும் போது ஒரு நம்பரை தப்பா அடிச்சு அது எனக்கு வந்துடுச்சு! கொஞ்ச நேரத்துல ஒரு போன் அதே நம்பர்ல இருந்து!

ஹாலோ தமில் தமில்

நான் தமில் இல்ல நான் பேசுவது தான் தமில்

சார் என் பேரு பளனிச்சாமி உங்க போன்க்கு 25 திர்காம் அனுப்பினேன் வந்துச்சா

வந்துச்சுங்க ரொம்ப புண்ணியமா போகும் உங்களுக்கு!

அய்யோ அது உங்களுக்கு அனுப்பலை சார் என் தம்பி ஊர்ல இருந்து வந்திருக்கான் அவனுக்கு அனுப்பினேன் ஒரு நம்பர் தப்பா போச்சு அதான் உங்களுக்கு வந்துடுச்சு அதை எனக்கே திருப்பி அனுப்பிடுங்க சார்

எனக்கு அனுப்ப தெரியாதுங்களே நான் ஒரு படிக்காத

லேபர்ங்க

அப்புடியா நான் சொல்ற மாதிரி செய்யி! (சார் போய் ஒருமைக்கு வந்தாச்சு)

சரி சார் எப்படின்னு சொல்லுங்க - இது நான்

முதல்ல ஹாஷ் கீய அழுத்து!

எனக்கு அது எங்க இருக்குன்னு தெரியாது சார்

கூட்டல் குறி மாதிரி இருக்கும் அதை அமுக்கு

எனக்கு கணக்கு வராது சார் அதனால கூட்டல் குறி எதுன்னு தெரியாது

கூட்டல் குறி தெரியாதா முண்டம் நாலாம்பு பெயிலான எனக்கே தெரியுது நீ என்ன படிச்சிருக்க

உங்கள விட அதிகமா படிச்சு இருக்கன் சார்

அப்புடி என்ன படிப்பு

2ம்பு பாஸ் சார் பாஸு பெருசா பெயிலு பெருசா

டேய் டேய் டேய் கவுண்டமணி செந்தில் வெளையாட்டு வேணாம் மரியாதையா அனுப்பு

போங்க சார் இப்புடி சொன்னா அனுப்ப மாட்டேன்!

எனக்கு கணக்கு வராது சார் அதனால கூட்டல் குறி எதுன்னு தெரியாது

சரி சரி 'தற்குறி தற்குறி கீழ இருக்க கடேசி பட்டன அமுக்கு!

ஏன் சார் கோவபடிறீங்க மூலமா?

வந்துடும் போல இருக்கு சீக்கிரம் அமுக்குடா கடேசி பட்டன

சார் உங்க குரலுக்கு பாடுனா நல்லா இருக்கும் சார் ஒரு பாட்டு பாடுங்க

டேய்ய்ய்ய் நல்லா வருது வாயில, நீ எங்கிட்டு இருக்க சொல்லு கிட்டத்துல இருந்தா நானே வந்து காச மாத்திகிறன்

நீங்க எங்க இருக்கீங்க அத மொதல்ல சொல்லுங்க சார்

நான் அல்ஃபுஸ் கிராண்ட் மால் கிட்ட இருக்கேன்

(அட நம்ம இடத்துக்கு பக்கத்துல தான்) சார் நான் புஜைராவில இருக்கேன் வந்து வாங்கிகுங்க

அடங்கொய்யால அதுக்கே 200 திர்காம் ஆவுமே, டேய் எப்படியாவது அனுப்புடா அய்யோ இவன் கிட்ட மாட்டிகிட்டனே

நீங்க ஒரு பாட்டு பாடுங்க யார்கிட்டயாவது கேட்டு அனுப்பறேன்

டேய்ய்ய் சரி என்ன பாட்டு சொல்லு சொல்லி தொலை பின்னயும் அனுப்பல.....

பல்லேலக்கா பாடுங்க சார்...

பல்லேலக்கா பல்லேலக்கா பல்லேலக்கா... டேய் இதுக்கு மேல தெரியலடா

சரி அப்ப வேற பாட்டு பாடுங்க சார்

?

?

இப்படியா 1 மணி நேரம் போச்சு அவனுக்கு இதுக்கே 8 திர்காம் ஆகியிருக்கும். அதுக்கு பின்ன பாவம்ன்னு 35 திர்காம் இன்னிக்கு காலைல அனுப்பி வச்சேன்

1 மணி நேரம் டைம் பாசுக்கு 2 திர்காம்

- அட்மின்

வக்கீல்மார் கடிக்கிறாங்கள்!

வக்கீல்: மயக்கம் தெளிந்தபின் உங்கள் கணவர் உங்களிடம் என்ன கேட்டார்?

சாட்சி: இப்போது நான் எங்கிருக்கிறேன் ராதா என்று.

வக்கீல்: அதற்கு ஏன் நீங்கள் கோபப் படவேண்டும்?

சாட்சி: ஏனென்றால், என் பெயர் மால்தி ராதா அல்ல!

❖ ❖ ❖

வக்கீல்: எப்படி உங்கள் முதல் திருமணம் முறிந்தது?

சாட்சி: இறந்து விட்டதால்..

வக்கீல்: யார் இறந்ததால்?

❖ ❖ ❖

வக்கீல்: உங்கள் பிறந்ததேதி என்ன?

சாட்சி: ஜூலை 15

வக்கீல்: எந்த வருஷம்?

சாட்சி: எல்லா வருஷமும்தான்

❖ ❖ ❖

வக்கீல்: போஸ்ட் மோர்ட்டம் ஆபரேஷன் செய்வதற்கு முன்னால் நாடியை சோதித்தீர்களா?

சாட்சி: இல்லை

வக்கீல்: ரத்த அழுத்தம்?

சாட்சி: இல்லை

வக்கீல்: இதயத்துடிப்பு?

சாட்சி: இல்லை

வக்கீல்: அப்படியென்றால் அந்த ஆள் உயிருடன் இருந்திருப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கலாம் இல்லையா?

சாட்சி: முடியாது. ஏனென்றால் அவனது மூளை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் எடுத்து வைக்கப் பட்டிருந்தது.

வக்கீல்: இருந்தாலும் உயிர் பிரியாமல் இருக்கலாம் இல்லையா?

சாட்சி (சலிப்படைந்து): இருந்தாலும் இருக்கலாம், எங்கேயாவது கோர்ட்டில் வக்கீலாக.

❖ ❖ ❖

வக்கீல்: அப்புறம் என்ன நடந்தது?

சாட்சி: நீதான் கொலையைப் பார்த்ததற்கு ஒரே சாட்சி. அதனால் உன்னைக் கொலை செய்யப் போகிறேன் என்று சொன்னான்.

வக்கீல்: அவன் உங்களைக் கொன்றானா?

❖ ❖ ❖

வக்கீல்: இறந்தவரை உங்களுக்குத் தெரியுமா?

சாட்சி: தெரியும்

வக்கீல்: இறந்ததற்கு முன்பா, இல்லை பிறகா?

- பத்மநாதன்

இந்திய கிரிக்கட்...

ஜட்ஜ் : உன்னுடைய பெற்றோர் விவாகரத்து செய்யப்போகின்றனர். நீ யாருடன் இருக்க விரும்புகிறாய்? உன் அம்மாவுடனா?

சிறுமி : இல்லை. அவள் அடிப்பாள்.

ஜட்ஜ் : அப்படியென்றால் உன் அப்பாவுடன் தானே?

சிறுமி : இல்லை. அவங்களும் அடிப்பாங்க.

ஜட்ஜ் : அப்படியென்றால் யாருடன் இருக்க விரும்புகிறாய்.

சிறுமி : நான் இந்தியக் கிரிக்கெட் டீமுடன் இருக்க விரும்புகிறேன். அவங்க அடிக்கவே மாட்டாங்களாம் என் ஃப்ரெண்ட் சொல்லியிருக்கிறான்.

தமிழிலயும் வரப்போதாம்...

— தித்துவிபிமம்

அதிகமா மிஸ் கோல் குடுக்கிற பொம்பிளயும்
அதிகமா எஸ்.எம்.எஸ் அனுப்பிற ஆம்பிளயும்
நிம்மதியா இருந்ததா சரித்திரமே இல்ல!!!

*****

தலையிடி வாறதுக்கு முதல்க் காரணம் தலை என்டு தெரிஞ்சா அவனைப் போல அறிவாளி உலகத்தில யாரும் இருக்கேலாது

சினித்துளி

சுந்தர்சி

வீராப்பு படத்தின் வெற்றி சுந்தர்.சியை ஒரு சுற்று இளைக்க வைத்திருக்கிறது. அட.. இதென்ன கலாட்டா? வேறொன்றுமில்லை. புரபஷனல் கதாநாயகன் ஆகிவிட்டார் அல்லவா? அதனால் தான் இந்த உணவுக்கட்டுப்பாடும், உடல் இளைப்பும். மற்றபடி வீராப்பின் வெற்றி, சுந்தர்சியை மனதளவில் ஒரு சுற்று பெருக்கவே வைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல... முன்னணி நடிகர்கள் பட்டியலிலும் இவரை சேர்த்து விட்டிருக்கிறது. அடுத்த படத்தை எப்போ இயக்க போறீங்க? நடிப்பு நல்லா போயிட்டு இருக்கு. நிறைய படங்கள் புக்காகிகொண்டிருக்கிறது. கொஞ்ச நாளைக்கு டைரக்ஷனுக்கு ஓய்வு கொடுப்போமே! யதார்த்தமாக பேசுகிறாராம் சுந்தர்சி. நல்லம்!

பெரியார்

பெரியார் படத்தின் 100-வது நாள் விழா அண்மையில் நடந்தது. தமிழக முதல்வர் கலைஞர் கலந்து கொண்டு அப்படத்தில் நடித்த நடிகர் நடிகைகளுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் கேடயம் வழங்கி சிறப்புரை ஆற்றினார். பின் சத்யராஜை பெருமைப்படுத்தும் விதமாக பெரியார் அணிந்திருந்த பச்சைக்கல் மோதிரத்தை அவருக்கு அணிவித்தார் கலைஞர். பின்பு பேசும்போது - ஒரு உண்மையான மாண வனுக்கும் ஒரு உண்மையான பிள்ளைக்கும் கிடைக்காமல் சத்யராஜுக்கு இந்த மோதிரம் கிடைத்திருக்கிறது என்றால் எவ்வளவு பெருமை சத்யராஜுக்கு என்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன் என்றார். ஆகா இது அன்பா ஆப்பா?

சத்யம்

தசாவதாரம் படத்தில் கமலின் பத்து வேடங்களில் ஒன்றுதான் பக்கத்தில் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது. சிவாஜிக்கு பிறகு மீண்டும் அலையடிக்க ஆரம்பித்துவிட்டது கோலிவுட்டில்! எந்த பக்கம் திரும்பினாலும் இப்போது தசாவதார பேச்சுதான். பட்ஜெட் 50 கோடியை தாண்டும் என்கிறார்கள் ஒரு சிலர். இல்லையில்லை, அதையும் தாண்டும் என்கிறார் கள் மற்றும் சிலர். சிவாஜிக்கு 800 பிரிண்டுகள் போடப்பட்டதாம். இவரோ, 1000 பிரிண்டுகளுக்கு தயாராக இருப்பார் என்கிறார்கள். படம் தீபாவளிக்குதானே ரிலீஸ் என்பவர்களுக்கு, முழுமையான பதில் கிடைக்க இன்னும் சில வாரங்கள் ஆகும். எப்ப வந்தாலும் நல்ல படமா வந்தா சந்தோசம்.

செய்திகள்

ஐயோ பாவம் மலையாள நடிகைகள்! மீராஜாஸ்மின் ரகசிய திருமணம் பற்றிய செய்தியே இன்னும் முடிவுக்கு வராமல் இழுபறியாக கிடக்கிறது. இந்த நிலையில் பாவனாவுக்கும், மிஷ்கினுக்கும் காதல் என்று இறக்கை கட்டி பறக்கிறது வதந்தி. மிஷ்கின் ஏற்கனவே திருமணமானவர் என்றாலும், பாவனாவின் காதல் வலையில் விழுந்து, கட்டிய மனைவியை எட்டியே இருக்க சொல்லிவிட்டதாகவும் தகவல். இந்த காதல் விவகாரத்தை வெளிச்சம் போட்டு சொல்வதே மிஷ்கின்தான் என்றும் பேசிக் கொ(ல்)ள்கிறார்கள். இது இப்படியிருக்க, மீராஜாஸ்மினுக்கும், பாவனாவுக்கும் நடக்கும் தொழில் போட்டியில் ஒருவருக்கொருவர் இறைத்துக் கொள்ளும் சேறுதான் இந்த வதந்தி என்றும் செய்திகள் உலாவருகிறது கோலிவுட்டில்.

சிறுதுளி!

நடிகர் சிம்பு தற்போது காளை என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் தனக்கு மாமியாராக நடிக்க சினேகாவுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் சினேகா அந்த கேரக்டரில் நடிக்க மறுத்து விட்டார். இதனால் திரையுல கில் பரபரப்பு ஏற்பட்டது.

❖ ❖ ❖

ரஜினியின் அடுத்த படம் பற்றி பரபரப் பான எதிர்பார்ப்பு நிலவுகிறது. அவர் தற்போது ஐரோப்பாவில் உள்ளார். அங்கு தனது மகள் சவுந்தர்யாவின் சுல்தான் அனிமேஷன் படவேலைகள் நடக்கிறது. இதில் ரஜினி பங்கேற்கிறார். படப்பிடிப்பிலும் கலந்து கொள்கிறார். அங்கிருந்து வந்து இம்மாத இறுதியில் தனது புதுபபடம் பற்றிய அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

❖ ❖ ❖

இந்தி திரையுலகின் கவர்ச்சிப்புயல் நடிகை மல்லிகா ஷெராவத். இவர் தி மீத் என்ற ஆங்கில படத்தில் ஜாக்கிசான் ஜோடியாக நடித்ததன் மூலம் உலகம் முழுவதும் பிரபலமானார். தற்போது இவர் குர்பானி ரீமேக் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட இருக்கிறார். இதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.குர்பானி படத்தில் நடிகை ஜீனத் அமன் நடித்த கேரக்டரில் மல்லிகா ஷெராவத்தை நடிக்க வைக்க டைரக்டர் பெரோஸ் கான் முடிவு செய்துள்ளார்.

❖ ❖ ❖

துள்ளுவதோ இளமை படத்தில் அறி முகமாகி பல ஹிட்படங்கள் கொடுத்து தொடர்ந்து பிசியாக உள்ளார் தனுஷ். தற்போது பொல்லாதவன் படத்தில் நடிக் கிறார். இதை இயக்குபவர் வெற்றிமாறன். யாரடி நீ மோகினி படமும் பண்ணுகிறார். இதில் அவர் ஜோடி நயன்தாரா, தெலுங்கு ரீமேக்கே இப்படம். தெலுங்கில் ஹிட் ஆன ஆரியா படத்தை ஜெமினி லேப் நிறுவனம் தயாரிக்கிறது. அதில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். கவுதம் மேனன் இயக்கும் படமொன்றுக்கும் கால்ஷீட் கொடுத்துள்ளார்.

❖ ❖ ❖

ரஜினியின் முரட்டுக்காளையில் விஜய், மன்னன்படத்தில் சிம்பு, மூன்று முகம் படத்தில் விஷால் படிக்காதவன் படத்தில் பரத் ஆகியோர் நடிக்கவிருப்பம் தெரிவித்து உள்ளனர்.

❖ ❖ ❖

தமிழில் முன்னணி நடிகையாக வலம் வரும் அசின் தற்போது கமலின் தசாவதாரம் படத்தில் வித்தியாசமான தோற்றத்தில் நடிக்கிறார். இதற்காக அவருக்கு ஸ்பெஷல் மேக்-அப் போடப்படுகிறது.

நயன்தரா சொல்வது

கேள்வி: நீங்கள் இப்போது ரொம்பவும் மாறிவிட்டதாக சொல்கிறார்களே?

பதில்: ரசிகர்களுடைய ஆதரவும் ரசனையும் என்னை வாழ வைத்து கொண்டிருக் கின்றன. பட வாய்ப்புகள் கூட சிறந்த பட நிறுவனங்களில் இருந்து வருகின்றன. நான் முன்பு போல்தான் இருக்கிறேன். என்னிடம் எந்த வித மாற்றமும் இல்லை. அமைதியை மட்டும் கடைபிடிக்கிறேன்.

கே: ரசிகர்களுக்கு உங்களிடம் பிடித்த விஷயம்?

ப: கண்டிப்பாக எனது கண்கள்தான் ரசிகர்களுக்கு பிடிக்கும்.

கே: கண்தானம் செய்யும் உத்தேசம் உள்ளதா?

ப: இந்த விஷயத்தைக்கூட பலர் கேட்டுவிட்டனர். இதற்கு நான் விரைவில் பதில் சொல்கிறேன்.

கே: சமீபத்தில் நீங்கள் தொடங்கிய வெப்சைட்டில் எந்த அளவுக்கு மெயில்கள் வருகின்றன.

ப: அதிகளவில் வருகின்றன. பெரும்பாலானவர்கள் ' ஐ லவ் யு" என்றுதான் இ- மெயில் அனுப்புகிறார்கள். அதற்கு நான் 'மிக்க நன்றி" என்று பதில் அனுப்பி வருகிறேன்.

கே: ஒரு காலத்தில் நீங்கள் ஒல்லியாக இருந்தீர்கள். தற்போது ஓரளவு பருமனானது போல் தெரிகிறதே

ப: உடற்பயிற்சி செய்யும் நேரத்தை குறைத்துவிட்டேன். யோகா, தியானம் செய்ய பொறுமை தேவை. அது என்னிடம் இல்லை. ஆனால் நீங்கள் கேட்பது போல நான் ரொம்பவும் பருமனாக இல்லை.

கே: உணவுக் கட்டுப்பாடு கடைபிடிக்கிறீர்களா?

ப: நான் எனக்குப் பிடித்த உணவுகளை சாப்பிடுவேன். உணவுக்கட்டுப்பாட்டை அவ்வளவாக கடைப்பிடிப்பதில்லை. பாடல்களை படம் பிடிக்கும் போது சோர்வு அதிகமாகிவிடும். அப்போது அதிகமாக சாப்பிடுவேன்.

கே: உண்மையில் உங்களது பார்வையில் காதல் என்றால் என்ன?

ப: அது ஒரு உணர்ச்சிகளின் சங்கமம். சுகம், துக்கம், சண்டை, வேதனை அனைத்தையும் காதலிக்கும் மனிதருடன் எந்த வித பயமும் இல்லாமல் சொல்ல வேண்டும். இவை எல்லாவற்றையும் விட காதல் வெற்றி பெற வேண்டும் என்றால் காதலர்கள் இருவரும் சேர்ந்து ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது எத்தகைய தீய சக்திகள் வந்தாலும் பிரிக்க முடியாது.

கே: காதலித்தவரால்தான் இந்த பதிலை அழகாக சொல்ல முடியுமா?

ப: அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு தெரிந்த விஷயத்தை சொல்லி இருக் கிறேன். அவ்வளவுதான்.

- மாலைமலர்

தமிழர் விளையாட்டு விழா

>>> தென்மேற்கு இலண்டன்

கிரிகெற், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளுடன்
எமது பாரம்பரிய கயிறு, கிளித்தட்டு விளையாட்டுக்கள்.

தாயக உணவகம்

மேலதிக விபரங்களுக்கு: 077 99535472

www.swtsp.co.uk

AUGUST
27
திங்கள் கிழமை
வங்கி விடுமுறை நாள்

சினிமா

அபோகலிப்டோ



அபோகலிப்டோ - MelGibson-னின் 'The Passion of the Christ'படம் பார்க்காதவர்க்கு அபோகலிப்டோவின் ரத்தம் நிறைந்த காட்சிகள் அருவருப்பான பயத்தை ஏற்படுத்தும். நம்மூர் சினிமாவில் ரவுடிகள் அப்பாவிகளை (Hero எண்டர் ஆகாத வரை) வெட்டுவதை off-screen-ல் காமிக்கும் போதே அய்யோ ரத்தம் என்று தலைகுனிந்து கண்களை மூடிக் கொள்கிறவர்கள் கட்டாயம் இந்த படத்தின் போஸ்டரைக்கூட பார்க்கவேண்டாம். தைரியமான கர்பிணி பெண்கள், தைரியமான குழந்தைகள் இந்த படத்தை பார்க்கலாம்.

*குறிப்பிட்ட பத்திகள் சற்றே கொடூரமாக இருக்கும். இதை படிப்பதும் தவிர்த்து விடுவதும் உங்கள் தைரியத்தை பொறுத்தது என்று எச்சரிக்கிறேன்.

முதல் காட்சியிலேயே ஆக்ரோஷமாக வேட்டையாடப்படும் காடுப்பன்றி இந்த படத்தில் இன்னும் நிறைய பிரமிப்பான விஷயங்கள் இருக்கும் என்று உங்களை நகர விடாமல் செய்து விடும். அமைதியாக காட்டில் வேட்டையாடி வாழ்ந்து கொண்டிருக்கும் mayan இனத்தவரை கடவுளுக்கு பலி கொடுக்கும் மிருகங்களை விட கொடுமையான மனிதர்களிடம் மாட்டிக்கொள்கிறார்கள்.

பெண்கள் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். ஆண்கள் பலிபீடத்திற்கு அழைத்து செல்லப்படுகிறார்கள். பிரமிடை போல உயர்ந்த இடத்தில் பலிபீடம் அவர்கள் இனத்தின் அரசர், அரசி, இளவரசன் என்று பல மிருகங்கள் பலி கொடுப்பதை பார்த்து மகிழ அமர்ந்திருக்கிறார்கள். பலி கொடுக்கும் காட்சிகள் இவ்வளவு கொடூரமாக நான் வேறு எந்த படத்திலும் பார்த்ததில்லை.

* ஒரு ஆளை படுக்க வைத்து பெரிய கத்தி எடுத்து மார்புக்கு கீழே குத்தி, குத்திய இடத்தை கத்தியாலே பெரிதாக்கி கையை விட்டு அவன் இதயத்தை பிய்த்து எடுத்து கீழே இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களிடம் தூக்கி காமித்து இது ஆண்டவனின் இதயம் என்று ஆர்பரிக்கிறான் ஒருவன். பலியிடப்படுபவன் இன்னும் முழுவதுமாக இறக்காமல் தன் இதயத்தை தானே சில நொடிகள் துடிக்க துடிக்க பார்க்கிறான். அதோடு இல்லாமல் அந்த இதயத்தை பொரிப்பதற்காக தீயில் வேறு வைக்கிறான்.

பின் அவன் தலையை துண்டித்து தலையை மேலிருந்து கீழே படிகளில் உருட்டி விடுகிறான். உருண்டு வரும் தலையை வலைகளில் பிடிப்பதற்காக கீழே இருவர் அதை வலைகளில் பிடித்து ஏற்கனவே துண்டிக்கப்பட்ட தலைகள் இருக்கும் இடத்தில் வீசுகிறான். அடுத்து தலையில்லாத முண்டத்தை படிகளில் உருட்டி விட அதை எடுத்து முண்டங்கள் இருக்கும் இடத்தில் வீசுகிறான்.

அவர்களில் இருவரை பலிகொடுத்து விட மூன்றாவது ஹீரோ அழைத்து வரப்படுகிறான். அந்நேரத்தில் சூரிய கிரகணம் வந்து விடுவதால் சகுனம் சரியில்லை என்று மீதமுள்ளவர்களை சாதரணமாக கொன்று விடும் படி ஆணையிடப்படுகிறது.

அவர்களை ஓட விட்டு அம்பு, ஈட்டு எறிந்து கொல்கிறார்கள். சரியாக சாகாமல் துடிப்பவர்களை கட்டையால் அடித்து கொல்ல ஒருவன். இதில் ஹீரோ தப்பித்து தொடர்ந்து வரும் அவர்களை கொல்கிறான்.

முதலில் பிடிபடுவதற்கு முன் ஒரு ஆழமான குழியில் பாதுகாப்பாக இறக்கிவிட்டு வரும் தன் கர்ப்பமான மனைவி குழந்தையுடன் சேர்ந்து புது வாழ்க்கையை துவக்குவதாக படம் முடியும்.

பன்றி வேட்டையாடப்படும் விதம், தண்ணீருக்கடியில் குழந்தை பிரசவம் எல்லாம் உண்மையில்லை என்றாலும் புதிதாக இருந்தது. இந்த படத்தில் ஹீரோ சினிமாவிற்கு புதுமுகமாம், நடிப்பை பார்த்தால் அப்படி தெரியவில்லை. அவ்வளவு ஆக்ரோஷமான நடிப்பு. ஒளிப்பதிவு மிக நேர்த்தியாக அழகாக இருந்தது.

Mel Gibsonக்கு ஏன் இந்த படத்தை எடுக்க வேண்டும் என்று தோன்றியது என்று தெரியவில்லை. ஆனால் காட்டில் இப்படியும் இதையும் விட கொடுமையான மனித மிருகங்கள் இருப்பதை நாட்டில் இருக்கும் நமக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

- சிவகுமார்



விமர்சனம்
தீ நகர்

கல்லூரியின் முன்னாள் மாணவர் தலைவரான கரண், வேலைதேடி செருப்பை தேய்த்துக்கொள்ளும் இளைஞர். ஒருமுறை வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லும் கரண் 'தம்'மடிக்க நண்பனிடம் சிகரெட் கேட்கிறார். நண்பனோ, டீ சிகரெட் வேணுமென்றால் ஒரு கிலோமீட்டர் தூரம் போகணும் என்கிறார். அவ்வளவுதான் கரணுக்குள் ஐடியா அய்யாசாமி உதயமாகி பிளான் ஒன்றை போடுகிறார். கட் பண்ணினால் அடுத்த சீன்.

வேலை வாய்ப்பு அலுவலகம் எதிரே டீ கடை போட்டு சுய வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்கிறார் கரண். இப்படியே போனால் எப்படி வில்லன் வேண்டுமே இன்ஸ்பெக்டர் சண்முகராஜன் உருவத்தில் வந்து நிற்கிறது வில்லங்கம்.

சிகரெட் வாங்கிவிட்டு பணம் கொடுக்காமல் போகும் சண்முகராஜனிடம் போலீசுன்னா பணம் கொடுக்கமாட்டீங்களா..! என நாயகன் நியாயம் பேச, அடுத்த சீனில் தனது அதிகாரத்தை பயன்படுத்தி டீ கடையை இடித்து தள்ளுகிறார் சண்முகராஜன்.

இப்போ ஹீரோவுக்கு ஏழரை சனியன் தொடங்குகிறது. ஹீரோ வில்லனை (இன்ஸ்பெக்டர்) எதிர்ப்பதும், வில்லன் ஹீரோவை பழிவாங்குவதுமாகவே கிளைமாக்ஸ் வரை நகர்த்துவது இயக்குனரின் திறமை.

கிளைமாக்ஸிலாவது அனல் பறக்கும் என்று நம்பினால் பூ...பூ.. என்று சிரிக்கும் அளவிற்கு சின்னபுள்ளதனமாக இருக்கிறது.

நண்பனிடம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சிகரெட் கேட்கும்போதே நல்ல மாணவனுக்கான அடையாளம் கரணிடம் அடிப்பட்டு போகிறது. ஆனாலும் அதைபற்றியெல்லாம் கவலைப்படாமல் ஹீரோவை அடுத்த மாணவனுக்கு புத்திமதி கூறவைத்து இருக்கிறார் இயக்குனர்.

இது பரவாயில்லை. தீக்காயம்பட்டு வீட்டில் இருக்கும் கதாநாயகி உதயதாராவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று குணப்படுத்துகிறார் கரண். அட இந்த யோசனை கூட நாயகியின் பெற்றோருக்கு தெரியாமல் அதுவரை குத்துகல்லாட்டம் இருந்ததை நினைச்சாதான் கொமெடியா இருக்கு.

பொருட்காட்சியில் பொம்மை கேட்டு அழும் குழந்தை மாதிரி இருக்கிறார் உதயதாரா. அப்படிபட்ட அப்பிராணியை ஆடை குறைக்க வைத்து அரைகுறையாக ஆட வைத்திருப்பது ரசிப்பதற்கில்லை.

கரணோட பிரண்டுன்னு சொல்லிட்டு திரியுற திவ்யாவுக்கு திடீர்னு கல்யாண சீன் ஒன்றை வைத்திருக்கிறார் இயக்குனர்.

அதன்பிறகும் அந்த பொண்ணு புகுந்த வீட்டுக்கு போகாம கல்யாணம் ஆனசுவடே தெரியாம (நெற்றிபொட்டு, தாலி இல்லாமல்) பசங்களோடேயே சுத்துற மாதிரி திரைக்கதையில் பெரிய ஓட்டை போடும்போது நம்ம தலையும் சுத்துது சாமி.

சஸ்பெண்ட் ஆன கான்ஸ்டபிள் மனோகர் போலீஸ் ஸ்டேஷனுக்குள் அசால்ட்டாக வருகிறார்.. இன்ஸ்பெக்டரை காட்டிலும் அதிக சவுண்ட் விட்டபடி கரணை அடிக்கிறார்' என்ன கொடுமை சரவணன்.....

ஜாசிகிப்ட் இசையில் 'கடவுள் எதற்கு....' பாடலில் சினேகனின் வரிகளும் சித்ராவின் குரலும் உருக வைக்கிறது.

+2 படிப்பை முடித்த சின்ன பையன்கள்கூட கோல்சென்டர், மார்க்கெட்டிங் என்று கை நிறைய சம்பாதிக்கும் இந்த காலத்தில் இன்னமும் எம்ப்ளாய்மெண்ட் வாசலில் கல்லூரி மாணவர்கள் கெஞ்சி நிற்கும் காட்சிகளை யோசித்த திருமலையை என்னவென்று பாராட்டுவது.

ஷார்ப்னரில் பென்சிலை சீவி கரணின் காதில் சொருகி அடிக்கபோகும் காட்சியில் மட்டும் ஷார்ப். இது மாதிரி பத்து சீன் பண்ணியிருந்தால்கூட படம் பிரமாதமா வந்திருக்கும்.

சரி படத்தை மறுபடியும் ஞாபகம் வைத்து விமர்சனம் எழுதி நம்ம மூளையையும் ஏன் கெடுத்துக்கணும்.

- அமலன்

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

ARM Associates can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

ARM Associates
Professional Investment Advisers

For a free initial chat, to discuss your requirements, please call:
Mr P.Srinivasan CertPFS
Mr Suhan Srinivasan (Dip PFS, Economics BSc)
Tel: **020 8763 2221** / Fax: **020 8763 2220**
Email: **sri@srinivasan.co.uk** / Web: **www.srinivasan.co.uk**
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.

Nixu® BRAND

HOME MADE
READY TO COOK

Introducing...

READY TO COOK Biriyani

Normal Price: £2.99

TRY IT NOW FOR

£1.99

SAMBHAR RICE | VEGETABLE BIRIYANI | CHICKEN BIRIYANI | MUTTON BIRIYANI | READY TO COOK GHEE RICE MIX | INSTANT RAVA UPPUMA MIX | PEPPER RICE | INSTANT RAVA DOSA MIX

e-TOURS LTD.

Talbot House
204/226 Imperial Drive
Rayners Lane
Harrow,
Midlesex HA2 7HH

T: 020 8429 5200, T: 020 8429 5201 F: 020 8429 5203
E: info@e2ours.co.uk, W: www.e2ours.co.uk

ATOL 9308 PROTECTED

- flights worldwide • hotel booking • travel insurance
- package holidays • visa services • worldwide money transfer

SriLankan Airlines
Qatar Airways
Emirates
Etihad Airways

All Major Credit Cards Accepted

Maestro
VISA
MasterCard
Delta

Bangkok / Hong Kong
£300 +TAX

Singapore/ Malaysia
£300 +TAX

Dubai
from
£109 +TAX

Kerala Holiday
Very Special Offer By E-Tours Only
2 Nights Houseboat
3 Nights Kovalam Beach
2 Nights Munar Kerala
inc Flights, Transfer, Meals and Travel Insurance
All These Just For **£499** per person

Colombo
£225 +TAX

Bombay, Delhi
£210 +TAX

Chennai
£210 +TAX

Sri Lanka
five star hotel 7 nights
including flights & transfer
from **£510**

Canada
from
£99

Special Family Fare to Colombo buy 3 get 1 free

Your Magical Gateway Into The World

020 8429 5200

mobile Ragu: 07771 788 598